டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
R011-113
1233

# கல்விக்கடல்

## ஓர் உயர்தர மாதாந்திரப் பத்திரிகை

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை."—திருக்குறள்.

| மலர் 1 | பிரஜோற்பத்தி ௵ ஆவணி ௴ | இதழ் 1 |
|---|---|---|

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை—பத்திராதிபர் .... | 1 |
| 2. | நி[illegible] அற்புதம்—திரு. கே. ஜி. சேஷ ஐயா, பீ.எ., பீ.எல். .... | 3 |
| 3. | அணியிலக்கணம்—திரு. கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரி, பீ.ஏ., பீ.எல். .... | 5 |
| 4. | இயற்கைப் பொருள் பாடம்—திரு. எம். எஸ். சபேச அய்யர், எம்.ஏ., எல்.டி. .... | 7 |
| 5. | சர்க்கரை—திரு. கே. ஸி. வீரராகவய்யர், எம்.ஏ., எல்.டி. .... | 9 |
| 6. | சிந்தாமணி (நாவல்)—திரு. ஸி. வி. நாராயண அய்யர், எம்.ஏ., எல்.டி. .... | 12 |
| 7. | கவிச்சக்ரவர்த்திகள்—திரு. சோமசுந்தர தேசிகர் .... | 16 |
| 8 | கிராம சீர்திருத்தம்—திரு. எம். எஸ் சுந்தர சர்மா, பீ.ஏ. .... | 17 |
| 9. | ஓர் சிறு கதை—திரு. ஸி. வி. நாராயணய்யர், எம்.ஏ., எல்.டி. .... | 20 |
| 10. | கங்கை வேடனும் காளத்தி வேடனும்—திரு. ஆர். பி. ஸேது பிள்ளை, பீ.ஏ., பீ.எல். .... | 23 |
| 11. | சேக்கிழாரும் திருவள்ளுவரும்—திரு. ஸி. கே. சுப்பிரமணிய முதலியார், பீ.ஏ. .... | 24 |
| 12 | கொடுப்பு—திரு பீ. என். அப்பு சாமி அய்யர், பீ.ஏ., பீ.எல். .... | 26 |
| 13. | கைத்தொழில் அபிவிருத்தியின் அவசியம்—திரு. வி. ராமச்சந்திரன், எம்.ஏ. .... | 28 |
| 14. | ஆசிரியர் பக்கம்—திரு. எஸ். ஜெகந்நாதன் .... | 31 |
| 15. | சாரண இயக்கம் .... | 34 |
| 16. | சிறுவர்க்கான பக்கம்—திரு. வி. எஸ். நடராஜன், எல்.எம்.பி. .... | 36 |
| 17. | இந்திய வர்த்தமானம் .... | 39 |

எம். வெங்கட்டராம சாஸ்திரி, எம்.ஏ., எல்.டி., பத்திராதிபர்.

ஈ. எஸ். வரதராஜய்யர், பீ.ஏ.,
பண்டிதா அரங்கராமானுஜம் பிள்ளை,
எல். ஸி. கணபதி சாஸ்திரி, பீ.ஏ. பீ.எல்.,
} உப பத்திராதிபர்கள்.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

# கல்விக் கடல்

## சந்தா விபரம்.

வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடுகளுக்கு | ரூ. | 3 | 8 | 0 |
| வெளி நாடுகளுக்கு | ,, | 4 | 8 | 0 |
| தனிப் பிரதி | ,, | 0 | 5 | 0 |

1. சந்தாதாரராய்ச் சேருகிறவர் முழுப்பெயரை எழுதி அனுப்பவேண்டும்.

2. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. பத்திரிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் மூன்றணுவோடு (மணியார்டர் கமிஷன் ரூ. 10-க்கு அணு இரண்டாகையால்) அந்த கமிஷன் இரண்டணு, வி. பி. தபால் சார்ஜ் எல்லாம் சேர்த்து ரூ. 3-14-0 கட்டி [illegible]யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினல் ரூ. 3-10-0 மட்டுமே யாகும். ஆகையால் முன்பணம் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வது நலம்.

### இதை கவனிக்கவும்

4. இடம் மாறும் சந்தாதார்கள் அடுத்த இதழ் தங்களுக்கு புது விலாசத்துக்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீசுடன் ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த இதழ் பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொருப்பாளியல்ல.

5. பதில் விரும்பும் சந்தாதார்கள் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

6. நமது பத்திரிகையின் வெளியூர் ஏஜண்டுகள், சந்தாதார்கள், விளம்பரதாரர்கள், விபரம் தெரிவோர்கள் எல்லாம் "கல்விக்கடல்" மானேஜர் விலாசத்திற்கே தந்தி, மணியார்டர்கள், தபால்கள் அனுப்பவேண்டும்.

7. வியாசந்தருவோர், நன்கொடையளிப்போர்கள் யாவரும், ஆசிரியர் "கல்விக் கடல்," திருவல்லிக்கேணி, மதருஸ் என்ற விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | ஒரு மாதம் | | | 3 மாதம் | | | 6 மாதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முழுப் பக்கத்திற்கு | 15 | 0 | 0 | 40 | 0 | 0 | 75 | 0 | 0 |
| அரைப் பக்கத்திற்கு | 8 | 0 | 0 | 20 | 0 | 0 | 37 | 0 | 0 |
| கால் பக்கத்திற்கு | 4 | 0 | 0 | 10 | 0 | 0 | 18 | 0 | 0 |

நீண்டகாலம் விளம்பரம் செய்ய விரும்புவோர்கள் நேரே மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். கவர் பக்கங்களுக்குத் தனி விகிதம். எல்லா விளம்பரதாரருக்கும் வௌச்சர் பிரதி இனமாக அனுப்பப்படும். விளம்பரப்பணம முன்னதாக அனுப்பினல்தான் விளம்பரம் போடக்கூடும்.

மானேஜர்,
கல்விக்கடல் ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

III

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



H. E. லார்ட் வெல்லிங்டன்.




மகாத்மா காந்தி.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41
R011-113
1233

# கல்விக்கடல்

## உயர்தர மாதாந்திரப் பத்திரிகை

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.—திருக்குறள்.

மலர் 1 | பிரஜோற்பத்தி ௵ ஆவணி ௴ | இதழ் 1

உ
சிவமயம்
ஷண்முகன் துணை

# முன்னுரை

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிடைத் தவழ்ந்த பேதை"

யாகிய நம் செந்தமிழ் மகள் தன்னை நன்கு போற்றி வளர்த்த தமிழ் நாட்டு முடி மன்னர் மூவரும் ஆட்சியின்றி மறைந்தனராகப் பல குறுநில மன்னர்களாலும் ஜமீன்தார்களாலும் பெரிதும் ஆதரிக்கப் பெற்றுப் பின்னர் பெரிய மடாதிபதிகளின் பாதுகாப்பில் சில்லாண்டுகளிருந்தனள். ஆனால் சுமார் முக்கால் நூற்றாண்டாக ஆதரித்துப் போற்றுவாரின்றி பல ராஜீய மாறுதல்களாலும், தமிழ் மக்களின் புறக்கணிப்பாலும் தனது செல்வ நிலைமை குன்றி ஒளி மழுங்குவாளாயினள். தற்போது தேசீயப் புதுவுணர்ச்சியாலும், சென்னைச் சருவ கலா சங்கத்தார் தமிழை ஒரு கட்டாயப் பாடமாக ஏற்படுத்திய காரணத்தாலும் இப்பொழுது தமிழ் கற்பதில் நம் மக்களிடத்துச் சிறிது ஊக்கம் பிறந்துள்ளது. இந்த ஊக்கத்துக் கனுகூலமாகவே, பல தமிழ் மக்களும், பல பொதுக் கூட்டங்களிலும், கழகங்களிலும், தமிழ்ப் பாஷை மூலமாகவே பல நவீன பாடங்களையும் போதிக்கவேண்டு மென்று வற்புறுத்துவதைக் காண்கிறோம்.

நிற்க, தமிழின் பெருமை, தமிழின் அருமை, அதன் பழமை யென்று விரிவாகப் பேசியமர்வதால் மட்டும் தமிழ்ப் பாஷையை விருத்தி செய்ய முடியாது. தமிழ் நூல்களில் மிகவும் தலைசிறந்தொளிர்பவை சங்கச்சான்றோரா லியற்றப்பெற்ற பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களும் அவற்றை யொட்டியோ சிறிது பின்னிட்டோ வெழுந்த பஞ்சகாவியங்களும் என்பதில் எட்டுணையுமையமில்லை. ஆனால் பல்லாயிரவாண்டுகட்கு முன்னிருந்த நாகரீகம், வர்த்தகம், அரசியல், ஜனசமுதாயப் பழக்க வழக்கங்கள் என்றவிவைகளும் பிறவும், படிக்கப் படிக்க இன்பத்தையும், நல்லறிவையும் தருமெனினும் அந்தப் பழமையையும் பெருமையையும் கொண்டாடுகின்ற அந்த அளவிலே நின்றுவிடாமல், கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப நவீன முறைகளுக்குத் தக்கவாறு நம் செந்தமிழைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேனாட்டார் தமது பெருமை, பழமைகளில் நோக்கமில்லாதவரல்லர். என்றாலும் தற்காலத்திற் பல துறைகளிலும் நன்கு மேம்பட்டுள்ள பல புலவர்களையும், கிரந்த கர்த்தாக்களையும் அவர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். தமது முன்னோர்கள் சிறந்த கவி

களாகவோ, வசன கிரந்தகர்த்தாக்களாகவோ இருந்தால் அவர்களைக் காட்டிலும் தாங்கள் சிறந்தவர்களாக மதிக்கப்பெறவேண்டுமென்று ழைத்துப் பல கவிகளையும் வசன நூல்களையும் இயற்றுவர். அவ்வாறு சிறந்து விளங்குபவர் களை நவீன மேனாட்டுலகம் பெரிதும் பாராட்டு கின்றது.

நம் செந்தமிழோ இயல், இசை, நாடகம் என்று மூன்று வகைப்பட்டது என்பர். ஆனால் இயற்றமிழில் பல பனுவல்களும், இசைத் தமிழின் சிலவும், இப்பொழுது கிடைக்கின்றன வே யன்றி, நாடகத் தமிழென்று பழைய நூல் களாக ஒன்றும் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் கூறு மிடத்து, எரணம், உருவம், யோகம், இசை, கணக்கிரதம், சாலம், தாரணம் முதலிய பலதிறப்பட்ட நூல்கள் முற்காலத் துத் தமிழகத் திருந்தன வெனவும், அவை யாவும் வாரிவாய்ப்பட்டொழிந்தன வென்றும் கூறியுள்ளார்கள். இது உண்மையா யிருக்கக் கூடும். என்றாலும் நாடகத் தமிழ் நூல்கள் இல்லாமை ஒரு பெருங்குறைவே.

ஆதலின் நம் தமிழ் நாட்டின் பழமை பெருமைகளை நன்கு மனத் திருத்துவதுடன் எங்தெந்த வகையில் தமிழ்ப் பாஷையை இன்னும் சிறப்புறச் செய்யக்கூடும் என்பதை யும் கருதவேண்டும். சங்கச் சான்றோர்கள் எப்பொழுதும் இயற்கைப் பொருள்களி னிடையே யிருந்தும், இயற்கைக் காட்சிகளைக் கூர்ந்து நோக்கியும் வந்தார்களாதலின் அவர் களது கவிகள் யாவும் பெரிதும் உள்ளன வற்றை உள்ளபடி யுரைக்கும் பெரிய சாதனங் களாக விருந்தன. அதுபற்றித்தான் அவர்க ளது கவிகள் பெரிதும் பாராட்டப்படுகின்றன. ஆனால் அதுபோன்றே நாமும் இப்பொழுது இயற்றக்கூடாதோ வெனின் கூடும். அதற் கேற்ற ஆர்வமும், போதிய முயற்சியும், நிறைந்த கல்வியும், நேரிய வுணர்வும் வேண்டும். தாய்ப் பாஷையாகிய தமிழைப் பல்வகையா னும் உயர்த்தவேண்டுமென்ற ஒரே நோக்கத் துடன் உழைக்கவேண்டும்.

இவ்வாறுழைக்க வெண்ணுவோர் மேற் கொள்ளவேண்டிய கொள்கைகள் யாவை? தமிழ்ப் பாஷையில் ஏராளமான செய்யுள் நூல்கள் உள. இப்பொழுது தமிழில் குறைவா யிருப்பன வசன நடை நூல்களே. அவை களை யியற்ற முன் வரவேண்டுவது தமிழ் மக்களின் முதற்கடமை. நாவல்களோ, தொடர் கதைகளோ எழுத வேண்டிய முறை யுணராது, ஒரே விதமான கதைப்போக்கே பல நாவல்களிலும் விரவு மாறு எழுதப் பெறும் புத்தகங்களைப் பெரிதும் மதிப்பதற்கில்லை. மேனாட்டார் நாவல்களை யெண்பது வகை களாகப் பிரித்திருப்பதுடன், அவைகள் இன்ன இன்ன வகையில் ஆக்கப்பெற வேண்டுமென்றிலக்கணம் வகுத்துள்ளார் கள். அம்மாதிரியான வரையறைகளைக் கொண்டு நாமும் எழுதத் தொடங்கவேண்டும்.

இதுவன்றி, ஷேக்ஸ்பியர், காளிதாஸன் முதலியவர்கள் எழுதிய நாடகங்களைப் போன்று தமிழில் ஒரு நாடகம் கூடவில்லையே! திருவாளர் சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய மனோன்மணியம் ஒன்றும், சூரிய நாராயண சாஸ்திரியார் இயற்றிய மானவிஜயம் என்ற நூலுந்தான் செய்யுள் வடிவமான நாடகங் களாக வுள்ளன. என்னே பரிதாபம்! சமீபத் தில் சுமார் 40 வருடங்களுக்குள்ளாகப் பங் காளி பாஷையில் தோன்றியுள்ள, நாடகங் களும், நாவல்களும், அபரிமிதமாயிருக்க, நம் தமிழ்ப் பாஷையில் மட்டும் இல்லாததற்குக் காரணமென்ன? தமிழ் மக்களின் ஊக்கக் குறைவும், பாஷாபிமானக் குறைவுமே யாகும். இந்தக் குறைவினை யகற்றி நவீன முறையில் சிறந்த நாடகங்களை யியற்றத் தமிழ் மக்கள் முன்வரவேண்டும். தற்காலத்தில் பல தமிழ் நாடகங்களை யியற்றி அளித்துள்ள திருவாளர் ப. சம்பந்த முதலியார்க்குத் தமிழுலகம் பெரி தும் கடப்பட்டிருக்கிறது. முடிவாக, தமிழ்ப் பாஷை மூலம் நவீன சாஸ்திரங்கள் பலவும் போதிக்கப்படவேண்டு மென்பார் கொள் கையை நோக்குவோம். இது சிறந்த கொள் கையே. ஆனால் பூதபௌதிக சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், மனோதத்துவ நூல், மக் கள் நூல், விலங்கு நூல் என்ற பல நவீன சாஸ்திர சம்பந்தமான பல பதங்களுக்குத் தமிழில் நேர்பதம் கிடையா. ஆதலின் அவை களைத் தமிழிற் போதிப்பதெங்ஙனம் என்பர் ஒரு சாரார். ஆனால் உண்மையாக நாம் முயன்று வருவோமானால் அந்த சாஸ்திரங்களில் காணப் படும் அநேக பதங்களுக்குச் சரியான தமிழ்ப் பதங்களோ வடமொழிப் பதங்களோ அமைப்பது கடினமன்று. தமிழில் நேர்பதம்

கிடையாவிடின் வடமொழியிலிருந்து கொள்வதிற் குற்றமொன்றில்லை. அவ்வாறும் கொள்ள இயலாவிடின், இங்கிலீஷ்ப் பதத்தையோ, ஜர்மனி பதத்தையோ அவைகள் அந்த வந்தப் பாஷையிலுள்ளவாறே தமிழில் ஏற்றுக்கொள்வதால் உண்டாகும் இழுக்கொன்றுமில்லை. ஆங்கிலபாஷையின் ஆக்கத்தைப் பற்றி யெழுத வந்த டிரென்ச் என்ற ஓராசிரியர் நூற்றுக்கு 60 அல்லது 65 அம்சம் லத்தின், கிரீக் முதலிய மொழிகளும், எஞ்சிய சிறு பகுதியே இங்கிலீஷ்மொழிகளும், இங்கிலீஷ் பாஷையில் உள்ளன என்று கூறியிருக்கின்றார். இதனால் ஆங்கில பாஷை யடைந்த இழிவென்னை? ஒன்றுமில்லை. எனவே, ஒவ்வொருவரும் தன்னாலியன்ற வரையில் நவீன முறையில் பிற பாஷைகளிற் கண்ட அரும் பெரும் பொருள்களை மொழி பெயர்த் தெழுத வேண்டும்.

மேற்கூறிய இந்தக் கருத்துக்களை யடிப்படையாகக் கொண்டு, பிறபாஷை நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும், பலதிறப்பட்ட நவீன சாஸ்திரங்களைத் தமிழ் மூலமாகவே போதிப்பதற் கனுகூலமாகவும், பிறபாஷைகளிற் காணப்படும் அரிய சொற்களுக்குத் தமிழ்ப் பிரதி பதங்கள் அமைத்துத் தருவது, எமது 'கல்விக் கடலின்' ஒரு நோக்கமாகும். தொடர் கதைகளும், நாவல்களும், சரித்திரப் பிரசித்தி பெற்ற வீரர்களின் வரலாறுகளும், பூதபௌதிக நூல், ரஸாயன நூல், கூட்டுறவு நூல், முதலான பல நூல்களிலும் அவற்றைப் பற்றி வரைந்துள்ள கட்டுரைகளிலும் கண்ட அரிய நுட்பங்களும் அவ்வப்பொழுது தமிழ் மக்களறியும் பொருட்டெழுதிப் பிரசுரிப்பதிதன் முக்கிய நோக்கமாகும். தக்க பெரியாரும், அறிஞர்களும், இந்த எமது "பத்திரிகையை" ஏற்ற பெற்றியாதரித்து வளர்ப்பார்களென நம்புகிறோம்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல்வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."—பாரதி.

பத்திராசிரியர்.

---

# நீரின் அற்புதம்

(திரு. K. G. சேஷையர், B.A., B.L.
மாஜிஜட்ஜ், ஹைகோர்ட்டு, திருவநந்தபுரம்).

## I

"வான்நின்று உலகம்வழங்கி வருதலால்
தான்அமிர்தம் என்றுஉணரல் பாற்று."

இக்குறள் திருவள்ளுவர் கூறியது. மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலால், அம்மழை உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மை உடையது என்பது இக்குறளின் பொருள். அறம், பொருள், இன்பங்கள் நடத்தி உலகு செவ்வனே வாழ்தற்கு மழை இன்றியமையாதது ஆகும் என்ற உண்மையை இது நன்குவிளக்குகின்றது. மழையின் பெருமை அவ்வளவு என்றால் அதற்கு அடிப்படையாகும் தண்ணீரின் ஸ்திதி, அமைப்பு முதலியன அறிந்துகொள்ள நாம் முயலுதல் சிறப்பாகும். இப்பெரும் பூகோளத்தின் முக்கால் பாகம் நீர்ப்பெருக்கு என்பது நம் பள்ளிச் சிறுவரும் அறிவார்கள். நமது தேகத்திலும் வேறு பிராணிகளின் உடல்களிலும் ஏறக்குறைய முக்கூறு ஜலாம்சமென்று நிருணயிக்கப்பட்டிருக்கிறது. ஜலமில்லாவிடில் உயிருமில்லை என்பது ஓர் பேருறுதி. சந்திர மண்டலத்தில் சீவராசி இல்லாததற்கு ஓர் முக்கிய காரணம் அங்கு ஜலமில்லாமையே. சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களுள் ஒன்று செவ்வாய். அதில் ஜீவராசிகள் உண்டென்று சிலரும், இல்லையென்று சிலரும் வெகுகாலமாய் வாதாடி வருகிறார்கள். அவ்விருதிறத்தாரும் ஆராய்ந்து நிச்சயிக்க முயன்றுவரும் முக்கிய விஷயங்களில் ஒன்று அக்கிரகத்தில் ஜலமுளதா என்பதே. நீரால் நாம் பெறும் நலன்களைப் பொறுதியோடு ஆராய்ந்தறிவோமானால், திருவள்ளுவர் போன்ற பேர் அறிஞர்கள் வானைப் பரிந்து பேசியிருப்பது சற்றும் மிகையில்லை

யென்று நாம் தேர்வோம். இலேசாய்ப் பெறக்கூடிய பொருள்களில் என்ன விசேஷமிருக்கக் கூடும் என்ற தவறெண்ணம் நம்மவருள் பரவியிருப்பது நாமெல்லோரும் அறிவோம். அபூர்வப் பொருள்களினிடத்தே விந்தைக்கு இடமுளதென்று நினைத்தல் பிசகேயாம். நீங்கள் பாஸ்டேயுர் என்ற பேரறிவாளரின் அருமருந்தன்ன சரித்திரத்தைக் கேட்டிருக்கலாம். அவர் "பிரபஞ்சத்தில் உள்ளனயாவையும் விசித்திரமே" (Tout est miracle) என்று ஓர் தருணத்தில் கூறினர். அது மெய்யுரையே. நீர் எங்கும் உளது; யாவரும் அறிந்துள்ள ஓர் பொருள். அப்படியிருந்தும், உலகில் வழங்கும் அதி யதிசயமான பொருள்களில் ஒன்று தண்ணீர். அதன் நீர்மையை இங்கு சற்று ஆராய்வோம்.

ஜலம் பஞ்ச பூதங்களுள் ஒன்று என்ற கொள்கை தொன்றுதொட்டுளது. இவ்வைந்து பூதங்கள் நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்பன. ஐம்பூதக்கொள்கை நம் நாட்டில் மாத்திரமன்று. இதர நாடுகளிலும் இக்கொள்கை முற்காலத்தில் பரவியிருந்தது. ஆங்கில மொழியில் பூதம் என்ற மொழிக்கு ப்ரதிபதம் எலேமேண்டு (element) என்பர். மேல் நாட்டார் நிலம், நீர், தீ, காற்று என்ற நான்கை மாத்திரம் பூர்வத்தில் தனிப்பொருள்களாகக் (elements) கருதி வந்தனரென்று புத்தகங்களில் கூறுவதுண்டு. ஆனால் நம்முன்னோர் விசும்பு அல்லது விண் என்று கூறி வந்ததை மேல் நாட்டார் ஈதர் எனக் கூறுவர். அது திருஷ்டப் பொருள் அல்லது காணத்தகுந்த பொருளன்றாகையால் அதைச் சாதாரண வழக்கில் விட்டு வந்தார்கள். பூதம் என்ற பதத்தின் நுட்பமான பொருளை விளக்குவது இலகுவன்று. ஆயினும் ஒருவாறு அது குறிக்கும் பொருளைச் சொல்ல முயல்வேன். ஐம்பூதங்களே ஏனைய பொருள்களுக்கெல்லாம் மூல சாதனங்கள் என்றும், அவைகள் வேறு பதார்த்தங்களால் ஆக்கப்பெற்றன அல்லவென்றும், ஐவகைப் பூத பேதத்தினால் மற்றுள்ள பொருள்கள் உண்டாகின்றன வென்றும் முன்னுளில் நினைத்து வந்தார்கள். தாயுமானவர் ''ஐவகையெனும் பூதமாதியை வகுத்து அதனுள் சராசர பேதமான யாவையும் வகுத்து'' என்று பாடி யிருப்பதை நோக்க இது விளங்கும். ஆனால், இவற்றுள் சில பொருள் அல்லது பதார்த்தமேயல்லவென்றும், பதார்த்தங்களானவை தாமும் தனிப் பொருள்களல்லவென்றும் நாம் இப்பொழுது அறிவோம். இவ்விஷயத்தைச் சற்று ஆராய்ந்து பின்னர் ஜலத்தின் அற்புதங்களை ஒருவாறு விரிவாய் அறிந்து கொள்ள முயல்வோம்.

## II

ஐம்பூதங்களுள் முதன்மையாகக் கூறப்படும் நிலம், பூமி அல்லது மண்ணைக் குறிப்பதோடு, பூமியிலுள்ள உறுதியான கடினப் பொருள்களெல்லாவற்றையும் குறித்தற்கு உபயோகப்படுத்தப்பெற்ற ஓர் சங்கேதச் சொல். நாம் அறிவதுபோலவே நம் முன்னோர்களும், பூமியின் தரையின்கீழ்ப் பல்வேறு கடின பதார்த்தங்கள் கிடக்கின்றன என்று அறிந்திருந்தார்கள். ஆனல் பொன், வெள்ளி, இரும்புபோன்ற கடின பதார்த்தங்களெல்லாம் நிலத்திலிருந்து உற்பத்தியானவை யென்று அவர் கருதினர்போலும். தரைமீது விளங்கும் சராசரப் பொருள்களும் அவ்வாறே உண்டாயின என்பதே அவர் கருத்து என்று தோன்றுகிறது. கடினப் பொருள்கள் யாவும், நிலத்தின் ஜன்யப் பொருள்கள் அல்லது நிலத்தினின்று பிறந்தவைகள். நிலமேஇவற்றிற்கெல்லாம்கருப்பாசயம், நிலந்தானும் வேறுபதார்த்தங்களால் அமைக்கப் பெறாத ஓர் தனிப்பொருள் அல்லது மூலப்பொருள் (element) என்னும் துணிவுகளை இக்காலத்தில் ஒருவரும் ஒப்பார்கள். இதை விரிக்க நமக்கு இப்பொழுது அவகாசமில்லை. ஆனல் ஒரு விஷயம் நாம் உறுதியாக உட்கொள்ளவேண்டும். அது நிலமும் நிலத்தின்மீது நாம் காண்கிற புல், செடி, மர முதலியவைகளும் புழு முதல் மனிதன் வரையுள்ள எல்லா ஜீவவர்க்கங்களும், பல்வேறு மூலபதார்த்தங்களின் முயக்கத்தால் ஏற்பட்ட பொருள்கள் என்பதே.

இப்பால், தீயின் தன்மையைச் சிறிது ஆராய்வோம். தீ ஒருபொருளேயன்று. அது கேவலம் ஒரு பிரகாசம் அல்லது ஒளி. அடுப்பில் கரியை யிட்டு நெருப்பு மூட்டினல், கரி பளபள வென்று மின்னுகிறது. மின்னெறியும் கரி, கரியேயன்றி வேறல்ல. ஓர் இரும்புக் கோலை நெருப்பிலிட்டு, அதைப் பழுக்கச் சுட்டால், அது பிரகாசிக்கின்றது. இக்காலத்தில்

வீடுகளில் மின்சாரவிளக்கு ஏற்றி வருகிறோம். அந்த விளக்கைச் சற்று கவனியுங்கள். மின்சார சக்தியை (electricity) அவ்விளக்குக்குள் புகச்செய்கிறோம். அப்பொழுது, அதன் கண்ணாடி மூடிக்குள் வைத்திருக்கும் நூல் போன்ற ஓர் சாதனம் பிரகாசம் பெற்று ஒளி வீடுகின்றது. ஆனால் அது யாதேனும் ஒரு பதார்த்தத்தைக் கக்குகின்றதா? மின்சாரம் அத் திரிக்குச் சூடு மூட்டுவதால், அத்திரி ஒளி விடுகின்றது. திரி எரியவுமில்லை. எரிதற்குக் காற்றுவேண்டும். மின்சார விளக்கிலோ காற்றில்லை. இவற்றால் அறியக்கிடப்பது, ஒரு பொருளோடு தக்கவாறு சூடு பொருந்த, அப்பொருள் ஒளி வீசும், என்னும் உண்மையே. தீயை மூட்டினால், தீச்சிகை கிளம்புகின்றதே; இத்தீச்சிகை அல்லது சுடர்க்கொழுந்து, உயிர்ப் பொருள் போல ஆடி அலைந்து குதித்துச்சலிக்கின்றதே; சுடர்பொருளன்றோ? என்று நீங்கள் கேட்கலாம், சுடரும்பொருளன்று! உலகிலுள்ள பொருள்களெல்லாம். நிலம் (solid) நீர் (liquid) கால் (gas) என்னும் மூன்றவஸ்தைகளில் யாதேனும் ஓர் அவஸ்தை பெற்றனவாகும். இங்கு நிலம் (solid) என்றது கடினவஸ்தையைக் குறிக்கின்றது. அதற்கு உதாரணம், கல், இரும்பு போன்ற கடினபதார்த்தங்கள். நீர் (liquid) என்னும் சொல் இங்கு திரவபதார்த்தங்கட்கு அறிகுறியாக உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணம் தண்ணீர், எண்ணெய், பால் போன்ற ஒழுகு பதார்த்தங்கள், கால் (gas) என்பதன்பொருள் காற்றுவாயு, நீராவி போன்ற பொருள்களின் ஸ்திதியை உணர்த்தக் கால் என்னும் பதத்தை அறிகுறியாக வழங்குதல் தகும். கால் அவஸ்தை பெற்ற பொருளொன்று, அதிகச் சூடடைந்து எரிவதால் தீநாக்கு, தீச்சிகை, சுவாலை, சுடர் என்ற பல சொற்களால் குறிக்கப்படும் தோற்றம் உண்டாகின்றது. சுவாலை விட்டு எரியும் காற்றுக்கள் பதார்த்தங்களானாலும், சுவாலை ஓர் பதார்த்த மன்று.

இனி, காற்றின் நிலையைச் சிறிது ஆராய்வோம்.

(தொடரும்.)

# அணியிலக்கணம்

(திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, B.A., B.L.

ஜில்லா நீதிபதி, கடப்பை.)

## I.—ஆனந்தம் அழகு அலங்காரம்.

வில்லியம் ப்ளேக் என்ற ஆங்கிலக்கவி ஒவ்வொரு ஜன சமூகமும் எவ்வளவு அதன் காவ்யமும் ஓவியமும் சில்பமும் விளங்குகின்றனவோ அவ்வளவுதான் பெருமையடையும் நீடித்துவாழும் என்று கூறி இருக்கிறார். ஆனால் இக்காலத்தில் மேனாட்டிலும் நம்முடைய நாட்டிலும் உள்ள தேசாபிமானிகள் இந்தத் தத்வத்தை உணர்ந்தாரில்லை. யந்திரங்களைப் புதிது புதிதாகப்படைத்துப் பண்டங்களை அளவுமீறி உண்டாக்கிப் பிறநாட்டின்செல்வங்களைக் கைப்பற்றிச் செங்கோலைப் பிறநாடுகள்மீது செலுத்தினால் பெருமையென்று எண்ணி எண்ணப்படியே முயற்சி செய்கின்றார்கள். ஆனால் அவைகளால் வரும் சிறப்பு, அரிதேயாயினும் பெரிதல்ல. அவைகளில் பெரும்பாலும் இன்பவாழ்க்கைக்குத் தேவையற்றவைகளாகவும் நோய்களுக்கு மூல காரணங்களாகவும் பணத்தைப் பாழாக அடிக்க வழிகளாகவும் இருக்கின்றன. கைத்தொழில்களும், கைத்தொழிற் சாலைகளும், நாகரீகச் சிறப்புக்கு இன்றியமையாத சாதனங்களானாலும், அவைகள் விவசாயத்திற்கு இடையூறாகவும், கிராம வாஸத்திற்கு விரோதியாகவும், நேர்ந்ததால் அவைகளால் விளங்கும் நாகரீகம் இழிவான நாகரீகமாகவே கருதவேண்டும். இதுவுந் தவிர அவைகள் அலங்காரப் பொக்கிஷமான கலைகளுக்கும் பரமனை விளக்கும் மத உணர்ச்சிகளுக்கும் தடையாக ஏற்பட்டால் அவைகளை அசுரர்கள் முறைகளாகவே எண்ணவேண்டும்.

இது தவிர நாகரீக அம்சங்களில் முக்கியமானது அளவில்லாத வேலையா, வேலையற்றுக் கவலைகளிலிருந்து ஓய்வடைந்து ஆனந்தமாகவும், விசித்திரமாகவும், சாதுர்யமாகவும் அழகு வாய்ந்த வஸ்துக்களை நிர்மாணம் செய்வதா என்று ஆராய்ந்தால் அவ்வாராய்ச்சியின் வாயி

லாகப் பின் சொன்னதே பெரிது என்று நன்கு விளங்கும். இக்காலத்தில் வரம்பு மீறி வேலை செய்வதும் ஓய்வு அடைந்த காலத்தில் உண்டியின் சுவையிலோ பானங்களிலோ அங்குமிங்கு மோடுவதிலோ ஸினிமா முதலிய கண்காட்சிகளிலோ ஈடுபட்டிருப்பதுமே வழக்கமாக இருக்கிறது. இவைகளால் உண்மையான ஆனந்தமோ, நாகரீகச் சிறப்போ உண்டோ என்றால் கிடையவே கிடையாது. வார முடிவு நாளில் கூட்டங் கூட்டமாகக் கடற்கரைகளுக்கோ மலைகளுக்கோ போய் மறு வாரத் துடக்கத்தில் திரும்பி ஓடிவந்தால் மட்டும் உயர்வா ? மனிதன் பெருமையானது கருவிகளால் வேலைகளை முடித்துக்கொண்டு ஓய்வு நேரத்தை வளர்த்து அந்த ஓய்வு நேரத்தை இயற்கை அழகுகளை அனுபவிப்பதிலும் புதிதாக அழகிய வஸ்துக்களை நிர்மாணம் பண்ணுவதிலுமே அடங்கி இருக்கிறது. சிற்பம், சித்திரம், சங்கீதம், சாகித்தியம் முதலிய கலைகளில் எவ்வளவுக்கு எவ்வளவு பழக்கமும் தேர்ச்சியும் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவுதான் நாட்டுக்கு நாகரீகப் பெருமை. ஈசன் குணங்களை நன்கறிந்து மனத்தை அவரிடம் நாட்டி மனம் தன்மயமாகும் ஆனந்தம் எப்பொழுது கிடைக்குமோ அப்பொழுது தான் மனிதன் ஒப்புயர்வற்ற சிறப்பினை யடைகிறான்.

விலங்குகளைக் காட்டிலும் மனிதனுக்கு எதனால் பெருமை ? அறிவினாலே. அறிவு எந்த முயற்சிகளில் மிகவும் செழித்து விளங்குகிறது ? இயற்கை சாஸ்திரம் (Science), கலைஞானம் (Art), மத உணர்ச்சி (Religion) இவைகளாலே. இயற்கை சாஸ்திரம் இயற்கைப் பொருள்களின் தன்மையையும் சக்திகளையும் விளக்கிக் காட்டும்; கலைஞானம் இயற்கைப் பொருள்களின் அழகையும் மனிதனுடைய அழகையும் விளக்கிக்காட்டும்; மதம் இயற்கையின் நுட்பமான சுரூபத்தையும் மனிதனுடைய ஆத்ம சுரூபத்தையும் பரமனுடைய சுரூபத்தையும் விளக்கிக் காட்டும். கலைஞானமானது தத்துவ சாஸ்திரத்துக்கும் ஆத்ம சாஸ்திரத்துக்கும் நடுநிலையில் இருக்கப் பெற்றது. இயற்கையையும் விடாமல், ஈசனையும் விடாமல், இரண்டிலும் ஈடுபட்டு இரண்டையும் ஒன்று படுத்தும் முறையே அதனுடைய முறை. இந்த மேன்மையான கடமையைக் கலைஞானம் தன்னுடையதாகக் கைக்கொண்டிருப்பதை அறிந்தாலல்லது அணியிலக்கணத்தின் உள்ளுண்மை விளங்கவே விளங்காது.

அலங்கார சாஸ்திரத்தின் நுட்பமான உண்மைகளை அறியவேண்டுமேயானால் இது என்ன அலங்காரம் அது என்ன அலங்காரம் என்று அறிந்தால் மட்டும் போராது. அலங்காரம் என்பது சொல் அலங்காரம் மட்டும் அல்ல. அதை நன்றாக அறிய வேண்டுமானால் எல்லாக் கலைகளுடைய பொதுவான சுரூபத்தை அறியவேணும். அழகுண்டு என்பது சொற்சுவை மட்டுமல்ல. எல்லாக் கலைகளிலும் அதன் சோபை பிரகாசிக்கின்றது. ஆனந்தம் அழகு என்ற தத்துவங்களைத் தெரிந்து கொள்ளாமல் அலங்காரத்தின் தத்துவத்தை அறிய முடியாது. ஆசையை அடக்கி ப்ரேமையைப் பெருக்கிக் களிக்கும் சுபாவங்களுக்கே ஆனந்தத்தின் அமுதம் உள்ளே ஊறி அழகின் உணர்ச்சி ஏற்படும். பர்ட்ராண்ட் ரஸ்ஸல் என்ற மகா புத்திசாலியான தத்துவதர்சி தன்னுடைய ஜன சமூகச் சீர்திருத்தத் தத்துவங்கள் (Principles of Social Reconstruction) என்ற நூலில் இந்த மர்மங்களை விமரிசையாகக் காட்டி இருக்கிறார். சுயநலமுறை (Possessive activities) வேறு, சுகக்கருவி நிர்மாண முறை (Creative activities) வேறு, விவசாயம், கைத்தொழில், வியாபாரம், யுத்தம், அரசியல் முதலியவை சுயநல முறைகளே. அவைகளால் மனிதனுடைய ஆத்ம சுரூபம் நன்கு வெளியாவதில்லை. ஆனால் கல்வி, கலைஞானம், ஈச்வர வழிபாடு முதலிய முறைகளில் ஆத்ம சுரூபம் ஜ்வலிக்கின்றது. ரவீந்திரநாத் டாகூர் தன்னுடைய சாதனம் என்ற நூலில் மனிதன் இயற்கைப் பொருளுக்கு அடிமை அல்ல. ஆனால் அன்பும் ஆனந்தமுமே வடிவாக உள்ளவன் என்று எழுதி இருக்கிறார்; ஒரு சாண் வயிறு நம்மைப் படாது பாடுபடுத்தி ஆட்டிவைத்தாலும் அன்பும், அழகும், ஆனந்தமும் தான் ஆத்ம சுரூபமாக இருக்கின்றன.

# ஆரம்பப் பாடசாலைகளில் இயற்கைப் பாடம்

(திரு. M. S. சபேசய்யர், M.A., L.T.

Christian College, Madras.)

ஆரம்பப் பாடசாலைகளில் இயற்கைப்பாட போதனையை உபாத்தியாயர்கள் கவனித்தல் அவசியமென்று மேலதிகாரிகள் வற்புறுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சிறிய தோட்டம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் சொல்லி வருகிறார்கள். பிள்ளைகளுக்குப் பக்கத்திலுள்ள செடிகளைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை யென்று அனுபவத்தில் எளிதாகக் கண்டுகொள்ளலாம். மேலதிகாரிகளின் நிர்ப்பந்தத்திற்குப் பயந்து சில கனிகளையும், விதைகளையும், கிளிஞ்சல்களையும் காட்சியறையில் வைத்திருக்கிறார்களென்று நினைக்க வேண்டியதாகிறது. இயற்கைப் பாடத்தில் ஏன் உபாத்தியாயர்களுக்கு உத்ஸாக மேற்படுவதில்லை யென்பதை அறிய வேண்டுவதவசியம். உபாத்தியாயர்களுள் அநேகர் ஆரம்பப் படிப்பின் திட்டத்தில் (Syllabus) அநேக பாடங்கள் சேர்ப்பது சரியல்லவென்று நினைக்கிறார்கள். "படித்தல்," "எழுதுதல்," "எண்ணுதல்" ஆகிய மூன்று பயிற்சிகளே ஆரம்பப்படிப்பில் கவனிக்கப்பட வேண்டுமென்பது அவர் கொள்கை. வேறு பாடங்களைச் சேர்ப்பதால் உள்ளதற்கே குறைவுண்டாவதாகக் கருதுகிறார்கள். சிலர் வேறு பாடங்களைக் கையாளுவதால் இலாபமொன்றுமில்லையென்றும், பிள்ளைகளுக்கு வீண் தொந்தரவுண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள்: மற்றும் சிலர் திட்டத்திலடங்கிய பாடங்களுக்கே போதுமான நேரமில்லை யென்றும், தினசரி அட்டவணையில் (Time-Table) இயற்கைப்பாடத்திற்கென்றே மணியை ஒதுக்கிவைப்பது அசாத்தியமென்றும் சொல்லுகிறார்கள். உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் வழங்கப்படும் தினசரி அட்டவணை மாமூலை (Time-Table) ஆரம்பப் பள்ளிகளிலும் விடாமல் பாராட்டி வருவது உசிதமல்ல. இந்தப் பாடத்திற்குப் பின் இந்தப் பாடமென்று தொடர்ந்து செல்வது வயதான பையன்களுக்குச் சாத்தியமாகும். குழந்தைகளிருக்கிற ஆரம்பப் பள்ளிகளில் உபாத்தியாயர் அவர்களின் குணத்தையும் மனதையும் ஒட்டியே போதனை செய்ய வேண்டும். எவ்வாறாயினும் மாமூல்படியே நடத்துவோமென்று சொல்லுவது குழந்தைகளைப் பாராட்டாது கடனைக் கழித்ததாகும். திட்டமும் மாமூலும் அவசியமே. ஆயினும் காலம், சமயம் இவைகளுக்கேற்றபடி திட்டத்தை அப்போதைக் கப்போது மாற்றிக் கொள்வது தவறல்ல. உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்குச் சரியான வழியில் போதனை செய்யவேண்டின் அவர்களுடைய சுபாவத்தை நன்கறிந்து அதற்கேற்றபடி போதனை முறையையும் மாமூலையும் மாற்றிக்கொள்ள வேண்டும். அவசியமானவையெனக் கருதப்படும் பாடங்களுக்கு விரோதமாக இயற்கைப் பாடத்தைப் போதிக்கவேண்டுமென்று எவரும் சொல்லமாட்டார்கள். இயற்கைப் பாடப்பயிற்சியால் அநேக சௌகரியங்களிருக்கிறதெனக் காட்டக்கூடும்.

முதலாக இயற்கைப்பாடத்தினால் குழந்தைகளுக்கு உற்று நோக்கும (observation) சக்தி ஏற்படக்கூடும். சிறு வயதிலிருந்தே சுற்றிலுமுள்ள பலபொருள்களைக் கவனிக்கவும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பகுத்தறியவும் உற்று நோக்குதல் அவசியம். சாலையில் நடந்து செல்லும் பிரயாணிகளிற் சிலரே காணப்படும் மரங்கள், மிருகங்கள், கட்டிடங்கள், வாய்க்கால்கள் முதலியவற்றைப் பிரயாசையில்லாமலே கவனித்துக் கொண்டு கேட்பவர்களுக்குத் தகுந்த பதிலளிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். கூறிய அடையாளங்களோடு கூடிய மாட்டை எதிரே கண்டீர்களாவென்று ஒரு விவசாயி கேட்கும்போது உற்றுநோக்கும் பயிற்சி யில்லாதவர்கள் பதிலொன்றும் சொல்லமுடியாமல் திண்டாடுகிறார்கள். இயற்கைப் பாட போதனையில் இலைகளையும், பூச்சிகளையும், மரங்களையும் அடிக்கடி கவனிக்க வேண்டியிருப்பதால், குழந்தைகளுக்கு உற்று நோக்கும் வழக்கம் ஏற்படுகிறது. இப்பழக்கமில்லாதவர்களுக்குப் புத்தியை விசாலப்படுத்திக்கொள்வது கடினமாகும்.

இரண்டாவதாக இயற்கைப்பாட மூலமாய்க் குழந்தைப் போதனுமுறையில் முக்கியமாகக் கருதப்படும் "விளையாட்டு முறையும்" (Play) அனுசரிக்கக்கூடும். விளையாட்டினுலேயே பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்பது தற்காலபோதனுமுறை. தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீரை வார்க்கவும் களைகளைப் பிடுங்கவும், பழுத்த இலைகளைக் கிள்ளவும், பூச்சிகளைத் துரத்தவும் குழந்தைகள் தயாராயிருப்பார்கள். விளையாடும்போதே குழந்தைகள் செடிகளின் வகை, உயரம், வளர்ச்சி முதலியவற்றை நேராகக் கண்டு கொள்கிருர்கள். அதிகப் பிரயாசையில்லாமலே உபாத்தியாயர்கள் ஆச்சரியிக்கும்படி விஷயங்களைக் கற்றுக் கொள்ளுகிருர்கள்.

மேலும் குழந்தைகளுக்கு ஒரே விஷயத்தில் அதிக நேரம் மனதைச் செலுத்த முடியாது. பூக்களிலுள்ள தேனை நாடும் பூச்சிகள் சஞ்சரிப்பதுபோல் குழந்தைகளும் பல விஷயங்களில் மனதைச் செலுத்துவனவாகும். உபாத்தியாயர் வாயாலும் பிரம்பாலும் மிரட்டி கவனிக்கச் செய்வது தவறு. காற்றுப் புழுக்கமில்லாத சிறிய இருட்டறையில் ஐம்பது குழந்தைகளை வெகுநேரம் அடைத்து வைப்பது மிகவும் தப்பான காரியம். அப்போதைக்கப்போது வெளியேசென்று நல்லகாற்றைக் உட்கொள்ளும்படி செய்யவேண்டியது மிகவும் அவசியம். இயற்கைப் பாடம் சரியாய்ப் பயில்விப்பதற்குக் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வெளியே கண்டிப்பாய்ப் போக வேண்டும். ஆகையால் இச்சமயங்களில் புத்தியை அபிவிருத்திசெய்துகொள்வதுடன், தேக சௌக்கியத்தையும் கவனித்துக் கொள்ளக் கூடும் :

கடைசியாக, ஒரு காரணமுண்டு, இயற்கைப் பாட விஷயங்களை மற்றப் பாடங்களோடும் அநேகமாய் அனுசரித்து (Correlation)க் கற்பிக்கலாம். உதாரணமாகத், தோட்டத்திற் கண்ட செடிகளைப்பற்றி சிறிய வியாசம் குழந்தைகளை எழுதச் சொல்லலாம். எழுதின வியாசத்தைப் படிக்கச் சொல்லலாம். படிக்கும் பயிற்சி நியமிக்கப்பட்ட வாசகபுத்தகத்தைக் கொண்டுதான் ஏற்பட வேண்டுமென்பதில்லை. தோட்டத்திற் பொறுக்கின இலைகளைப் படமாக வரையச் சொல்லலாம். தாங்கள் கொண்டுவந்த பொருள்களைப்பற்றி எழுதுவதும் படம் வரைவதும் குழந்தைகளுக்கு ஆனந்தத்தையும் உத்ஸாகத்தையும் உண்டுபண்ணும்: குழந்தைகள் விஷமம் செய்யாதிருக்க வேண்டுமென்று உபாத்தியாயர் ஏக்கமடைய வேண்டாம். செடிகளின் உயரத்தை அளப்பதாலும் இலைகளை எண்ணுவதாலும் கணக்குப் பயிற்சியுண்டாகுமாறு இயற்கைப் பாடத்தை உபயோகிக்கலாம். தோட்டத்தின் பாத்தியின் நீளம் அகலம் முதலியவற்றை அளக்கச் செய்து மதிப்புப் போடும் பழக்கமும் உண்டுபண்ணலாம். வாடின செடிகளுக்குத்தண்ணீர் வார்த்து அவைகள் நிமிர்ந்து நிற்பதைக் கண்டு சந்தோஷமடையும் குழந்தைகள் உயிர்ப் பிராணிகளினிடம் அன்பு பாராட்டி வருவார்கள்.

இத்தகைய சௌகரியங்களிருப்பதாலேயே இயற்கைப் பாடத்தை ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கவனத்துடன் பயில்விக்கவேண்டும். தனிப்பாடமாகவே நடத்தவேண்டுமென்பதல்ல. போதனு முறையில் தேர்ச்சியடைந்த ஆசிரியர்கள் சமய மேற்பட்டபோதெல்லாம் தகுந்தபடி இயற்கைப் பாடம் போன்ற சாஸ்திரங்களைச் சரிவரக் கற்பிப்பார்கள். இயற்கைப் பாடம் கற்பிக்கும் வழியும் சரியான வழியாயிருத்தல் வேண்டும். இயற்கைப் பாடப் புத்தகத்தைக் குழந்தையினிடம் கொடுத்து வாசகத்தைப் படிப்பது போல் படிக்கச் செய்வதால் ஒரு குணமும் ஏற்படாது. செடிகளின் பெயரையும் அங்கங்களின் பெயரையும் கருப்புப் பலகையில் எழுதி பையன்களைக் குறித்துக் கொள்ளச் செய்வதும் சரியல்ல. குழந்தைகளை வெளியே தோட்டத்திற்குப் பல தடவை கூட்டிக்கொண்டு போகவேண்டும். அங்கே குழந்தைகள் பல கேள்விகள் கேட்கக் கூடும். இந்தச் செடி படர்வானேன்? இந்த மரம் உயர்ந்திருப்பானேன்? பூ ஒரு செடியில் சிகப்பாயும் மற்றொரு வகைச் செடியில் மஞ்சளாயுமிருப்பானேன்? எனக் குழந்தைகள் கேட்பார்கள். கோபங்கொள்ளாது சமாதானங் கூடிய வரையில் சொல்லி முக்கிய விஷயங்களைக் கவனிக்கும்படியாக ஏற்பாடு செய்தல் நலம். ஜெர்மனி தேசத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடப் போதனு முறை வெகுவாய் மாறிவிட்டது. குழந்தைகளை அடிக்கடி வெளியே கூட்டிக்கொண்டு போய் நடந்து செல்லும்

போது காணப்படும் பொருள்களைக் கவனிக்கும்படி செய்கிறார்கள். பள்ளிக்கூட அறையில் சொல்லிக் கொடுப்பதுதான் பாடமென்ற கொள்கை அடியோடு போய்விட்டது. ஜெர்மனி தேசத்தின் பல இடங்களுக்கும் குழந்தைகளை உபாத்தியாயர்கள் அழைத்துப் போய்ச் செழிப்பான செடிகளைப் பார்த்து அதிலிருந்தும் குழந்தைகளுக்கு உத்ஸாகமுண்டாகச் செய்கிறார்கள். வெளியே செல்லக்கூடாத காலங்களில் மாத்திரம் பொருள்களை எதிரே காண்பித்து இயற்கைப் பாடத்தைப் பள்ளிக்கூடத்திலேயே நடத்தலாம். அநாவசியமான பெரிய வார்த்தைகளை நீக்கிவிட்டுக் குழந்தைகள் கேட்டுள்ள வார்த்தைகளையே உபயோகித்தல் வேண்டும். சமீபத்திலுள்ள காட்டிற்குக் குழந்தைகள் போவதாய்க் கொள்வோம். மரங்களெவை, கொடி செடிகள் எவை, புற்கள் எவை, கிழங்குகள் எவை என்பதை அறியச் செய்யலாம். ஒரு காலத்தில் எந்தச் செடி பூவுடனிருக்கிறது, எந்தச் செடி கனியுடனிருக்கிறது, எந்தச் செடி இலை உதிர்த்திருக்கிறது என்பதைக் கவனிக்கச் சொல்லலாம். கனிகள் வெடிப்பதையும் சிதறுவதையும் கண்டறியலாம். மரங்களில் தங்கியிருக்கும் பக்ஷிகளையும் அவைகளின் பாட்டையும் கவனிக்கச் செய்யலாம். குழந்தைகளின் குணத்தை யறிந்துள்ள ஆசிரியர்கள் குழந்தைகளின் புத்தி விசாலமடைவதற்கு இயற்கைப் பாடத்தை மேலானதாகப் பாராட்டி வருகிறார்கள். குழந்தைப் பருவத்திலேயே சரியான பழக்கமில்லாவிடின், உற்று நோக்கும் திறமை குன்றி புத்தி கூர்மை யடைவது அரிதாகின்றது. ஆரம்பப் படிப்பு நிலையிலேயே அஸ்திவாரம் சரியாயேற்பட வேண்டும். குழந்தைகளைச் சரியான வழியில் பயிற்சி செய்வதால் ஆசிரியர்கள் தம் மனதைத் திருப்தி செய்து கொள்வதுடன் தேசத்திற்கும் நன்மை செய்தவராவார்கள்.

# இந்தியாவின் ஆலைப் பொருள்கள்

## 1. சர்க்கரை.

(திரு. K. C. வீரராகவ அய்யர், M.A., L.T.
Government College, Kumbakonam.)

பூவுலகில் புலப்படும் பொருள்கள் எல்லாவற்றையும் பரிச்சேதம் செய்து ரசாயனிகள் "அவைகளெல்லாம் மொத்தம் 92 மூலப் பொருள்களால் அமைக்கப்பட்டவை" என்று கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்த தொண்ணூற்றிரண்டு மூலப் பொருள்களில் தொண்ணூறை இதுவரையும் ரசாயனிகள் கைகளில் சிக்கி உள. பிற இரண்டும் இனிமேலே ரசாயனிகள் வேட்டையில் பிடிபட வேண்டும்.

மேற் சொல்லிய தொண்ணூறு மூலப் பொருள்களில் பதினொன்று வாயு நிலையில் உள; இரண்டு திரவநிலையின் உள; ஏனைய எழுபத்தியேழும் கட்டி நிலையில் உள. இவைகளில் மிகச் சிலவே பெரும்பாலான பொருள்களுக்குக் காரணமாயுள. அமெரிக்கா ரசாயனி ஒருவர் ஒரு கணக்கு கொடுத்திருக்கிறார். பூமியிலும் சமுத்திரங்களிலும் ஆகாயத்திலும் உள்ள பொருள்களில் மிகுபாகமாகவுள்ள மூலப்பொருள்கள் பின்வருவனவாகும் :—

| | | |
|---|---|---|
| 1. | (பிராணவாயு) ஆக்ஸிஜன் | 47· |
| 2. | சிலிக்கன் .... | 28· |
| 3. | அலுமினியம் .... | 8· |
| 4. | இரும்பு .... | 4·5 |
| 5. | கால்சியம் .... | 3·5 |
| 6. | மாக்னிஷியம் .... | 2·0 |
| 7. | சோடியம் .... | 2·5 |
| 8. | பொட்டாசியம் .... | 2·5 |
| | | 98·0 |

நூற்றுக்கு 98 பாகம் 8 மூலப்பொருள்களாலேயே அமையப்பட்டுள்ளது; பாக்கி இரண்டு பாகத்துக்கு மற்றைய 82 மூலப்பொருள்கள் காரணமாகின்றன.

மேலும், மனிதர்களின் உடலிலுள்ள பொருள்களையெல்லாம் ஆராய்ந்ததில் பின் வரும் கணக்கு தொகுக்கப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 1. | பிராணவாயு | .... | 65· |
| 2. | (கரி) கார்பன் | .... | 18· |
| 3. | (ஜலவாயு) ஹைதரஜன் | .. | 10· |
| 4. | நைட்ரஜன் | .... | 3· |
| 5. | கால்சியம் | .... | 1·5 |
| 6. | பாஸ்பரஸ் | .... | 1·0 |
| | | | 98·5 |

மனித உடலில் நூற்றுக்கு 98·5 பாகம் 6 மூலப் பொருள்களாலேயே அமைந்துளது; மற்ற 1·5 பாகத்தில், பொட்டாசியம், கந்தகம், சோடியம், குளோரின், மக்னீசியம், இரும்பு முதலியன உள.

இப்படிப் பலதிறத்த மூலப்பொருள்களாலாகிய எண்ணிறந்த பொருள்களில், மனிதர்களுக்கு உபயோகமுள்ள பல இயற்கையில் கிடைக்கின்றன; வேறுபல இயந்திரங்கள் நிரம்பிய ஆலைகளில் செயற்கைப் பொருள்களாய் மாறி வருகின்றன. இயற்கைப் பொருள்கள் இருவகையன. ஒன்று பூமியை உழுது பயிர் செய்வதால் கிடைப்பன; அதாவது நெல், கோதுமை, கரும்பு, பருத்தி போல்வன. மற்றொன்று, பூமியில் சுரங்கங்களிலும் மலைகளிலும் அகப்படுவனவாகும்; அதாவது பொன், வெள்ளி, உப்பு போல்வன. முன் சொல்லியவைகள் விளைபொருள்கள் எனவும், பின் சொல்லியவைகள் கனிப்பொருள்கள் எனவும் வழங்கப்படுகின்றன. இப்படிக் கிடைக்கும் விளைபொருள்களையும் கனிப்பொருள்களையும் அறிவுள்ள மனிதர்கள் பல அரிய வெகு உபயோகமான செயற்கைப்பொருள்களாய் மாற்றித் தருகின்றனர். அப்படி இந்தியாவில் செய்யப்படும் செயற்கைப் பொருள்களில் சிலவற்றை இங்கு ஆராய்வோம்.

ஹிந்துக்களில், அதிதிகளுக்கு முதலாவது சர்க்கரையையோ அல்லது அது கலந்த பரமான்னத்தையோ பரிமாறுவது வழக்கம். அதுபோலவே இங்கும் முதலாவது சர்க்கரையைப்பற்றிச் சில வரைவோம்.

சர்க்கரை பல ரகங்களாகக் கடையில் விற்கப்படுகின்றது. பனை வெல்லம் அல்லது கருப்பட்டி, சாதாரண வெல்லம், சர்க்கரை அல்லது ஜீனி, அல்லது பஞ்சதாரை, கற்கண்டு, குளுக்கோஸ் என்று பலவிதங்கள் உள. ஆயினும் அவை எல்லாம் கேவலம் கார்பன் (கரியமிலவாயு), ஹைதரஜன் (ஜலவாயு), ஆக்ஸிஜன் (பிராணவாயு) ஆகிய மூன்று மூலப்பொருள்களாலேயே ஆயின்வாகும். அவை மேலும் தாவரவர்க்கங்களிலிருந்துதான் நமக்குக் கிடைக்கின்றன.

முதல் முதலில் இந்தியாவிலேதான் சர்க்கரை உண்டாயதென்றும், பிறகு எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அரபிதேச வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்து அதை ஐரோப்பா வாசிகளுக்கு எடுத்துப் போயினர்களென்றும், பின்னர் 14,15-ம் நூற்றாண்டுகளில் அரபியர்களிடம் கற்ற ஸ்பெயின் தேச வாசிகள் அதைக் காரிபியன் கடல் தீவுகளில் குடியேறி, சாகுபடி செய்து சர்க்கரைத் தொழிலைப் பெருக்கினரென்றும், அதற்குப் பின்னர் ஆங்கிலேயரும், அமரிக்கரும், டச்சுக்காரரும் ஒருவருடன் ஒருவர் போட்டிபோட்டுச் சர்க்கரைத்தொழிலை அபிவிருத்திசெய்து அங்கங்கு கிடைக்கும் அதிகச் சர்க்கரையை இந்திய நாட்டிலே அபரிமிதமாக இறக்குமதி செய்துவிட்டார்களென்றும் சொல்லுகிறார்கள். அதாவது சர்க்கரை முதலில் உற்பத்தியான தேசத்திலே சர்க்கரைப் பஞ்சம் வரும்படியாக ஏற்பட்டு விட்டது. அதுவும் நவீனகால விந்தையே!

இந்தியாவில் சர்க்கரை பெரும்பாலும் கரும்பிலிருந்தே செய்யப்படுகிறது. நமது சென்னை ராஜதானியில் கொஞ்சமாகத்தான் கரும்பு பயிராகிறது. வடஇந்தியாவில் ஜாஸ்தியாகப் பயிராகிறது. கரும்புப்பயிரை நவீன சாஸ்திர முறையில் விர்த்தி செய்வதற்காகச் சர்க்கார் தனிச்சர்க்கரைப்பரிசோதகரை நியமித்திருக்கிறார்கள். அவர் கோயம்புத்தூரில் பரிசீலனம் செய்து அப்பொழுதைக்கப்பொழுது தாம் கண்டறிந்த புது விஷயங்களை அறிவித்து வருகிறார். மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்களில் தென்னைகளிலிருந்து சாறு இறக்கிச் சுத்தம் செய்து வெல்லமாகக் காச்சுவதில் பல திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும்

கோதாவரி ஜில்லாவிலும் தென் ஆற்காடு ஜில்லாவிலும் கரும்புப் பயிர் பரிசீலனை செய்யப்பட்டுப் பல திருத்தங்களை அடைந்திருக்கிறது. இத்திருத்தங்களினால் பயிரிடுகிறவர்களுக்கு வருஷத்தில் சராசரி 40 லக்ஷம் ரூபாய் நஷ்டம் நிவர்த்தியாகி இருக்கிறது என்று தெரிகிறது. கரும்பில் 100க்கு 11 முதல் 15 பாகம்தான் சர்க்கரை. பாக்கி பாகம் சக்கைதான்.

இப்படிக் கிடைக்கும் வெல்லத்தை மறுபடியும் ஜலத்தில் கரைத்து, அதை இலும்புக் கரிப்பொடியில் வடிகட்டி இறுத்து மறுபடியும் அச்சாற்றைக் காய்ச்சினால் வெள்ளை, மணல் போன்ற படிகங்களாய்ச் சர்க்கரை அல்லது ஜீனி கிடைக்கும். இந்த முறை திருநெல்வேலி ஜில்லாவில் ஆள்வார் திருநகரியிலும் தச்ச நல்லூரிலும், தென் ஆற்காடு ஜில்லாவில் நெல்லிக்குப்பத்திலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரி வட இந்தியாவிலும் சில இருக்கின்றன. இவைகளினின்று கிடைக்கும் சர்க்கரை இந்திய மக்களுக்குப் போதுமானதாக வில்லை. ஒரு வருஷத்திற்குச் சராசரி ஒரு லக்ஷம் டன் சர்க்கரைதான் தயாராகிறது. உபயோகத்திற்கு வேண்டிய பாக்கி சர்க்கரை, ஜாவா, மொரிஷியஸ், ஜெர்மனி முதலிய இடங்களிலிருந்து வருகிறது; அது வருஷத்துக்குச் சராசரி 6 லக்ஷம் டன் சர்க்கரை ஆகிறது; பதினைந்து கோடி ரூபாய் விலையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. நமது தேவைக்கு வேண்டிய சர்க்கரை முழுவதையும் நாமே செய்து கொள்வது அரிது போலும்!

ஐரோப்பாவில் மத்திய தேசங்களில் சர்க்கரைவள்ளிக்கிழங்குபோன்ற பீட் கிழங்கு வெகுவாய்ப் பயிராகிறது. 5 மாதப் பயிர் தான். வெட்டி வெகுகாலம் வைத்திருந்தால் கெட்டுப்போகிறது. ஆகையால் உடனே சாற்றைப் பிழிந்து சர்க்கரையாகக் காய்ச்சி விடுகிறார்கள். முதலில் பீட் கிழங்கில் 100-க்கு 5 பாகம் தான் சர்க்கரையிருந்தது. சென்ற நூற்றாண்டின் பின் பாகத்தில், பூமத்திய ரேகைக்குச் சமீபத்திலுள்ள தேசங்கள் ஜெர்மானியர்களுக்கு அகப்படாமையினாலே, அவர்களுடைய ரசாயன அறிஞர்கள் பலர் அவர்கள் நாட்டு பீட் கிழங்கின் சர்க்கரைப் பாகத்தை அதிகரிக்கப் பலசோதனைகள் செய்தார்கள். நல்ல தகுந்த உரம்போட்டும், புஷ்டியாயுள்ள கிழங்குகளைப் பயிரிட்டும், கிழங்குக்கு வரும் நோய்களைத் தவிர்த்தும் பல வழிகளில் கிழங்கின் சர்க்கரைப் பாகத்தை ஐந்திலிருந்து பத்தொன்பது வரை கொண்டுவந்து விட்டனர். பயிர் செய்யும் விஸ்தீரணமும் அதிகரித்தது. ஆகவே சர்க்கரை ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய தேசங்களில் நன்று தயாராகிறது. சென்ற ஐரோப்பிய யுத்தத்திற்கப்புறம், இங்கிலாண்டு தேசத்தினரும் தமது நாட்டில் பீட் கிழங்கைச் சர்க்கார் உதவியுடன் சாகுபடி செய்து வருகிறார்கள். ருஷியாவின் ஐந்து வருஷத்திட்டத்தின் பலனாக, சமீபத்தில் நமது சென்னை நகர் துறைமுகத்தில் கூட ருஷிய சர்க்கரை 50,000 மூட்டை அவிழ்க்காமல் கிடந்தன என்று கூறப்பட்டது.

நபர் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்குப் பின் வரும் அட்டவணையிற் கண்டபடி சர்க்கரை செலவாகின்றது:—

| | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா | .... | 90 | ராத்தல். |
| இங்கிலாண்டு | .... | 90 | ,, |
| பிரான்ஸ் | .... | 45 | ,, |
| ஜெர்மனி | .... | 45 | ,, |
| இந்தியா | .... | 27 | ,, |
| பால்கன் நாடுகள் | .... | 10 | ,, |

ஆப்பிரிக்கா—கொஞ்சம்தான்.

சர்க்கரையை ஜாஸ்தியாக உபயோகித்தால் மதுபானம் குறைகிறதென்கிறார்கள். மேல் நாடுகளில் பாட்டிமார்கள் குமரிகளுக்கு ஒரு புத்திமதி சொல்வார்களாம். "ஒரு புருஷன் தனது காபிக்குச் சர்க்கரையைக் குறைத்து உபயோகித்தால், அவன் ஏகதேசமான குடிகாரனென்று அறிந்துகொள்" என்பதே. கள்ளுக்கடைக்கு விரோதமாம் வெல்லக்கடை. சென்ற யுத்த காலத்தில் நாட்டில் வசித்தவர்கள் தங்கள் சர்க்கரைத் தேவையைக் குறைத்துக்கொண்டு போரில் சண்டை செய்யும் வீரர்களுக்குச் சர்க்கரையை அனுப்பினார்களாம். சர்க்கரையைச் சாப்பிடுவதால் நல்ல சக்தி கிடைக்கிறது. எஞ்சின்களுக்கு எப்படி நிலக்கரியும் எண்ணெயுமோ, அப்படியே நமக்குச் சர்க்கரை. ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகிவிடும். குழந்தைகள் கூடச் சர்க்கரையை அதிகமாக விரும்புவது, தங்களுடைய குதூகலத்தை மிகப்படுத்துவதற்கு வேண்டிய சக்தியைப் பெறுவதற்கே.

(தொடரும்.)

# "சிந்தாமணி"

(திரு. ஸி. வி. நாராயண ஐயர், M.A., L.T.
Presidency College, Madras.)

## அத்தியாயம் 1.—வாய் வேதாந்தம்.

"ஏது! ஏது! உங்களுக்குத்தெரியாமலே உங்களுக்குள்ளே ஆனந்தம் பொங்குகிறாப் போலிருக்கிறது. கையிலிருப்பதோ தாயுமான வர் பாடல். முகத்தைப் பார்த்தாலோ அடக்க முடியாத சிரிப்பு. அவ்வளவு சந்தோஷம் தரக்கூடிய விஷயத்தைப்பற்றித் தாயுமானவரா எழுதியிருக்கப் போகிறார்? அப்படியே தானிருந்தாலும் அந்த வார்த்தையை நானும் கேட்கக் கூடாதா?" என்று விளையாட்டாக மீனாக்ஷியம்மாள் தன் கணவனாரைப் பார்த்துக் கேட்டாள். அவர் அப்பொழுது புத்தகத்தை மூடி அவள் முகத்தைப் பார்த்து "வந்து விட்டாயா வம்பளக்க? வீட்டு வேலையெல்லாம் முடிந்து விட்டது போலிருக்கிறது. பொழுது போகவில்லை. என்ன செய்வாய்? என்னைக் கொஞ்சம் கிண்டி விட்டு வேடிக்கை பார்க்கலாம் என்று நினைத்து இங்கே வந்து விட்டாய். சரி உனக்கென்ன வேண்டும் சொல்" என்றார்.

மீனாக்ஷியம்மாள் :—"எனக்கு வேண்டுவன வற்றையெல்லாம் சொன்னால் நீங்களா தரப் போகிறீர்கள்? ஏதோ கொஞ்சம் நேரம் இங்கே வந்திருக்கலாம் என்றெண்ணி வந்தால் உங்களுக்கிவ்வளவு கஷ்டமா? தாயுமானவர் எழுதியிருக்கிற பாடலைப் படிக்கும்பொழுது பிரமாதமான உல்லாசம் முகத்திலே கண்டது. நான் வந்தவுடன் இவ்வளவு சங்கடம் வந்து விட்டது—அப்படித்தானே" என்று சொன்னதும் ஜானகிராமய்யர் அவளைப் பார்த்து, "இல்லை, இல்லை. தாயுமானவர் சொல்லியிருக்கும் வார்த்தைகள் உண்மையானவை யென்று தெரியப்படுத்துவதற்காகவே நீ வந்தது போல எனக்குத் தோன்றிற்று. ஆகையினாலே தான் கொஞ்சம் சிரிப்பும் வந்தது" என்றார்.

மீனா:—"அதென்ன! அவர் என்ன சொல்லியிருக்கிறார்."

ஜானகிரா:—அவர் தேவியை ஸ்தோத்ரம் செய்து எட்டுப் பாடல்கள் எழுதியிருக்கிறார். 'மலை வளர்காதலிப்பெண்ணுமையே' என்று அம்பிகையை அழைத்து ஒவ்வொரு பாடலையும் முடித்திருக்கிறார். அவற்றுக்குள்ளே இரண்டாவது பாடல் ஒரு தினுசு. சிற்றின்ப விஷயங்களால் ஒருவனுடைய மனம் சிதைந்து போகாமலிருக்கும்படித் தேவியை வேண்டிக் கொள்கிறார். அதை வாசித்தபோது நான் என்னைப்பற்றியே ஒரு நிமிஷம் நினைத்துப் பார்த்துக்கொண்டேன். நமக்கும் வயதாகிற தல்லவா. இனிமேல் சிறிது சிறிதாக நல்ல வழிக்குப்போகவேண்டிய காரியங்களைத் தேட வேண்டாமா? ஆசை முதலியவற்றை யெல்லாம் குறைக்க வேண்டாமா என்றெண்ணினேன். அந்தத் தருணத்திலேதான் நீ உன் உடம்பைப் பலவிதமாக அழகு செய்துகொண்டு இங்கே வந்தாய். அவ்வளவுதான்.

மீனா:—ஓஹோ! நான் வந்ததும் வேதாந்த மெல்லாம் ஓட்டமாய் ஓடிப்போய் விட்டதோ. அடடா! இதென்ன உபத்திரவம். இந்தப் பாவத்திலிருந்து நான் எப்படித் தப்புவேன். அது கிடக்கட்டும். அந்தப் பெரியவர் என்ன சொல்கிறார் பார்ப்போம். அதை வாசியுங்கள். ஜானகிராமய்யர் அவள் வேண்டுகோளுக் கிணங்கிப் பின்வரும் பாடலை வாசிக்கத் தொடங்கி அதைப் பூர்த்தி செய்யாமல் மத்தியிலே நிறுத்தி விட்டார்.

"தெட்டிலே வலிய மடமாதர் வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறு பிறை நுதற் கீற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்தப்
பொடியிலே யடியிலே மேல்...."

இப்படி வாசித்து நிறுத்தினதும் மீனாக்ஷியம்மாள் "ஏன் நிறுத்தி விட்டீர்கள். அதை முற்றிலும் படிக்கக்கூடாதா" எனவே ஜானகிராமய்யர், "அவ்வளவே போதாதா. இவ்வளவு

விஷயங்களிலே மனது சென்றாலே எப்பேர்ப் பட்ட நிஷ்டையும் கலைந்து விடுமே. விசுவாமித்திரர் மேனகையிடம் பட்ட பாடு லோகப் பிரசித்தமல்லவா'' என்றார்.

மீனாக்ஷியம்மாள்:—''பேஷ்! பேஷ்! இதுவா உங்கள் வேதாந்தம்: வெகு நன்றாயிருக்கிறது. வேதாந்தப் புத்தகங்களிலே எங்கே யெல்லாம் இந்த மாதிரிச் சிற்றின்பப் பாடல்களைப் புகுத்தி யிருக்கிறார்களோ அவற்றையெல்லாம் குறித்து வைத்து அந்தப் பாடல்களை யெல்லாம் படித்து உங்களுக்குள்ளேயே ஆனந்தித்துக் கொள்ளுவதா உங்களுடைய தொழில்! இப்பொழுதுதானே உண்மை விளங்குகிறது. இது நல்ல ஞான மார்க்கம் தான்'' என்று சொல்லிச் சிரித்தாள். அதைக்கேட்ட ஜானகிராமய்யர் ''இது என்ன கஷ்டம், நான் ஒன்று சொன்னால் நீ வேறொன்று சொல்கிறாய். நான் உனக்குப் படித்துக் காண்பித்தது சிற்றின்பப் பாடலில்லை. வர்ணனை கொஞ்சம் விஸ்தாரமாயிருப்பதால் நீ அப்படி நினைத்து விட்டாய். இப்படி வர்ணிப்பது தாயுமானவருடைய வழக்கம். அதுதான் அவருக்கும் பட்டினத்துப் பிள்ளையாருக்கும் உள்ள வித்தியாசம். இந்த இரண்டு ஞானிகளும் காமத்தை வென்றார்கள். ஆனால் இருவர்களும் காமத்துடன் யுத்தம் செய்யும் முறைகள் வேறுவேறு. ஒருவர் இராம யுத்தம் நடத்துவார் மற்றொருவர் கிருஷ்ண யுத்தம் நடத்துவார்.''

மீனாக்ஷி: தாங்கள் சொன்னது எனக்கு விளங்கவில்லை. இராம யுத்தம் கிருஷ்ண யுத்தம் என்கிறீர்களே. அவையென்ன வென்று தெரியவில்லை.

ஜானகிரா: ''இராமர் பகைவனுக்கு எதிராகவே நின்று வெகு கொடுமையாக யுத்தம் செய்து கொன்றுவிடுவார். கிருஷ்ணரோ அப்படியல்ல. பகைவனிடம் சினேகம் செய்வதுபோலப் பாசாங்கு செய்து அவனை வரவேற்று அவன் ஏமாந்திருக்கும் தருணம் பார்த்துத் திடீரென்று கொன்றுவிடுவார். அதுபோலவே பட்டினத்துப்பிள்ளையார் பாடல்களிலேயும் தாயுமானவர் பாடல்களிலேயும் பார்க்கலாம். சிற்றின்பத்தைப் பழிக்கும் பொழுது பட்டினத்துப்பிள்ளையார் வாய் கூசாமல் இழிவாய்ப் பேசிப் படிப்பவனுக்கு வைராக்கியம் தோன்றும்படி எழுதுவார். அதுதான் இராமயுத்தம் என்றேன். தாயுமானவரோ அப்படியல்ல. அவர் பாடலைப் படிக்கும்பொழுது படிப்பவன் மனம் சிற்றின்பத்திலே கொஞ்சம் செல்லத் தொடங்கும். அதற்கேற்ற வர்ணனைகளும் அப்பாடல்களிலே காணும். ஆனால் தருண மறிந்து தாயுமானவர் பேரின்ப வர்ணனையை அந்தப் பாடலிலேயே புகுத்தி விடுவார். அப்போது வாசிப்பவன் விழிப்புற்றுச் சிற்றின்பத்திலும் பேரின்பம் பன் மடங்கு ஆனந்தம் விளைவிக்கத் தக்க தென்று உணர்வுற்று மனம் களிப்பான். இதுதான் கிருஷ்ணயுத்தம் என்றேன். பார் இந்தப் பாடலைப் படித்து நிறுத்தி விட்டேனல்லவா. பின்வரும் மொழிகளைக் கவனி.

''நெட்டிலே அலையாமல் அறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலை பெற்ற வன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்திலேயுனிருதாள்
மட்டிலே மனது செல நினதருளு மருள்வையோ
வடமருவு தேவையரசே''.

என்று பாடி யிருக்கிறாரல்லவா? இந்த அடிகளைப் படிக்கும்பொழுது முன்னே சொன்ன மொழிகளெல்லாம் அடியோடு மறந்து விடுகின்றன வல்லவா. அதுதான் ''தாயுமான வருடைய நாகரீக மான முறை'' என்றார்.

பின்பு இந்த மாதிரியாகவே பற்பல பாடல்களின் கருத்துக்களை யெல்லால் மீனாக்ஷியம்மாளுக்கு விளங்கும்படி சொல்லிக்கொடுத்தார். அவற்றை யெல்லாம் மீனாக்ஷியம்மாளும் கவனமாய்க் கேட்க ஆரம்பித்து இடையிடையே அவரை அநேககேள்விகளும் கேட்டாள். இது இவ்விருவர்கள் வழக்கம். விளையாட்டுத் தனமாகப் பேசுவதிலே மீனாக்ஷியம்மாளுக்கு மிகவும் பிரியம். ஆபினும் அவள் நல்ல குணமுள்ளவளானதினாலும் தெய்வ நம்பிக்கை யுடையவளானதினாலும் ஜானகிராமய்யர் சொல்லும் ஞான இரகசியங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆவலுள்ளவள். அவரும் அபாரமாய்ப் படித்த ஒரு வித்வான். அந்த ஊரிலே வக்கீல் உத்யோகம் செய்து வந்தவர். அநியாயமான கேசுகளைப் பெற்றுக்கொள்வது கட்சிகளைத் துரோகம் செய்வது முதலிய தீக்குணங்கள் அவரிடத்துக் காணப்படமாட்டா. இந்தச் சம்பாஷணை நடந்த காலத்தில் அவருக்கு வயது நாற்பத்தைந்திருக்கும். மீனாக்ஷியம்மாளுக்கும் நாற்பதாவது வயது நெருங்கிக்கொண்டே

யிருந்தது. அவர்களுக்கு பதினொன்று வயது நிறைந்த ஒரு புதல்வனை யன்றி வேறு மக்கள் பிறக்க வில்லை. அந்த வாலிபன் அப்பொழுது பள்ளிக்கூடத்திலே படித்துக் கொண்டிருந்தான். ஒரே ஒரு புதல்வனாயிருந்தானாதலால் அவனை எவ்வளவு செல்வமாகத் தாய் தந்தையர்கள் வளர்த்து வந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? அவனுக்கு ஏதாவது ஒரு சிறு நோய் காணப்பட்டாலும் அவர்கள் மனமுருகி முகம் வாடித் தவிப்பார்கள். ஆனால் பையனோ வெகு புத்திசாலி. தான் படுந்துயரத்தைக் கூடின மட்டும் வெளியிலே காண்பிக்காமலிருப்பான். தன் தகப்பனார் பேசும் வேதாந்தப் பேச்சுகளெல்லாம் அவன் செவியிலே பல முறை புகுந்திருந்தமையால்தான் அவற்றின் விஷயங்களெல்லாம் முற்றிலும் தனக்குத் துலங்காவிடினும் சிற்சிலவற்றைப் பற்றித் தனிமையாயிருந்து யோசனை செய்வான். அப்படி யோசிக்கும் வேளைகளிலெல்லாம் அவனுக்குச் சில சந்தேகங்கள் தோன்றும். தக்க தருணம் வாய்ந்தால் அவன் தன் தகப்பனாரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்து வந்தான். ஆயினும் எப்பொழுதாவது வேதாந்த சம்மந்தமான வார்த்தையொன்று அவன் பேச நேரிட்டால் அவன் தகப்பனார் அவனைப் பார்த்து "அப்பா! சிந்தாமணி! நீ இந்தப் பெரிய விஷயங்களைப் பற்றிப்பேசாதே. எந்தெந்த வயதிலே ஏதேது செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டுமே யல்லாமல் மற்றவற்றைச் செய்வது தகுதியல்ல. பூவாய் மலர்வதற்கு முன் முகையைப் பறித்தால் அதன் மணம் புலப்படுமா. நீ இப்பொழுது படிக்கும் காலம் நல்லொழுக்கத்திலே பயிலும் காலம். பெரியோரை வணங்கும் காலம். எட்டாத கொம்பைப் பிடித்து ஏற எத்தனிக்காதே யப்பா!" என்று சொல்லிவிடுவார். ஆகையால் அவன் அவரைச் சந்தேகம் கேட்டுத் தெளிய அஞ்சுவான். ஆயினும் ஒரு சந்தேகம் மாத்திரம் அவனுக்குப் பலமாகவிருந்தது. "அவனன்றி யோரணுவும் அசையாது" என்று எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிருக்கும் தன்னுடைய தகப்பனார் வீணாக ஒவ்வொரு சமயங்களிலே மனக் கவலை கொள்வதை அவன் அறிந்திருந்தான். அப்படி அவர் கவலை கொள்வதும் அநேகமாகத் தனக்கு நோய் முதலியன தோன்றும் காலங்களிலேயே யிருந்தது. தன்னைப் பற்றி அவர் ஏன் அப்படிக் கவலை கொள்ளவேண்டுமென்பதே அவன் சந்தேகம். "எல்லாவற்றையும் நடத்தி வரும் ஈசன் ஒருவன் இருப்பானானால் என் தகப்பனார் கவலைப்படவே வேண்டாமே" என்று அவன் அடிக்கடி தனக்குள்ளேயே கேட்டுக்கொள்வான்.

இப்படி யிருக்கும் காலத்திலே ஒரு நாள் சுந்தரம் பள்ளிக்கூடத்துக்குப் போனான். அன்று ஜானகிராமய்யர் கச்சேரிக்குப் போகாமல் வீட்டிலேயே யிருக்க நேர்ந்தது. வழக்கம் போலத் தன் மனையாளிடம் அவர் "சச்சிதானந்த வெள்ளம்," "இன்பசாகரம்," "மாயை யிருளை விலக்கும் ஞான விளக்கு" என்னும் அழகிய மொழிகளை யமைத்து அருமையான வேதாந்த உண்மைகளை யெல்லாம் விளக்கிக் காட்டிக் கொண்டே யிருந்தார். பற்றெல்லாம் அறவே யொழிக்க வேண்டுமென்றும் அதுவே முத்தி பெறும் நெறியென்றும் கூறி நம்மாழ்வார் மொழிந்தருளியுள்ள 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்னும் வாக்கியத்தின் கருத்தை ஐயந்திரிபற விளக்கிக் கொண்டிருந்தார். எந்தக் காரணத்துக்காகவும் கொலை களவு முதலிய தீக்குணங்கள் அணுக இடங் கொடுக்கலாகாதென்று உறுதியாய்ப் பேசினார்.

இப்படியிருக்க அவர் வீட்டுக்குமுன் ஒரு குதிரை வண்டி வந்து நிறுத்தப்பட்டதைக் கண்டு அதன் காரணம் தெரிய வெளியே வந்தார். அப்பொழுது வண்டியிலிருந்து இரண்டு வாலிபர்களும் ஒரு வேலைக்காரனு மிறங்கினார்கள். வேலைக்காரன் வெகு பரபரப்புடன் "ஐயா! சிந்தாமணிக்கு மயக்கம் கண்டு கீழே விழுந்தான். நீர் தெளித்து அவனுக்குப் போதம் வருவித்த பின்பு அவனுக்கு ஆயாசமாயிருந்ததால் இங்கே அழைத்து வரும்படி உபாத்தியாயர் உத்தரவு கொடுத்தார். பயம் ஒன்று மில்லை." என்றான். அதுகேட்ட ஐயர் "ஆ! அப்படியா!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டு வண்டியண்டை போய் மெல்லச் சுந்தரத்தை யிறக்கி உள்ளே அழைத்துச் சென்றார். அதற்குள்ளே மீனாக்ஷியம்மாளும் விவரம் தெரிந்து "அப்பா! என்கண்ணே" என்று சொல்லி அவனருகில் வந்து அவனை அணைத்துக்

கொண்டாள். அப்பொழுது இருவரையும் பார்த்த சிந்தாமணி தன் கையாலே ஜாடை காட்டி "ஒன்றும் இல்லை. ஏதோ—கொஞ் சம்—களைப்பு—அவ்வளவுதான்" என்று மெல்லச் சொன்னான். வாலிபர்களும் வேலைக் காரனும் போன பின்பு தாய் தந்தையர் வைத் தியருக்கு ஆளனுப்பிச் சிந்தாமணிக்கு மருந்து முதலியன கொடுத்து அவனுக் கேற்ற விதத்தில் அவனைப் பாதுகாக்கத் தொடங்கினார்கள்.

அன்றிரவு சிந்தாமணிக்குச் சுரம்கண்டது. நாடோறும் நோய் அதிகரித்து வந்து பத்து நாட்கள் சென்றன. ஏராளமாய்ப் பணம் செலவழித்து வைத்தியம் செய்தும் வெளிப் படையாகப் பயன் தெரியவில்லை. ஜானகி ராமய்யருக்கும் மீனாக்ஷியம்மாளுக்கும் உண் டான கவலைக்குக் கங்குகரையில்லை—என்ன செய்வதென்று தோன்றாமல் திகைத்தார்கள். பதினோராம் நாட் காலையில் சிந்தாமணி ஏதே தோ பிதற்றத் தொடங்கினான். பெற்றோர்க்கு முன்னிலும் துயரம் அதிகப்பட்டது. அப் பொழுது அந்த வீட்டிலே வேலை செய்து கொண்டிருந்த ஒரு கிழவி ஐயரைப் பார்த்துச் "சாமி! நீங்கள் பாப்பாருங்க. உங்களுக்கு எங்கள் தெய்வங்களிலே நம்பிக்கை யிருக்கா துங்க—இல்லாவிட்டால் இந்தச் சொரம் ஒரு நொடியிலே போய் விடுங்க" என்றாள். அது கேட்ட ஜானகிராமய்யர் "சொல்லு—எப் படிப் போக்கடிப்பது" என்றார்.

கிழவி :—ஊருக்கு வடக்கே எசக்கியம்மன் கோவிலிருக்குங்க—ஒரு கொடை கொடுத் தால் போதுங்க. பூசாரியே செய்வானுங்க. பத்துரூபாய்தான் செலவுங்க. கோழி ஆடு எல்லாம் அவனே வாங்கி எல்லாம் செஞ்சுக்கு வானுங்க. இந்த வார்த்தையை மீனாக்ஷியம் மாள் கேட்டதும், "அப்படியா. சரிசரி. உடனே போய் அவனை அழைத்துவா. இல் லாவிட்டால் அவன் வரவும் கூட வேண்டாம். நீயே போய் ரூபாயைக் கொடுத்துவிடு. இப் பொவே இந்தக் காரியம் நடக்கட்டும். இது தானா பிரமாதம்" என்று சொல்லி வெகு விரைவாய்ப் பொட்டியைத் திறந்து பத்து ரூபா யெடுத்துக் கிழவியிடம் கொடுத்தாள். ஜானகிராமய்யர் நடந்ததை யெல்லாம் பார்த் துச் சற்று நேரம் மௌனமாயிருந்து ஐந் தாறு முறை பெருமூச் செறிந்து பின்பு "சம்போ! இதுவும் உன் வேலையா?" என்று மாத்திரம் சொன்னார். பதினைந்து நிமிஷத் துக்குள்ளே கிழவியும் திரும்பி வந்து "வேலை முடிந்ததுங்க" என்றாள்.

இதற்குள்ளே சிந்தாமணிக்குப் புலம்பல் அதிகரித்தது. அவனருகிலுட்கார்ந்து கொண் டிருந்த ஜானகிராமய்யர் அவன் என்ன சொல் லிக்கொண்டிருந்தான் என்று கவனித்துக் கொண்டே யிருந்தார்—சிற்சில மொழிகள் மாத்திரமே தெளிவாய்ச் சொல்லப்பட்டன. அவை பின் வருமாறு :—"அவனன்றியோ ரணுவும்"—"படித்தவராச்சே"—"நம்பிக் கையில்லை"—"ஆத்மா"—"நாசரகிதம்"— "வாய் வேதாந்தம்"—"மாயை" இவற்றை யெல்லாம் கேட்டுத் திடுக்கிட்ட ஜானகிராமய் யர் "ஆஹா! சிந்தாமணி என் குணத்தை யல்லவா சோதித்துப் பார்க்கிறான். அவன் புலம்புகிறானாயினும் அவன் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கும் நினைப்புக்களல் லவா இப்பொழுது வெளியாகின்றன. நான் கெட்டேன்—எனக்கு வாய் வேதாந்தம் தானி ருக்கிறது—நான் உண்மையாய்த் தெய்வத் தை நம்புவதேயில்லை—அப்பா! சிந்தாமணி! நீ சொல்வதுதான் உண்மை. 'கல்லாதவர் களே நல்லவர்கள் நல்லவர்கள்' நான் கற்ற றிந்த மடையன்" என்று பலவாறாகத் தமக் குள்ளேயே நினைத்து வருந்தினார்.

அப்பொழுது கதவு திறக்கப் பெற்று வைத் தியர் வந்து "சார்! நாம் அனுப்பியிருந்த இரத்தத்தைச் சோதித்துப் பார்த்ததில் டை யனுக்குட் டைபாய்டு ஜ்வரம் என்று தெரிந்து விட்டது. இனிமேல் பயம் கிடையாது. இன்றைக்குப் புலம்பல் ஆரம்பித்திருக்கிறது என்று பயப்படாதீர்கள்—இன்றைக்குப் பதி னோராம் நாளல்லவா—இன்றைக் கு கொஞ் சம் அதிகமாய்த் தானிருக்கும். நாளையி லிருந்து ஸ்வஸ்தமாய்விடும்" என்றார். ஐயர் "சரி" என்று மாத்திரம் சொல்லி மௌன மாயிருந்தார். பிற்பாடு ஊக்கமாகச் சிகிச்சை நடந்தது. வைத்தியர் சொன்னபடியே மறு நாட் காலையிலிருந்து நோய் குறையத் தொடங்கி இருபத்தோராவது நாளிலே முற்றி லும் விலகி விட்டது. வியாதி பூராவாக நீங் கின பின்பு ஜானகிராமய்யர் மீனாக்ஷியம்

மானைப் பார்த்து "நாம் கொடைக்குப் பணம் அனுப்பினது நம்முடைய பேதைமை. ஈசுவரன் நம்முடைய நம்பிக்கையைச் சோதிப்பதற்காக இந்த வியாதியை வரச் செய்தார் என்று நாம் தெரிந்துகொள்ளாமல் நாம் தப்பிதம் செய்துவிட்டோம்" என்றார். மீனாக்ஷியம்மாள் அது கேட்டு "அதென்னவோ! குழந்தை பிழைத்து விட்டான். இனிமேல் எப்படி வேணுமானாலு மிருக்கட்டும்" என்றாள். வேலைக்காரிக்கிழவிக்கு மாத்திரம் ஒரே நம்பிக்கை. "நம்ப எசக்கியாத்தாளில்லா விட்டா நம்ப கொளந்தை போனது தான். ஐயமாருக்கு என்ன தெரியும்" என்று ஊரிலெங்கும் சொல்லுவாள்.

---

# கவிச்சக்கரவர்த்திகள்

உலகத்திலே பல அரசர்களை யாளும் அதிபதியைச் சக்கரவர்த்தி யென்பது வழக்கு. அவ்வாறான சக்கரவர்த்திகள் பலருண்டு என்பதை யெல்லோரு மறிவர். அவ்வாறன்றி கவிச்சக்கரவர்த்திகள் என்று பெயர் தாங்கினார் ஒரு சிலரே யாவர். பல கவி யரசுகள் இருந்தாலன்றி கவிச் சக்கரவர்த்தி யொருவனிருக்க வியலாது. அதனினும் ஒரு சக்கரவர்த்தியிருக்கும்போது பிறிதொரு சக்கரவர்த்தி யிருந்தானென்று கூறுவதும் அசம்பாவிதமாகும்.

இஃதொரு புறமிருக்க, கவிகள் வறுமையால் வருந்துவது உலக வியற்கை. இந்நாட்டில் மாத்திரமன்று எந்நாட்டிலும் அதுவே நியதி. கல்விமான்களைப் போற்றும் நாடான இங்கிலாந்திலும் 'கோல்ட்ஸ்மித்,' 'ஜான்ஸன்' போன்றோர் மிடியால் சிறுமைப்பட்ட காலமுண்டு. கிரேக்க தேசத்திலும் கவிகள் செல்வச் சீமான்களாய் வாழ்ந்ததாகக் கேட்டிலோம். இத்தேயத்திலும் காளிதாசன், காளமேகன் போன்ற கவிகள் செல்வச் சீமான்களல்ல. ஆனால் வாக்கு வல்லமையிற் சிறந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவர்களது கவித்திறம் இவ்வளவெனதென மதிப்பிடற்கரியது. அவ்வாறான கவிச் சக்கரவர்த்திகள் தமிழ் நாட்டிலே மூவரேயாவர்.

கம்பர், சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர் இம்மூவரையுமே கவிச் சக்கரவர்த்திகள் என்பர். இவருள் கம்பரைக் கவிச் சக்கரவர்த்தி யென்று கூறுஞ் சான்றொன்றும் கிடைத்திலது. எனினும் இவர்க்கு இப்பட்ட மூண்ணம் எல்லோர் நாவிலும் அன்று தொட்டு இன்றுவரை பயின்று வருமொருசெய்தி, இஃதொன்றல்ல, இவர் வாழ்ந்த ஊரும் பலபடச் சொல்லப்படுகின்றது. இவரது காலம் எல்லாவற்றையும்விட மிகச் சிக்கலான நிலையிலுளது. ஒருவர் பன்னிரண்டாம் நூற்றாண்டென்பர். மற்றொருவர் ஒன்பதாம் நூற்றாண்டென்பர். சிலர் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட பதினோராம் நூற்றாண்டென்பர். அவரவர் மனம் போனவாறு கூறுவர். திட்டமாகக் கூறுவார் ஒருவருமிலர்.

இதுபோலன்று சயங்கொண்டார் நிலை. இவரது ஊர் தீபங்குடி யென்பர். 'பாடற் பெரும் பரணி தேடற் கருங்கவி' கவிச்சக்கரவர்த்தி பரவச் செஞ்சேவகஞ் செய்த சோழன்றிருப்பெயர் என்று குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழிலே ஒட்டக்கூத்தரே பாடுவதால் இவர் கவிச்சக்கரவர்த்தி யென்பது வலிபெறுகிறது. ஈண்டு பெரும் பரணியென்பது கலிங்கத்துப் பரணியை அப்பெரும் பரணி கொண்டவர் இராஜேந்திரனை முதற் குலோத்துங்கன். அவன் திருப்பெயரன் இரண்டாங் குலோத்துங்கன், முதற் குலோத்துங்கன் கி. பி. 1073-ல் சோழ சக்கரவர்த்தி என்ற பட்டந் தரித்தானாயினும் தனது இராச்சிய பார வருடங்களை 1070 முதலே குறிப்பிடுவன். இவன் கி. பி. 1118 வரை யரசாண்டானெனக் கூறுவது இவனது பல கலிங்கப்போர்களில் ஈண்டு குறித்தது பதினோராம் நூற்றாண்டின் கடைப் பகுதியிலே குறித்ததாகும்.

மூன்றாவதான ஒட்டக்கூத்தரைப்பற்றி அதிகம் விரிக்க வேண்டுவதில்லை, இவரது

பிறந்தகம் மலரி யென்றும் வாழ்ந்தவிடம் சீகாழியென்றும் கூறுவர். முன்னதற்கு 'மலரி வரும் கூத்தன்தன் வாக்கு' என்பதையும், பின்னதற்கு 'காழி யொட்டக்கூத்தன்' என்பதனையும் மேற்கோள் காட்டுவர். இவரைக் கவிச் சக்கரவர்த்தி யென்பது

'கொக்குந் தமிழ்க் கொத்தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்கரவர்த்தி வாழியே
வாழி தமிழ்ச் சொற்றெரிந்த நூற்றுறை
வாழி தமிழக் கொத்தனைத்து மார்க்கமும்
வாழி திசைக்கப் புறத்து நாற்கவி
வாழி கவிச்சக்கரவர்த்தி கூத்தனே.'

'இப்பாட்டு (536) கவிச்சக்கரவர்த்திகள் வாக்கல்ல வென் பாருமுளர்'.

'இப்பரணி பாடினூர் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள்' என்று பயின்றுவருவது கொண்டுதெளியலாம்.

இவரது காலமோ இவரது பிரபந்தங்களாலேயே திட்டமாகத் தெரிகிறது. விக்கிரம சோழன்மேற் பாடிய உலாவாலும் பரணியாலும் அவன் காலமுதல் ஈட்டியெழுபது தக்கயாகப் பரணி முதலிய நூல்களால் இரண்டாம் இராஜ ராஜன் காலத்திலும் நமது புலவர் பெருமான் இருந்தனறென்பது நிச்சயமாகிறது. ஆகவே இவர் கி. பி. 1118 முதல் 1150 வரை இருந்தவராவர்.

ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் காலங்களும் சரிதங்களும் திட்டமாகத் தெரிய கல்வியிற் பெரியரான கம்பர் காலமும் சரிதக் குறிப்புகளையும் ஆராய்ந்து நிலைநாட்ட வேண்டியது தமிழ்மக்களது முதற்கடமையாம்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை,
**சோமசுந்தர தேசிகர்.**

## "இந்தியக் கிராமச் சீர்திருத்தம்"

(திரு. M. S. சுந்தர சர்மா, B.A., Madras.)

பெரியோரும் சிறியோரும் இந்திய கிராமச் சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தற்சமயம் முன்வருவது, அக்கேள்வியின் குணகுணங்களை நீக்கிப் பார்க்குமிடத்தும், ஏற்பட்டகாலம் துவங்கிக் கிராமங்களே இவ்விந்திய தேசத்திற்கு ஏக ஆதாரமாயுள்ளதென்ற உண்மையை திடப்படுத்துவதால் பேராற்றலை ஏற்படுத்துகிறது.

ஏராளமாய்ப் பணத்தைச் செலவுசெய்தெடுக்கப்பட்ட ஜனத்தொகைக் குறிப்புகள் நமது கிராமங்களைப்பற்றிக் கூறுவதாகப்பாவனை செய்தபோதிலும், ஆங்கிலேயர் இராஜ்யமாண்ட சென்ற நூற்றைம்பது வருடங்களாக நமது கிராமங்கள் அவ்வகையாகக் குன்றியிருப்பது மிகவும்பரிதபிக்கத்தக்கது. சப்பாத்திக் கள்ளிகளடர்ந்து படர்ந்த வீடுகளும், வீதிகளுமுள்ள வாசத்திற்கு தகுதியற்ற விடங்கள் கிராமங்களென்று கூறப்படுவது ஓர் அதிசயக் காட்சியன்று. பின்னும் கிராமத்தோர்களை வச்சிரம் போல் ஒன்றுபடுத்தும் தன்மை வாய்ந்த கிராம ஆலயங்கள் ஆதரவற்றழிவதைப் பார்ப்பதும் அரிதல்ல. முற்கூறியதை இக்காலப் படிப்புள்ளோர் அறிவதினாலேயே கிராமச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசமுன்வருகிறார்கள். பிற்கூறிய ஆலய நாசமோ அவர்களது எண்ணத்தில் நுழைவதாகத் தெரியவில்லை. நுழைந்தாலும் அது மத சம்பந்தமானதென்ற காரணத்தால் நீக்கிவிடுகிறார்கள். அவ்வகை செய்வது 'நாய்க்கொருகெடுதலைக்கற்பித்துக் கொலை செய்யும்' நியாயம் பொருந்தியுள்ளதாகும்.

மதம் என்று இத்தேசத்திற் கூறுவது, நாமறிந்த இதர தேசங்களின் மதங்களைப்போன்றதன்று. இத்தேசத்தில் பிறவி முதல் இறப்பு வரை ஒவ்வொருவரும் மதத்திலேயே மூழ்கியிருக்கிறார்கள். ஆசாரவரசாங்க அனுபவங்களெல்லாம் அநேக நூற்றாண்டுகளாக அனுபவித்து இத்தேசிய லக்ஷியங்களாக மதத்திற் குட்பட்டிருப்பதினால் எவருடைய எச்செய்கையும் அம்மதத்திற்கப்புறமாக விருப்பதரிது. தேசிய லக்ஷியங்களனைத்தும் ஆலயங்களிலும் அவைகளின் வருஷாந்திரத் திருநாட்களிலும் நன்கு புலன்படுமாறு அமைந்திருந்தமையால் அவ்வாலயங்கள் கிராமவாசிகளை ஒன்றுதிரட்டிக் கூட்டும் ஆன்மவச்சிரமாயிருந்து வந்தது மன்றி கிராமவாசிகள் ஒன்றுகூடிக் களித்துக் கூத்தாடிக் காலங்கழிக்கும் இடமாயும்

வழங்கிவந்தன; சுயநல அந்நியர்கள் 'பிரித்து ஆளு' என்னும் தரியில் இழைக்கும் மதாசார பேதங்கள் மனதைப் புண்படுத்தி வதைக்கும் தன்மையின்றிக் கிராமவாசத்தில் ஓர் நிலைமைப் பட்டு ஆனந்தப் பேற்றையளித்துக் குதூகலிக் கச்செய்தது.

இத்தேசத்துப் பூர்வ கிராம லக்ஷியங்களை நன்கறியாது மேனோக்கத்தில் சிறப்பாய்க் காணப்படும் சிற்சில இதர தேசீயக் கிராம வாழ்க்கையை ஒருவாறாக நெருங்கா அறிவுடை யோர் சிலர் நமது கிராமச் சீர்திருத்த நிமித்த மாக வெகு சுலபமாய் அநேக முறைகளை முன் கொண்டு வருகிறார்கள். நூதனப் பயிர் செய்வகையும், கிராமாந்திரக் கைத் தொழில் வகையும், கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கவகையும் போன்ற அநேக வகைகளைக் கிராமங்கள் முன்போல் குதூ கலிக்கும் பொருட்டு முக்கிய வகைகளெனக் கூறுகிறார்கள். அவ்விதம் கூறுவது 'குடிப் பது யாரென்றவெண்ணம் நீங்கிக் குதிரை யைக் குளக்கரைக் கிழுத்துச் செல்லும்' முறை யன்றோ?

இலக்ஷிய மொன்றில்லாமல் மானிட சுபாவம் சுறுசுறுப்பாயிருக்கும் தன்மை வாய்ந்துள தன்று. இலக்ஷிய மொன்றுண்டேயாகில் அதன் பொருட்டு வழிகள் தானே ஏற்படு கின்றன. ஓர் காரியத்தை முடிக்கும் வகை கள் ஆயிரக்கணக்கா யமர்ந்துள. அவ்வாயிர வகைகளும் பொருந்தியவைகளேயாகும். கிரா மச் சீர்திருத்த நிமித்தமாக இதுவரை கூறிய வற்றில் அநேகம் வழிகளே யொழிய இலக்ஷி யங்களன்று. இலக்ஷியம் ஒன்று ஏற்படுமாயின் வழிகள் தானாக அமையும் என்பதே இங்கு திண்ணமாகக் கூறப்படுகிறது. ஆகையால் கிராம முன்னேற்றத்தைக்கொண்ட நினைவுடை யோர் யாவரும் கூடிக் கிராம வாழ்வின் இலக்ஷி யங்களைத் தேர்ந்தெடுத்து நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்வதே பேருபகாரமாகும்.

அந்நிய நாட்டு மடங்கள் போலன்றி இத் தேச வாலயங்கள் கிராமவாசிகள் ஒன்று கூடிக் களிக்குமிடமாகி ஓர் பொருட்டுத் தியாகம் செய்யும் முறையையும், மானிட ஒற்றுமையை யும், அகப்புறவான்மாவின் ஒருமையையும் விளக்கிய தென்றேல் அஃது எங்ஙனம் கிராம வாசிகளை வச்சிரம்போல் ஒருமித்துக் களிப் படையச் செய்ததென்று விரியும் குதூகல வுயிரோட்டத்திற்கு மூலாதாரமாய் நின்று விளங்கிய ஆலயங்கள் குன்றிச் சிதறவும் கிராமங்களின் ஒளியும் குன்றிற்று. மூலாதார மின்சார ஓட்டத்தைப்பரப்பும் யந்திரமில்லாத பட்சத்தில், மின்சார விளக்குகளும், விசிறிக ளும், வண்டிகளும் என்ன பலனைத் தரும்? ஆகையால் இப்பொழுது முக்கியமாகக் கவ னிக்க வேண்டிய விஷயமென்ன வென்றால், நமது தேசத்தில் கவனியாது சிதறிக்கிடக் கும் மூலாதார யந்திரமாய் விளங்கும் ஆல யங்கள் உயிர் பெற்று ஓடும் சக்தியைக் கண்டுபிடிப்பதே யாகும். யார் அச்சக்தியைக் கண்டுபிடித்துப் பரவச் செய்வது?

சமீபத்தில் நமது நாட்டில் பெரியோரொரு வர் முன்வந்து நமது கலாசங்கப்பட்டம்பெற்று வேலையில்லாம லலைபவர்களைத் திரட்டிக் கிராம முன்னேற்றத்திற்கு அனுப்பின் நலமென்று எழுதியுள்ளார். மூளைத் திறமையையும், இதர நன்மையையும் அடைந்த நமது கலாசங்கப் பட்டம் பெற்றோரின் மதிப்பைக் குறைக்கா மல் நம்மவரில் மிக்க அந்நியராய் வழங்குபவர் அவர்களே யென்று திண்ணமாய்க் கூறலாம். தளவாயும், முராரிராவும் யாவரென்பதைக் காட்டிலும் ஜான் ஜில்பினும், ராபின் ஹூடும் யாவரென்பது அவர்களுக்கு நன்கு தெரியும்; சித்தன்னவாசலும், அஜண்டாவும் விட ஆதென்ஸும், வெனிஸும் அவர்களுக்கு நன் றாய்த் தெரியும்; பூரிக்கோவும், சுமந்தரவாசாரி யும் விட மில்டனும், மைக்கேல் ஏன்சலோவும் யாரென அவர்களுக்கு நன்றாய் தெரியும்!

வாஸ்தவத்தில் சங்கப்பட்டம் பெற்ற இவர் கள் கிராமங்களுக்குச் சென்றால் நீரை விட்ட கன்ற மீன்கள் போலாவார்கள். அவ்வகை யானவர்களை நமது கிராமங்களில் பிரவேசிக்க விட்டால் அந்நியக் காட்டு முராண்டுச் சையின் யத்தைக் காட்டிலும் கேடு செய்வார்களென்ப தில் ஐயமுண்டோ? ஆனால் இப்பட்டத்தோர் களை முதலில் திரட்டி நமது தேசீய இலக்ஷியங் களை அவர்கள் மனதில் ஆழ ஊட்டிய பிறகு கிராம முன்னேற்றத்திற்கு அனுப்பின் மிக நன்மை யுண்டென்பதில் சந்தேகமில்லை.

நமது தேசீய இலக்ஷியங்கள் யாவை? அவை களை எங்கு கண்டு திரட்டுவது? சங்கப்பட் டம் பெற்ற நமது இளைஞர்களுக்கு அவ்

விலக்ஷியங்களை எங்ஙன மூட்டுவது? இக் கேள்விகளுக்கு விடை கொடுத்தால் நமது கிராம முன்னேற்றம் நடைபெறும்.

எந்தத் தேச இலக்ஷியங்களும் அந்த தேச சிற்ப சித்திர சங்கீதத்திலேயே யன்றி வேறொன்றிலும் காணுவதரிது. ஆகையால் நமது சிற்ப சித்திர சங்கீதங்களே நமது நாட்டு இலக்ஷியங்களை மீள அளிக்கும் ஊற்றாகக் கருத வேண்டும். சிற்பசித்திர சங்கீத மார்க்கமே நமக்கு முன்னேற்றத்தைக் காட்டும் வழி. அவைகளே நாம் இனிக் கட்ட முயலும் கோட்டைக்குப் பலமான அஸ்திவாரம். முற்காலப் பெருமையை நீடூழி விளக்குவதும் வருங்கால மகிமையைத் தாங்குவதுமா யிருப்பதும் நமது சிற்ப சித்திர சங்கீதமேயாகும்; புயற்காற்றுக் கொள்கை, இமயமலைக் கொள்கை அல்லது சூரிய புராணக்கொள்கை போன்ற கொள்கைகளெல்லாம் இந்திய சிற்ப இலக்ஷியங்களெனக் கொள்வது சில அந்நியர்கள் கருதுபவைகளேயன்றி வேறில்லை; கதை அடக்கம், சங்கீதச் சித்திரங்கள் முதலியவைகள் மதி மயங்கிய கனவுகளே யன்றி வேறல்ல; க்ரீக் தேசத்தினின்றும் அந்நிய நாட்டிலிருந்தும் இந்திய சிற்பம் முதலியன உற்பத்தியானதென்ற கொள்கைகள் வேணுமென்று இதர நோக்கமுடையோரின் ஆலோசனைகளன்றி வேறல்ல.

இந்திய சிற்ப சித்திர சங்கீத முதலியவைகளின் உண்மையான இலக்ஷியங்களை எழுதி அறியப்படுத்தவேண்டியது இனிமேல்தான் செய்யவேண்டிய காரியம். ஆகையால் நமது தேசத்தில் இப்பொழுது முக்கியமாய்ச் செய்யவேண்டிய தென்னவென்றால், நமது தேசிய இலக்ஷியங்களை உண்மையாக அறிந்து எடுத்துக் காட்டும் மூலஸ்தானங்களாகிய ஆலயங்களை பூர்விக நிலைமைக்குக் கொண்டுவந்து அதினால் சிற்ப சித்திர சங்கீதக் கொள்கைகளை மறுபடி ஏற்படுத்தி நாடெங்கும் பாவச் செய்து வருநாட்களை மேன்மைப் படுத்துவதே யாகும்.

மலைகளைக் குடைந்து வேற்றுருவம் காட்டிய திறமையையும், கடினமான கருங்கற்களை நெட்டி போல் உருட்டித் திரட்டின வன்மையையும், காலிச்சுவர்களை வர்ணம் தீட்டி உயிர் பெறச் செய்த முறைகளையும், வாயில்லாப் பொருள்களை உருட்டி நீட்டிக் குதூகலமாய் ஆடிப்பாடச் செய்த திறமையையும் இக்காலத்தில் மறுபடியும் கிளப்பி முன்னேற்றிக் கொண்டு வந்தாலன்றி நமது கிராமச் சீர்திருத்தத்தைப்பற்றி நாம் தியானிக்க இடமில்லை.

## நமது சிறு கதை

# பிச்சுவுக்குக் கிடைத்த லாட்டரி

(திரு. C. V. நாராயண அய்யர், M.A., L.T.,
Presidency College, Madras.)

"கஷ்டம்! கஷ்டம். அநியாயமாய் வட்டி நஷ்டமாகிறது. என்ன செய்யலாம்!" என்று சிரித்துக்கொண்டு சொன்ன குசால் குப்பு அய்யரைப் பார்த்து அவனருகிலே, சீட்டுக் கட்டொன்றைக் கையில் பிடித்துக்கொண்டிருந்த ஜம்புநாதய்யர், "என்னடா அது? யாருக்கு வட்டி நஷ்டம்" என்றார். உடனே ஜமக்காளத்தை உதரி விரித்துக்கொண்டே குப்பு அய்யர் "எனக்குத்தான், வேறே யாருக்கு?" என்று சொல்லிக் கீழே யுட்கார்ந்து ஜம்புநாதய்யரிடத்திலிருந்து சீட்டுக் கட்டை வாங்கி அதைப் பிரித்துச் சில சீட்டுக்களை ஒரு பக்கம் வைத்தார்.

ஜம்பு:—"உன் கதையைப் பூராவாகச் சொல்" எனவே, குப்பு அய்யர் "எங்கேயோ யாரோ ஒரு தர்ம சத்திரம் கட்டுகிறார்களாம். அந்த வகையிலே எனக்கு வட்டி நஷ்டம் வந்து சேர்ந்தது" என்றார். அது சொல்லி முடிந்ததும் அவ்விருவரும் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்திற்குப் பஞ்சு, கிட்டு என்னும் இரு நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள். குப்பு அய்யர் சொன்ன வார்த்தையை அரைகுறையாகக் கேட்ட பஞ்சு, "என்னப்பா நான் வரும்போது நஷ்டத்தைப்பற்றிப் பேசுகிறாய். இது அபசகுனமாயிருக்கிறதே. நஷ்டப்பட வேண்டுமென்று உன் நினைப்பா" என்றார்.

குப்பு:—"உனக்கு நஷ்டமானால் எங்களுக்கு லாபம் தானே. எனக்கு ஏற்பட்ட நஷ்டம் வட்டி நஷ்டம்தான். மூன்று மாதங்களுக்கு முன்னே ஒரு லாட்டரிச் சீட்டு டிக்கட்டுப் புஸ்தகம் என் கைக்கு வந்து சேர்ந்தது. அதிலே பதின்மூன்று டிக்கட்டுக்களிருந்தன. பன்னிரண்டு டிக்கட்டுக்களை விற்றுக்கொடுத்து இலவசமாக பதின்மூன்றாவது டிக்கட்டிலே என் பெயரை யெழுதி யனுப்பினேன். அதன் நம்பரையும் குறித்து வைத்தேன். அது 8043. முதல் பிரைஸ் விழுந்தவன் நம்பர் 8048. இந்தப் பாழாய்ப்போன மூன்று என்ற எழுத்து எட்டாயிருக்கக் கூடாதா. அப்படியிருந்தால் எனக்கு லட்சம் ரூபாய் வந்திருக்குமே. அப்படி லட்சம் ரூபாய் வந்திருந்தால் ஒரு பண வட்டிக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வந்திருக்குமே. அதுதான் இப்பொழுது எனக்கு நஷ்டமாய்ப் போய்விட்டது" என்றார். இதைக் கேட்டு எல்லோரும் சிரித்து "அடேடே நீ நல்ல பேர்வழிதான்" என்றார்கள்.

பின்பு நால்வரும் சீட்டாட்டம் ஆரம்பித்தார்கள். அதுவே அவர்கள் தினமும் செய்யும் வேலை. நால்வரும் நல்ல தனவந்தனர்கள். கிராமாந்தரத்திலேயே வாசஞ்செய்து காலம் கழிப்பவர்கள். தங்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்த நிலங்களினின்று கிடைக்கும் வருமானத்தைச் செலவிட்டு வாழ்பவர்கள். ஊரிலே இருக்கும் வம்பொன்றையும் விடாதவர்கள். ஆயினும் அந்தரங்கத்தில் இரக்கம் அன்பு முதலிய குணமுள்ளவர்கள்.

சிறிது நேரம் சீட்டாடினதும் பஞ்சு அய்யர் "அடே குப்பு! நீ லாட்டரியைப்பற்றிச் சொன்னாயே அந்த லாட்டரியின் பெயர் என்ன?" என்றார்.

குப்பு:—அதுவா! அதன் பேரும் ஊரும் எனக்குத் தெரியாது. ஹிமாலயா பர்வதத்திலே பதரிக்குப் போகிற வழியிலே பிரயாணிகளுக்குச் சௌகரிய மேற்படுத்துவதற்காக ஒரு சத்திரமோ மண்டபமோ கட்டப் பணம் வேண்டியிருக்கிறதென்று யாரோ ஒரு பெரியவர் இந்த லாட்டரி ஆரம்பித்தார்.

பஞ்சு :—சரி சரி. என் வீட்டுச் சமையற் காரனும் ஒரு டிக்கட்டு வாங்கினன் அவனுக் கேதாவது கிடைத்ததோ என்னவோ. இந்த லாட்டரி எப்பொழுது எடுத்தார்கள். உனக் குச் சமாச்சாரம் எப்பொழுது தெரிந்தது ?

குப்பு :—இதோ இப்பொழுதுதான் தெரிந் தது. அந்தக் கடிதத்தைப் படித்து முடித்த தும் ஜம்பு வந்தான். நீங்களும் வந்தீர்கள்.

பஞ்சு :—அப்படியானல் என் வீட்டுக்கும் லெட்டர் வந்திருக்குமே.

குப்பு :— வந்திருக்கும். வேணு மானல் வேலைக்காரன் முத்துவை யனுப்பிக் கேட்டு வரச் சொல்கிறேன்.

அப்படியே முத்துவும் போய் பத்து நிமி ஷத்திலே ஒரு கடிதத்தையும், சமையற்காரன் பிச்சுவையும், அழைத்து வந்தான். பிச்சு கொண்டுவந்திருந்த ரசீதைப் பார்த்ததில் அவன் நம்பர் 3043 என்று தெரிந்தது. அப் பொழுது குப்பு அய்யர் "அடா! கஷ்டமே! இவனுக்கும் ஓரெழுத்திலேயா அதிர்ஷ்டம் கட்டையாய்ப் போச்சு!" என்ருர். பஞ்சு அந்த ரசீதைக் கையில் வைத்துக்கொண்டே பிச்சுவை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட் டார். அதைப்பற்றி ஏதோ சிறிதுநேரம் யோசனை செய்துகொண்டிருந்தபோது, குப்பு அய்யர் "இதென்ன யோசனை! சீட்டாட்டம் நின்றுபோகிறதே" என்ருர். அப்பொழுது பஞ்சு அய்யர் "இல்லை—இல்லை. எனக்குப் புதி தாக ஓரெண்ணம் தோன்றுகிறது. இந்தப் பிச்சுவுடைய ரசீதைப் பார்த்தால் முதலிலே எழுதியிருக்கிற "3" என்ற எழுத்து "8" என்ற எழுத்தைப்போலக் கொஞ்சம் மயக்கு கிறது. கொஞ்சம் வேலைத்தனம் செய்தால் அதை எட்டாக மாற்றலாம்" என்ருர்.

குப்பு :—அப்படி மாற்றி லாட்டரிக்காரரை ஏமாற்றமுடியுமா.

பஞ்சு :—லாட்டரிக்காரரை ஏமாற்ற வேண் டாம். அது முடியவும் முடியாது. நம்பர் மாத் திரம் போதுமா. பேரும் ஒத்திருக்க வேண் டாமா. அதெல்லாம் நான் நினைக்கவில்லை. நம் முடைய கிருபணஸ் ஸிரோன்மணி மகாலிங்க சாஸ்திரிகளிருக்கிருரே, அவருக்கு ஒரு பாடம் படிப்பிக்கலாம் என்று நினைக்கிறேன்.

எல்லாரும் அதைக் கேட்டு "அதெப்படி!" என்று சொல்லிப் பஞ்சுவின் முகத்தைப் பார்த்தார்கள். அதற்குப் பஞ்சு, "எப்படியா. அந்தக் கிராதகன் எச்சிற்கையாலே காக்காயும் கூட ஓட்டுவதில்லை. பண்ணையிலே வேலைசெய் யும் ஏழை ஜனங்கள் அவரிடம் படும்பாடு நமக் குத் தெரியும். அவர் வீட்டிலேயாவது செலவு செய்கிருரா. அவர் மனைவி ஒரு பெரிய வீட்டுப் பெண். அவளுக்குத் தக்க துணியுமில்லை. சோறும்கூடவில்லை. பெண் குழந்தைக்குப் பதின்மூன்று வயதாய்விட்டது. வரதக்ஷிணை கொடுக்கவும் மாட்டாராம். பணக்கார மாப் பிள்ளையும் வேண்டுமாம். இப்படிச் சொல்லி வந்த வரனெல்லாம் விலக்குகிருர். இதை யெல்லாம் ஊரிலே பெரியவர்கள் என்று பெய ரெடுத்த நாமும் பார்த்துக்கொண்டே வாயை மூடிக்கொண் டிருக்கலாமா. எப்படியாவது இந்த மாதத்துக்குள்ளே அந்தப் பெண்ணுக் குக் கலியாணம் முடித்துவிட வேண்டும். அடுத்த மாதமோ ஆடிமாதமாய் விட்டது" என்ருர்.

குப்பு :—இதெல்லாம் என்ன கதை. லாட் டரிக்கும் மகாலிங்கய்யருக்கும் என்ன சம்பந் தம் ?

பஞ்சு :—லாட்டரிக்கும் உன்னுடைய நஷ் டத்துக்கும் என்ன சம்பந்தம் சொன்னயோ அந்தச் சம்பந்தம்தான். நாம் இந்த ரசீதியிலே 'மூன்று' என்பதை 'எட்டு' என்று திருத்தி ஞல் நம்முடைய பிச்சுவுக்கு லக்ஷம் ரூபாய் வந்துவிட்டதென்று தம்பட்டம் போடலாம். அதற்குமேல் அவன் லக்ஷப்பிரபு வல்லவா. இதைக்கேட்டால் மகாலிங்க சாஸ்திரிகள் 'குடு' 'குடு' என்று ஓடி வரமாட்டாரா. பிச்சவுக் கென்ன அழகுக்குக் குறைச்சலா.

குப்பு :—ஓஹோ. அப்படியா செய்தி ! பேஷ் ! ஆனல் அந்தப் பெண்ணைத் சமயற் காரனுக்கா கொடுப்பது. அது சங்கடம் அல்லவா.

பஞ்சு :—நான் அப்படிச் சொன்னேனு ? அப்படிப் பேச்சுவிடுவோம். சாஸ்திரிகளிடம் பணத்தைப்பிடுங்கிவிடுவோம். பிற்பாடு கலி யாணத்துக்கு நாம் ஏற்பாடு செய்வோம். நல்ல பையனுக்குக் கொடுத்துவிடுவோம். அவ்வளவுதான்.

குப்பு :—பேஷ் ! பேஷ் ! ஆனல் இதை யெப்படி செய்வது.

பஞ்சு :— அதெல்லாம் நான் இப்பொழுது சொல்லமாட்டேன். நீங்கள் என்னுடன் வாருங்கள். பிற்பாடு எல்லாம் தெரியும் என்று சொல்லி மற்றவரையும் அழைத்து சாஸ்திரியார் வீட்டுக்குப் போனார்.

அப்பொழுது சாஸ்திரியார் வீட்டிலே ஏதோ வெகு மொம்மரமாகச் சண்டை நடந்து கொண்டிருந்தது. அவர் குரல் வெளித் திண்ணையிலேயும் கேட்டது. அவர் "நீயொரு சண்டாளி. ரூபாய்க்கு நான் எங்கே போகட்டும். இந்த வருஷம் கலியாணம் பண்ண முடியாது. பணம் பணம் என்று பிடுங்கித் தின்கிறாய். நான் வரதக்ஷிணை கொடுக்கமாட்டேன். நம்முடைய சொத்தெல்லாம் சேர்த்துப் பார்த்தால் முப்பதினாயிரம் தான் இருக்கிறது. நீ ஏழாயிரம் ரூபாய் செலவிட்டு நம்முடைய காமுவுக்கு கலியாணம் செய்ய சொல்லுகிறாய். அப்படிச் செய்யமாட்டேன்" என்றார். குப்பு முதலியோர் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்தார்கள். பின்பு கதவைப் பலமாகத் தட்டினார்கள். சாஸ்திரியாரும் வந்து இவர்களை யுள்ளே அழைத்துப் போனார். எல்லோரும் உட்கார்ந்த பின்

பஞ்சு :—'' சாஸ்திரிகளே ! உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். நல்ல வரன் வந்திருக்கிறது. லக்ஷம் ரூபாய் ரொக்கம் சொத்து. பெண்ணுக்குச் சீர் செய்வானும். வரதக்ஷிணையில்லையாம். ஐயாயிரம் ரூபாய்க்கு நகையும் புடவையும் இன்னும் என்னென்னமோ வாம். உங்களைப்போலப் புண்ணியவான் யார் இருப்பார்கள். இப்படி யாருக்குக் கிடைக்கும். உங்கள் பெண்ணே தான் வேணுமாம்." என்றான். இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த சாஸ்திரிகள் என்ன சொல்வதென்று தோன்றாமல் "எங்கே இந்த வரன் ? என்ன விஷயம் ? காமு ஜாதகம் ரொம்பவும் விசேஷப்பட்டது என்று ஜோஸ்யர் சொல்லியிருக்கிறார். இதென்ன விஷயம் சொல்லுங்கள்" என்றார்.

பஞ்சு :—என் வீட்டிலே பிச்சு இருக்கிறானல்லவா. அவனுக்கு ஒரு லாட்டரி கிடைத்திருக்கிறது. ஒரு மாதத்திலே பணம் வந்துவிடும். இதோ அவன் ரசீது. இதோ இந்தக் கடிதத்தைப் பாருங்கள். நம்பர் 8048. அவனுக்கு உங்கள் காமுவைக் கலியாணம் பண்ண வேண்டுமாம். சமயற்காரனாயிருந்தான் என்று நீங்கள் வரனையேற்றுக்கொள்ள மாட்டீர்களோ என்ற பயம். ஆகையால் வைர நகையும் தங்க நகையுமாய் ரூபாய் ஐயாயிரம் குழந்தைக்கு அவனே கொடுக்கப்போகிறான். ஆனால் அவன் புத்தி மாறிவிடக் கூடாதென்பது தான் என் பயம். லக்ஷம் ரூபாய் ஒருவனிடம் வந்துவிட்டால் ஆள் எப்படியும் மாறுமலிருப்பானா. உம்முடைய பெண்ணைப் போல வேறே எவ்வளவோ பெண்கள் அவனுக்குக் கிடைக்காதா. ஆகையால் அவன் புத்தி கலைவதற்கு முன் இந்த விஷயத்தை முடித்துவிட வேண்டும்.

சாஸ் :—அது வாஸ்தவம் தான். எப்படி முடிப்பது. நீங்கள் நால்வரும்தான் அந்த ஏற்பாட்டை நடத்தவேண்டும்.

பஞ்சு :—அவன் சொன்னபடி நகையைப் போடச் செய்து விடுவோம். ஐயாயிரம் ரூபாயை உங்களிடம் தந்துவிட்டால் அதற்கு மேல் அவன் தப்புவதேது.

சாஸ் :—அவனிடம் ஐயாயிரம் ரூபாய் இப்பொழுதில்லையே. வருகிற மாதம் தானே வரும். அதற்குள்ளே ஆடி மாதமாய் விடுகிறது. அதற்குமேல் எப்படி எப்படியோ.

பஞ்சு :—இதுவா பிரமாதம். நீரே அவனுக்குக் கடனாகக் கொடுத்துவிடக்கூடாதா. நாங்கள் நால்வரும் சாக்ஷியாயிருப்போம். சாஸ்திரியார் சிறிது யோசித்து "அப்படியே செய்வோம்" என்றார்.

பஞ்சு :—சுபஸ்ய சீக்கிரம். ரூபாயைத் தாரும். ஆளனுப்பிப் பிச்சுவை அழைத்து வந்து இங்கேயே இப்பொழுதே இந்த ஜோலியை முடித்து விடுவோம்.

இப்படிப் பேசி முடித்து அரைமணி நேரத்துக்கெல்லாம் ரூபாய் ஐயாயிரம் சாஸ்திரியாரிடம் நால்வரும் வாங்கிவிட்டார்கள். மூன்று நாட்களுக்குள்ளே சென்னைப்பட்டினத்திலிருந்து நகைகளும் வந்துவிட்டன. காமாக்ஷிக்கு அவற்றை அளிக்கப்பட்டன. கலியாண ஏற்பாடுகளும் நடந்து வெகு தடபுடலாய் விட்டது. வெள்ளிக்கிழமை நிச்சயதாம்பூலம் செய்ய ஏற்பாடாயிற்று.

வியாழக்கிழமை சாயங்காலம் நால்வரும் சாஸ்திரிகளிடம் வந்து "சாஸ்திரிகளே, நாம் ஏமாந்து போய்விட்டோம். '3' என்ற

எழுத்தை '8' என்று படித்துவிட்டோம். பிச்சுவுக்கு லாட்டரி கிடைக்கவில்லையாம். இப்பொழுது என்ன செய்வது" எனவும், அவர் மூர்ச்சித்து விழுந்தார். அவரை யொருவாறு தேற்றின பின்பு பஞ்சு "அது போனால் போகட்டும். இந்தக் கலியாணம் வேண்டாம். வேறே ஒரு வரனிருக்கிறது. வரதக்ஷிணை கொடுக்கவேண்டாம். ஐயாயிரம் ரூபாய் நகையில்லையா. அதுவே போதும். பையன் பி. ஏ. பரீக்ஷைக்குப் படிக்கிறான். வெகு புத்திசாலி" என்று தொடங்கிக் கொஞ்சம் கொஞ்சமாய்க் காரியத்தை முடித்தார். சௌபாக்கியவதி காமாக்ஷிக்குக் கலியாணமும் நடந்தது. பிச்சு அந்தக் கலியாணத்திலே வெகு அழகாகச் சமயல் செய்து எல்லோரையும் திருப்திப்படுத்தினான்.

---

# கங்கை வேடனும் காளத்தி வேடனும்.*

(திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள், B.A., B.L.)

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார்கள் அடையும் இன்பங்கள் பல. அவற்றுள் கல்வியும் அனுபவமும் பெற்ற பேரறிஞர்கள் இயற்றிய காவியங்களால் ஏற்படும் இன்பம் ஒன்று. தமிழ் மொழியில் உள்ள காவியங்களுள் தலையாயதும், தமிழ் நாட்டின் பழக்கவழக்கங்களையும் நாகரீகத்தையும் தழுவி யெழுதப்பட்டதும், நாடக இலக்கணங்கள் அமையப்பெற்றதுமாகியது, கம்பரது இராமாயணமாகும். அவ்விதமே பக்தி முறையைச் செவ்வையாய்ப் புகல்வது சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமாகும். இன்று எடுத்துக்கொண்ட பகுதிகளுள கங்கை வேடன் என்பது கங்கையாற்றுக்குத் தலைவனாகிய குகனும், காளத்தி வேடன் என்பது காளத்தி மலைக்குத் தலைவனாகிய கண்ணப்பனுமாகும். இருவர் சரித்திரத்தை யெழுதிய ஆசிரியர்களது கதை யொற்றுமையையும், அவர்களது பக்தி யொற்றுமையையும், அவர்கள் சரித்திரத்தில் காணப்படும் செயல் ஒற்றுமையையும் பிறவற்றையும் தெளிவாய்க் காணலாம். குகன் கங்கையில் படகோட்டுந் தொழிலுடையவன். தனக்குமுன் பின் அறியாத இராமர் மரவுரி தரித்துச் சீதை முதலியோருடன் நாடு கடந்து காடு நோக்கி வந்திருப்பதைக் கண்டு மெய்மறந்து உடல் சோர்ந்து நின்றான். இங்ஙனமே வேட்டை நோக்கிப் புறப்பட்ட கண்ணப்பன் பக்கத்துள்ள காளத்தி மலையில் தனித்திருக்கும் குடுமித் தேவரைக் கண்டு மனம் வருந்தி நின்றான். குகன் தன்னிடம் வந்த ராமருக்குத் தன் குலத்துக்கும் தொழிலுக்கும் ஏற்ற ஆகாரமான தேனும் மீனும் கொண்டுவந்து உண்ணும்படி வேண்டினான். கண்ணப்பனும் தன் மரபுக்கும் செயலுக்கும் ஏற்ற பன்றி யுணவைப் பதனிட்டுப் பார்த்து ருசியுள்ளவைகளைப் பொறுக்கிக் கொண்டுபோய்க் குடுமித் தேவருக்குப் படைத்தான். தேனும் மீனும் திருத்திக் கொணர்ந்து கமலக் கண்ணனைக் காணப்போந்த குகனது திறமும், கானகப் பன்றியின் தசையைக் கனலிற்காய்ச்சிப் பல்லால் அதுக்கி நாவாற் சுவைத்துக் கல்லையில் எடுத்துவந்து உண்ணச்செய்த திண்ணனாகிய கண்ணப்பனது திறமும் ஒப்ப நோக்கி உணரத் தக்கனவாம். குகனது பக்தியைக் கண்ட ராமர் "அன்பினால் அமைந்த காதல் தெரிதரக் கொணர்ந்த வென்றால் அமிர்தினும் சீர்த்த வன்றே" என்று கூறியதும், கண்ணப்பனது பக்தியைக்கண்ட காளத்திநாதர் கண்ணப்பனது பக்தி முறைகளைப்பற்றிச் சிவகோசரியாரிடம் கூறியதும் கூர்ந்து நோக்கத்தக்கன. இருவரது செயல்களில் கமலக் கண்ணனும் காளத்தி நாதனும் இருவருடைய பக்தியைக் கொண்டார்களேயன்றி வெளியுணவுகளை உண்ணவில்லை. மனிதர்கள் தங்கட்குப் பிரியமான உணவுகளைக் கடவுளுக்கும் படைப்பது வழக்கம். அன்றியும் இராமருடைய துன்ப நிலையைக்கண்ட குகன் மனஞ்சோர்ந்து கூறும் வார்த்தைகள் நோக்கத்தக்கன. அஃதாவது காளத்திநாதரது கடுந்துயரைப் பொறுக்க முடியாமல் தன் கண்ணை அகழ்ந்தெடுத்த கண்ணப்பன் நிலையை நினைந்து வருந்துவான்போன்று கங்கைத் தலை

* திருச்சிரபுரம் தமிழாராய்ச்சிக் கழகத்துஆதரவில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்.

வனை குகனும் இராமரது துன்ப நிலையைக் கண்டு 'இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் நான்' என்று கூறியது கவனிக்க தக்கது. இராமருக்குக் காட்டில் கிடைத்த மூன்று சகோதரர்களுள் சுக்கிரீவனும் விபீஷணனும் இராமரது சிநேகத்தால் இம்மைப் பயன்களைப் பெறவும், குகன் ஒருவனே யாதொரு பிரதிப் பிரயோசனமின்றி நிஷ்காமிய பக்திகாட்டி யொழுகலானான். பின்னர் குகன் முதலியோருடைய செயல்களைப்பற்றிச் சுக்கிரீவன் இராமரிடம் "காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்டமாட்டேன், நாட்டிலே குகனார்செய்த நன்மையை நயக்க மாட்டேன், கேட்டிலேன் இன்று கண்டும் கிளிமொழி மாதராளை மீட்டிலேன் தலைகள் பத்துங் கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்" என்று வருந்திக் கூறுவதும், சிறுத்தொண்டர், கண்ணப்பர் முதலியோரது அருஞ்செயல்களைப் பற்றிப் பட்டினத்தடிகள் "வாளால் மகவரிந்தூட்ட வல்லேனல்லன் மாதுசொன்ன, சூளால் இளமை துறக்க வல்லேனல்லன் தொண்டுசெய்து, நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லேனல்லன் நான் இனிச் சென்று ஆளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பனுக்கே" என்று கூறியுள்ளதும் ஒப்பு நோக்கத்தக்கன.

---

# சேக்கிழாரும் திருவள்ளுவரும்.*

(திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், B.A.)

தமிழுலகத்தில் சிறப்பித்துச் சொல்லப் படும் பெரியார்களுள் வள்ளுவரும் சேக்கிழாரும் சிறந்தவராவர். இவர்கள் முறையே இரண்டாயிரம், ஆயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தவராவார்கள். இவர்களுள் வள்ளுவரைப்பற்றி அநேகமாய்ப் பலரும் அறிந்திருக்கலாம். ஆனால் சேக்கிழாரைப்பற்றிச் சிலரே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நூல்களும் அவ்வாறே கொள்ளத் தக்கன. திருக்குறள் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டதோடு எச்சமயத்தவரும் அதனைப் போற்றி வருகின்றார்கள். பெரிய புராணத்தில் சைவ மதத்திலுள்ள செயற் கருஞ் செய்கைகளைச் செய்த பெரியோர்களைப் பற்றியும், மறுமைக் குறியவைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருப்பினும், மக்களுக்கு வேண்டப்படும் இவ்வுலக வாழ்க்கைக் குரிய விஷயங்களைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. இம்முறைபற்றி எல்லோரும் படித்தறிய வேண்டியதொரு நூலாகும். முதலில் காலத்தால் முதலாகச் சொல்லப்படுகின்ற திருவள்ளுவரையும் அவர் நூலையும் எடுத்துக்கொள்வோம். வள்ளுவர் மக்களிடம் வைத்த அன்பினால் பலநீதிகளைத்திரட்டித் திருக்குறளை வெளியிட்டார். அம்மாதிரியே சேக்கிழாரும் சைவ சமயத்திலுள்ள சாஸ்திர உண்மைகளைத் தொகுத்துப் பெரிய புராணத்தை வெளியிட்டார். திருக்குறள் அக் காலத்தில் முதல் முதலில் பச்சோலையில் எழுதப்பட்டதுபோலவே இன்றும் பசுமையாய் அதாவது சிறந்ததாகப் போற்றப்பட்டு வருகின்றது. எல்லாப் பொருள்களும் இதில் அடங்கியுள்ளன. இவர் பாட்டின் கருத்துகள் வேறு ஆசிரியர்களிடத்தில் இயற்கையாகக் காணப்படமாட்டா. சாதாரணமாய் வைத்தியர் உடலிலுள்ள வியாதியை மூன்று வித நாடியைக் கொண்டறிகின்றார்கள். திருவள்ளுவர் 'நோய்நாடி, நோய் முதல் நாடி, யது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச்செயல்' என்று கூறியுள்ளார். அதாவது நோயைத் தெரிந்து, அதன் மூலத்தைத் தெரிந்து அதை நீக்கும் வகையை அறிந்து செய்யவேண்டியவற்றைச் செய்க என்கிறார். இதுபோன்ற பல அருமையான பாக்களைத் தந்துள்ளார். இத்தகைய பெருமையினாலல்லவோ சீமையில் விக்டோரியா ராணியார் புத்தக சாலையில் பைபிளுக்கு அடுத்தபடியாகத் திருக்குறள் இரண்டாவதாக வைக்கப்பட்டிருக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறது. திருவள்ளுவர் வேறு நாட்டில் தோன்றி யிருப்பாராஞல் அவருடைய பெருமை மிகுதியாக இருந்திருக்கும். இனிச் சேக்கிழாரையும் திருவள்ளுவரையும் சேர்த்து

* திருசிரபுரம் தமிழாராய்ச்சிக் கழகத்தினதாவில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்.

அவர்களது நூல்களில் உள்ள ஒற்றுமையைப் பார்ப்போம். திருவள்ளுவரது பெருமையைக் கண்ட பெரியார்களுள் சேக்கிழார் முதன்மை யானவரென்றே சொல்லலாம். ஏனெனில் சேக்கிழார் சிறுவரா யிருக்கும்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவர் தகப்பனார் சோழனிடம் வேலையிலிருக்கும்போது அரசன் அவரை நோக்கி 'மலையிற் பெரிது எது? கடலிற் பெரிது எது? நிலத்திற் பெரிது எது?' என்று கேட்டான். அதற்குப் பதில் கூற மாட்டாமல் சிறிது கவலையுற்றிருந்தபோது சேக்கிழார் அவரிடம் "நிலையிற்றிரியா தடங்கியான் தோற்றம், மலையினும் மாணப்பெரிது" என்றும், "பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்றும், "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்றும், மூன்று குறட்பாக்களைச் சொல்லவே தந்தையார் மகிழ்ந்து அவற்றை அரசனுக்குக் கூற அரசனும் மகிழ்ந்தான்.

இதனால் சிறுவராயிருக்கும்போதே குறளிடத்தில் சேக்கிழாருக்கு எவ்வளவு அபிமான மிகுந்ததென்பது தெரியவரும். திருவள்ளுவர் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்கங்களைத் தொகுத்து இலக்கணமாகத் திருக்குறளை இயற்றினார். சேக்கிழாரோ அவ்விலக்கணங்களைச் சேர்த்து இலக்கியமாகப் பெரிய புராணத்தை வகுத்தார். மேலும் மந்திரி வேலையிலிருந்து நூலியற்றியவர் இவர் ஒருவரே. அரசராயிருந்து நூலியற்றியவர்கள் ஐயடிகள் காடவர்கோன் முதலியோராவர். பெரியார் யாவர் என்பதற்குத் திருவள்ளுவர் 'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்' என்று கூறியுள்ளார். இத்தொடரையே வைத்துக்கொண்டு சேக்கிழார் இயற்பகை நாயனாருடைய சரித்திரத்தில் அவரைப்பற்றிக் கூறும்போது செய்வதற்கரிய செய்கை செய்த நற்றொண்டரென்றும், செயற்கருஞ் செய்கை செய்த தீரனே என்றும் பாடியுள்ளார். திருக்குறளில் 'தென்புலத்தார் தெய்வம், விருந்து ஒக்கல், தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல்தலை' என்று சொல்லியபடி ஒருவன் தன் வருவாயை ஆறுபங்கு செய்து ஐந்து பங்கைப் பிதிர் முதலியவர்கட்கும் ஒரு பங்கை அரசனுக்கும் இறையாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. இக்கருத்தைச் சேக்கிழார் பெரிய புராணம் நாட்டுச் சிறப்பில் 'அரசுகொள்கடன்களாற்றி மிகுதி கொண்டறங்கள் பேணிப் பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண் பின் விரவிய கிளையுந்தாங்கி விளங்கிய குடிகள்' என்று கூறியிருக்கிறார். அன்றியும் 1330 அருங்குறட்பாக்களில் சிறந்ததும், மெய்யுணர்தல் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதுமாகிய 'சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தருநோய்' என்னும் குறளை எடுத்துக்கொண்டு பாகுபடுத்திச் சேக்கிழார் சிரம்போன்ற திருஞானசம்பந்தர் சரித்திரத்தில் அவர் தந்தையருடன் சென்று குளக்கரையில் நின்று தோணியப்பரைப் பார்த்து அழுததைக் கூறும்போது 'சார்புணர்ந்து' என்னுங் கருத்தை 'மெய்ம்மேற் கண்துளி பனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார் தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமைதானோ' என்றும், 'சார்புகெட' என்னுங் கருத்தைப் பெரிய புராணத்தில் கண்போன்ற கண்ணப்ப நாயனார் அவர் மலையேறிக் குடுமித் தேவரைத் தரிசிப்பதற்கு முன்னே இறைவர் திருக்கண்ணோக்கஞ் செய்து முன்னைச் சார்புகள் நீங்கியதைக் கூறும்போது 'திங்கள் சேர்சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தித் தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டகல நீங்கிப் பொங்கிய வொளியினீழற் பொருவிலன் புருவமானார்' என்றும் பாடியுள்ளார். 'கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடிக் கண்ணேயுள' என்னுங் கருத்தை ஏயர்கோன்கலிக் காம நாயனார் புராணத்தில் கூறியுள்ளார்' 'இரு நோக்கிவளுண் கணுள்ளது ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்றந்நோய் மருந்து, என்னுங் கருத்தைத் திருஞானசம்பந்தர் புராணத்தில் பூம்பாவை என்னும் பெண் குடத்தினின்றும் வெளிப்பட்டபோது அவளது கண்களைப் புகழும் வாயிலாகச் செருவெழுந்தனுவதொன்றுஞ் சேமவில்லொன்று மாகி என்று கூறியுள்ளார். பெரிய புராணத்தில் மனுநீதிச் சோழன் சரித்திரத்தில் மானிலங்காவலனாவான் என்னும் பாட்டில் காவலனுடைய கடமைகள் செவ்வையாய்க் கூறப்படுகின்றன. வேட்டையாடும்

போது வேட்டை யாடுபவனுக்குப் பிராணிகளின் குணங்கள் தெரியவேண்டுமென்பதும் அவைகளின் குரலைப்போலவே சமயங்களில் கூக்குரலிட வேண்டுமென்பதும் கண்ணப்ப நாயனார் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்நூலில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய விளையாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் பெண்களுக்குரிய விளையாட்டை ஆண்கள் கைக்கொண்டுள்ளார்கள். பேச்சினால் ஒருவனுடைய உட்கருத்தைத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் திருவள்ளுவர் செய்த 1330 குறட்பாக்களைப் படித்தாலும் அவர் இன்னார் என அறிந்துகொள்ள முடியாதபடி தன்னை மறைத்துக்கொண்டிருக்கிறார்.

# கொழுப்பு

(திரு. P. N. அப்புஸ்வாமி, B.A., B.L.,
அட்வகேட், மைலாப்பூர்.)

கொழுப்பு என்பது உயிர்ப்பிராணிகளின் உடலில் காணப்படும் பல்வகைத் தாதுக்களில் ஒன்று. அது தோலுக்கு அடியில் அதனை ஒட்டியுள்ள பிரதேசத்திலேயே வெகுவாகக் காணப்படுகிறது. அது கட்டியாக மெழுகு வர்த்தி போன்றும், சற்று நெகிழ்ந்து உறைந்த நெய் போலவும், மிகவும் நெகிழ்ந்து எண்ணெய் போலவும் மூவகை நிலைமைகளிலும் காணப்படுகிறது. அது பெரும்பாலும் வெளுப்பாக வேனும் அல்லது சற்று மஞ்சள் குளித்த நிறமாகவேனும் இருக்கும். அதில் ஸ்டியரீன், ஒலியீன் என்ற இரண்டு பொருள்கள் கலந்திருக்கின்றன. அவற்றுள், சாதாரணமாக ஸ்டியரீன் கட்டியாயும் ஒலியீன் நீர் போலவும் இருக்கும். இவை ஒவ்வொன்றும் எந்தெந்த அளவிலே ஒன்றோடொன்று கலந்து காணப்படுகின்றனவோ அதற்குத் தகுந்தபடி கொழுப்பானது கட்டியாகவோ, சற்று நெகிழ்ந்தோ, அல்லது நீர்போலவோ காணப்படும். மனிதருடைய உடலிற் காணும் கொழுப்பில் ஸ்டியரீன் என்ற பொருள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக மார்கரீன் என்ற பொருள் காணப்படுகிறது. ஆகவே மனிதருடைய கொழுப்பானது மார்கரீன் (Margarine), ஒலியீன் என்ற இரண்டு பொருள்களால் ஆகியது. கொழுப்பானது கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் என்ற மூன்று மூலப்பொருள்களை மட்டிலும் கொண்டிருக்கிறது. பிராணிகளின் உடலிலெங்கும் மிகுந்து காணப்படும் நைட்ரஜன் கொழுப்பில் இல்லை.

பொதுவாக கொழுப்புக்கு மணமாவது ருசியாவது கிடையாதென்றே சொல்லவேண்டும். அதனால்தான் பலவகைக் கொழுப்புகளை எளிதாக நெய்யோடு கலந்து நம்மைச் சில வியாபாரிகள் ஏமாற்றி விடுகிறார்கள். கொழுப்பானது நீரில் கரைவதில்லை. அது ஒரு 'கரையாப் பொருள்'.

கொழுப்பானது உடலுக்கு இன்றியமையாப் பொருள்களில் ஒன்று. அது உடலின் தோலுக்கு அடிப்புறமுள்ள ஒரு கம்பளிப் போர்வையைப் போலவே பிராணியின் உடலைக் குளிரினின்று பாதுகாக்கிறது. மிகவும் குளிர்ந்த நாடுகளில் உள்ள மிருகங்கள் குளிரால் வருந்தாமல் வாழ்வதற்காக அவைகளுக்கு இரண்டுவிதமான பாதுகாப்பு முறைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று மயிர் செறிந்த மேல் தோல்; இரண்டு கொழுப்பு அடர்ந்த உடல். அந்தப் பிரதேசங்களிலே நீருள் வாழும் மீன்கள் முதலியன இரண்டாவது பாதுகாப்பு முறையையே பெற்றிருக்கின்றன. உதாரணமாகத் திமிங்கிலத்தையும், ஸீல் என்னும் பிராணியையும் சொல்லலாம்.

மனித உடலிலும் இது பொதுவாக மேல் தோலின்கீழ் உள்ள இடத்திலே தோலை ஒட்டியே காணப்படுகிறது. இது இருப்பதால் தான் நமது உடலானது அதிக மேடு பள்ளங்களின்றி மழமழப்பாய் காண்கிறது. கொழுப்பே இல்லாவிட்டால் நமது உடலானது மிகவும் கிழவயதில் காணப்படுவது போல்—எலும்புகள் இங்குமங்கும் துருத்திக்கொண்டும், கண்கள் பள்ளத்தில் ஆழ்ந்துபோயும், தசைகள் ஆங்காங்கு முறுக்கிய கயிறுபோல் தொங்கிக் கொண்டும் காணப்படும். ஆணினது உடலைக்காட்டிலும் பெண்

ணின் உடலில் கொழுப்பு சற்று அதிகமாகக் காணப்படுகிறது. தோலின் மென்மையும் கொழுப்பின் மிகுதியுமே பெண்ணின் அழகிய வடிவத்துக்கும் அவளது லாவண்ணியத்துக்கும் காரணமாகின்றன.

ஆயினும் அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் நஞ்சாவது போல உடலினுள்ள கொழுப்பும் ஓர் அளவுக்கு மிஞ்சினல் மிகுதியான கெடுதலையே விளைவிக்கும். அளவுக்கு மிஞ்சிய கொழுப்புப் பாக்கியத்தைப் பெற்ற சிலர் தள்ளித் தள்ளாடித் திணறுவதை நாம் சாதாரணமாகப் பார்த்துப் பரிதாபமடைகிறோம். அவர்களைத் தடி, பொதி என்றெல்லாம் இகழ்ந்து எண்ணிக் கூறிப் பரிகசிக்கிறோம். அவர்களிற் பெரும்பாலாரும் அவர் உட்கொள்ளும் உணவை ஆராய்ந்து உண்ணுததாலும் ஒழுங்கான வேளைகளில் சரியான அளவுப்படி ஆகாரத்தை உட்கொண்டு தேகப்பயிற்சி செய்து வாராததாலும் அம்மாதிரியாகக் கஷ்டப்பட வேண்டியதாகிறது. சில வேளைகளில் அவர்கள் உடலுறுப்புக்கள் சிற்சில ஒழுங்கான ஆரோக்கிய நிலைமையிலிருந்து வேலை செய்து வாராத காரணத்தாலும் உடலானது அளவுக்கு மிஞ்சிப் பருத்து விடுகிறது.

கொழுப்பானது உடலுக்கு உரிய ஒரு முக்கியமான உணவுப் பொருள். இறைச்சியிலும் கோழியின் முட்டையிலும், பால், தயிர், வெண்ணெய், ஆடை இவற்றிலும் இது காணப்படுகிறது. இது போஷணைக்கு இன்றியமையாத உணவு அன்று. ஆனல் மிகவும் சௌகரியமான உணவு. இது உடலுக்குச் சூடும் சக்தியும் அளிக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய உடலும் அதற்குப்போதுமான அளவு மட்டிலும் இப்பொருளை அப்போதைக்கப்போது உபயோகத்துக்காக எடுத்துக்கொள்வதில்லை. தற்போதைய உபயோகத்துக்கு வேண்டிய அளவைக் காட்டிலும் அதிகப்படியாகக் கொழுப்பானது உடலில் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சேகரித்து வைக்கப்படுகிறது. மனிதன் வழக்கமான அளவுக்கு மிஞ்சி உழைக்கும் போதும், உரியவேளை கடந்து ஆகாரம் உண்ணும்படி நேரிடும்போதும் இது அவனுக்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு உடலிலும் சாதாரணமாய்க் காணப்படும் கொழுப்பின் துணையை மட்டிலுமே நம்பி ஒருவன் நாற்பது நாள்வரை ஆகாரமில்லாமல் பட்டினிகிடக்க முடியுமாம். அவ்வளவு கொழுப்பு நம்முள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறதாம்!

# கைத்தொழில் அபிவிருத்தியின் அவசியம்

(திரு. V ராமச்சந்திரன், M. A.)

1921-22 ஸூ இந்தியாவைச் சுற்றிவந்த Fiscal Commission இன் அங்கத்தினர்கள் எழுதிய ரிப்போர்ட்டில் "இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தியும் அதன் அத்தியாவசியமும்" என்கிற அத்தியாயத்தின்கீழ் பின்வருமாறு எழுதுகிறார்கள்.

"கைத்தொழில் அபிவிருத்தி யிருக்கிறது. ஆனால் தேசவிஸ்தீரணம், ஜனத்தொகை, இயற்கை ஸம்பத்து இவைகளுக்கு ஏற்றபடியில்லை. பெரும் இயற்கை ஸம்பத்தையுடைய இம்மாபெரும் தேசத்திற்கு, ஸித்தமாக லாபத்தைத் தரக்கூடிய கைத்தொழில்களை ஏற்படுத்தினால், தேச ஜனங்களுக்கு சம்பாதிக்கக் கூடிய சக்தியை அதிகரிக்கச் செய்து, அதனால் ஜனங்கள் ஐசுவரியவான்களாவதற்கு, ஹேதுகரமாயிருக்கும், மேலும் வியவசாயத்தையே கதியென்று, தேவையான பேர்களுக்குமேலிருக்கும் ஜனங்களுக்கு, மற்றுமொரு ஸம்பாதிக்கும் வழியைக்காட்டும். வேலையில்லாமலிருக்கும் தொழிலாளர்களுக்குத் தொழிலளிக்கும். அதனால் தேசிய ஐசுவரியம், அபிவிருத்தியடையும். கடைசியாக, பணவரும்படியினால் நிர்ணயிக்கமுடியாத ஒரு பலன் கைத்தொழில்அபிவிருத்தியினாலுண்டாகிறது. கைத்தொழில் இல்லாத ஒரு தேசம் புத்தி கூர்மையை அதிகரிப்பதற்கு காரணமாயிருக்கும் ஓர் சகதியற்றதாகப் போய்விடுகிறது; நுட்பமாயுள்ள புத்தியுள்ளவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. தேச மக்களுக்குச் சுறு சுறுப்பைக் கொடுக்கக்கூடிய ஒரு சக்தியை இழந்துவிடுகிறது. ஆகையால் இந்தியாவுக்கும் இந்தியர்களுக்கும், தற்காலத்தில் கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டால், அநேக நன்மைகளுக்குக் காரணமாயிருக்கும்." ராஜீய தந்திரத்தில் பேர் பெற்றவர்களும், தேசிய நன்மைக்காக உழைப்பவர்களுமடங்கிய இக்கமிஷனின் அங்கத்தினர்கள் இவ்விதம் கூறுகிறார்கள்.

## நம் தேசநிலை.

நம்தேசம் முக்கியமாக விவசாயத்திற்கே ஈடுபட்டதென்பது உண்மைதான். ஆனால் நமக்கு நிலங்களிலிருந்துவரும் வரும்படியையும், மற்ற தேசங்களில் அதே விஸ்தீரணத்திற்குவரும் வரும்படியையும், சற்று சீர்தூக்கிப்பார்ப்போமானால் நாம் அடையும் நஷ்டம் நன்றாய் விளங்கும். ஜெர்மனிய தேசம் நம்மைக் காட்டிலும் பதின் மூன்று மடங்கு அதிகமாகவும், ஆங்கிலதேசமும் அமெரிக்கா தேசமும், பதின்மடங்கு அதிகமாகவும், ஜப்பான் ஆறுமடங்கு அதிகமாயும் வரும்படியை அனுபவிக்கின்றன. காரணம் என்ன? நம்தேச விவசாயிகளுக்குத் தயாரிக்கப்பட்ட உரங்களின் நன்மைகள், பெரும்பாலும் தெரிவதில்லை. அவைகளின் நன்மைகள் தெரிந்தவர்களுக்கு, அதிக விலையினால் வாங்க முடியாமற்போய்விடுகிறது. தயாரிக்கப்படும் உரங்கள் செய்வதற்கு வேண்டிய பண்டங்கள் நம் தேசத்திலேயே செய்ய முடியுமானால், நம்தேசம் பலவித நன்மைகளையடைந்து, ஜனங்கள் ஐசுவரியவான்களாவார்கள்.

அநேக லக்ஷக்கணக்கான பவுன்கள் நம் தேசத்திலிருந்து அயல் நாடுகளுக்குச் செல்லுகிறது. சாயங்கள் வாங்குவதிலும், ஸோப்புகள் வாங்குவதிலும், தோல் பதப்படுத்துவதற்காக அநேக உப்புகள் வாங்குவதிலும், மற்றும் அநேக ஸாமான்கள் வாங்குவதிலும், அப்பெருந்தனம் நம் நாட்டைவிட்டு அயல் நாடுகளுக்குச் செல்லுகின்றது. மேலும் அரிய விலையுயர்ந்த இயற்கைப்பொருள்களை சொற்ப விலைக்கு அயல் நாடுகளுக்கு அனுப்பி அவ்வியற்கைப் பொருள்களிலிருந்தே தயாரிக்கப்பட்டு உபயோகத்திற்கு ஸித்தமாயிருக்கும் பொருள்களை அயல் தேசங்களிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். அப்படித்தயாரித்து இறக்குமதியாகும் வஸ்துக்களெல்லாம்

அநேகமாக இரஸாயன முறைகளின் உதவியால் தயாரிக்கப்பட்டனவைகளே. ஆகையால் இரஸாயன ஸம்பந்தமுள்ள கைத்தொழில்களை, உடனே நடத்த ஆரம்பிக்க வேண்டிய அவசியம் நன்கு விளங்குகின்றது.

## இயற்கை சம்பத்து

ஆனால் சிலர் நம்தேசத்தில் அவ்வித கைத்தொழில்களுக்குப் போதுமான இயற்கை சம்பத்து உண்டாவென்று கேட்கலாம். இவ் விஷயத்தில் அபிப்பிராயம் தரக்கூடிய நம் தேசத்திய நிபுணர்களும், அயல் தேசத்து நிபுணர்களும் அத்தாக்ஷி கூறுகிறார்கள். V. Ball என்பவர் அவரெழிதிய, 'இகநாமிக் ஜியாலஜி ஆப் இண்டியா' (Economic Geology of India) என்னும் புஸ்தகத்தில் பின் வருமாறு கூறுகிறார்:—"இந்தியர்கள் அயல் நாடுகளிலிருந்து பிரத்தியோகமா யிருந்தாலும், அல்லது அயல் நாடுகளின் போட்டா போட்டியிலிருந்து ரக்ஷிக்கப்பட்டாலும், தற்காலத்திய நாகரீகத்திற்குவேண்டிய ஒரு பெரிய ஜன சமுகத்திற்குத் தேவையான உலோகமியக்கும் பொருள்கள் இந்தியாவின் எல்லைகளுக்குள்ளாகவே பெறக்கூடிய சக்தி யுண்டென்பதற்கு ஐயமேயில்லை."

நம் தேசமுழுவதும் ஆங்காங்கு அதிக திரவிய லாபத்திற்குக் காரணமாயிருக்கும் சுரங்கப் பொருள் கிடைக்கின்றன. பர்மாவில் ஸிங்கபம் என்னு மிடத்தில், செம்பும் இரும்பும் சுலபமாகக் கிடைக்கக் கூடிய உலோகமியக்கும் பொருள்கள் கிடைக்கின்றன. அவ் விடத்தில்தான் நம்தேசத்திற்கு திலகம் போன்ற 'டாடா' கம்பெனியார்களுக்கு அவர்களுக்குத் தேவையான அவ்வுலோக மியக்கும் பொருள்களை வாங்கிக்கொள்ளுகிறார்கள். Ferromanganese (வெர்ரோமாங்கனீஸ்) என்னும் அழுத்தமுள்ள மாங்கனீஸ்—இரும்புக்கலவை தயாரிப்பதற்கு வேண்டிய மாங்கனீஸ் உலோகமியக்கும் பொருள், மத்தியமஹாணத்திலும், மைசூரிலும் கிடைக்கிறது. பாக்ஸைட் (Bauxite) என்னும் உலோகமியக்கும் பொருளும், மொனஸைட் (Monazite) என்னும் அபூர்வ புவனப் பொருள் (Rare Earths) என்று வழங்கும் உலோகங்களுக்கு ஆதாரமாயிருக்கும் உலோகமியக்கும் பொருள் கேரள Kerala) தேசத்தில் கிடைக்கிறது. ஆனால் இப்பொருள் ஜெர்மனிய தேசத்திற்கு அனுப்பப்படுகிறது. இம் மொனஸைட் (Monazite) டிலிருந்துதான் 'காந்தலேட்' என்னும் தீபத்திற்கு வேண்டிய 'மாண்டில்' செய்யப்படுகிறது. அயல் தேசங்களிலுள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையளிக்கும் இப்பொருள்கள் நம் தேசத்தை விட்டு அகன்று இந்திய மக்களை தீராப்பஞ்சத்திற்கு ஆளாக்குகின்றது.

## இயந்திர மோட்டும் சக்தி.

இயற்கைப்பொருள்கள் நாம் உபயோகப் படுத்தக்கூடிய நிலைமைக்குமுன் சிற்சில மாறுதல்கள் அடையவேண்டிய தவசியம். அப்படி மாறுதல்கள் அடைவதற்கு இயந்திரமோட்டும் சக்தி அவசியம். மின்சாரம், நிலக்கரி, மண் எண்ணெய் இவைகளெல்லாம் அச்சக்தியயக்கும்.

மின்சாரம்:—தற்காலத்தில் மிகவும் மலிவான சக்தி நீர்வீழ்ச்சி மின்சாரம்தான். நார்வே (Norway) என்னும் தேசத்தில் மிகுந்த மலிவான கட்டணத்திற்கு மின்சார சக்தி கிடைக்கின்றது. உலகத்தில் பெயர் பெற்ற 'நயகரா' நீர்வீழ்ச்சியிலிருந்து, சுற்றி பல மைல்கள் தூரத்திலுள்ள, நகரங்களுக்கும் ஆலைகளுக்கும் வட அமெரிக்கா கவர்ன்மெண்டார்கள் கொடுக்கிறார்கள். நம் தேசத்திலேயே மைசூர் கவர்ன்மெண்டார் காவிரியிலுள்ள சிவஸமுத்திரம் நீர் வீழ்ச்சியிலிருந்து கோலார் தங்கச்சுரங்கத்திற்கும், மைசூர், பெங்களூர், இவ்விருபட்டணங்களிற்கும், வெளிச்சத்திற்கு வேண்டிய சக்தியை கொடுக்கிறார்கள். நம் மாஹாணத்திலேயே, பைக்கார நீர்வீழ்ச்சியிலிருந்து, மின்சார சக்தி உண்டாக்குவதற்கு யோசனையில் இருந்துகொண்டிருக்கிறது.

கைத்தொழில் அதிபதிகள் மற்ற இயந்திர மோட்டும் சக்திகளைக் காட்டிலும், மின்சார சக்தியையே விரும்புகிறார்கள். மற்ற இயந்திர மோட்டும் சக்திகளை யெல்லாம் சுலபமாக அடக்கியாள முடியாது. இக்காரணத்தினால் தான் மின்சார சக்தியை விரும்புகிறார்கள்.

நிலக்கரி:—நிலக்கரியும் இயந்திர மோட்டு வதற்கு வேண்டிய சக்தி தரக்கூடிய பொருள். நம்தேசத்திலகப்படும் நிலக்கரியானது இங்கிலாந்து தேசத்தில் அகப்படும் நிலக்கரியைப் போல் அவ்வளவு உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த

தல்ல. சற்றுக்குறைந்த உஷ்ணம் (Calorific value) தரக்கூடிய சக்தியை உடைத்தாயிருக்கிறது. இருந்தபோதிலும், அநேக கைத்தொழில்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. இரும்பு தயாரிப்பதில் நிலக்கரியிலிருந்து உண்டாகும் 'கோக்' (Coke) என்னும் பதார்த்தத்திற்கு நம் நிலக்கரியை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். 'கோக்' தயாரிப்பதிலிருந்து உண்டாகும் நில உரமாகக்கூடிய இலவச இடைப் பொருள் (Byeproduct) அம்மோனியாவும், பற்பல வர்ணங்கள் தரக்கூடிய நிலக்கரித்தாரும் கிடைக்கின்றன.

மண்ணெண்ணெய்:—மேலும் இயந்திரங்கள் ஓட்டும் சக்தியை மண்ணெண்ணெயும் கொடுக்கும். அயல் நாட்டார்கள் கையிலிருந்த போதிலும் பர்மா தேசத்தில் அநேகம் எண்ணெய்க்குமிழிகள் கிடைத்து அந்த எண்ணெய் பிரபலமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இது போதாவிட்டாலும் ஸமீபத்திலிருக்கும் பாரஸீகத்தில் அநேக எண்ணெய்க்குமிழிகள் கிடைத்திருக்கின்றன; அவைகளும் உதவி செய்யும்.

### தொழில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய தனமும், தொழிலாளிகளும்.

நாமெல்லோரும் தைன்யஸ்திதியில் இருக்கிறோம். ஆகையால் பெரும்பாலரிடத்தில் தொழில்கள் ஏற்படுத்துவதற்கு போதுமான தனம் ஏற்படுவதில்லை. அப்படி தனவந்தர்களாய் இருப்பவர்கள் முன் வந்து தங்கள் ஐசுவரியத்தை தைரியமாகச் சிலவு செய்துபெருந்தொழில்களை ஏற்படுத்துவதில்லை. மேலும் வியாபாரத்திற்காக தனம் சேர்த்து பாங்குகளில் போட்டாலும் சிலசமயங்களில் பாங்குகள் நொடித்துப் போய் தன நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. ஆகையால் ஜனங்கள் பாங்குகளில் (Bank) பணத்தை சேர்த்து வைத்திருப்பதைக் காட்டிலும் நகைகள் செய்வதிலும் நிலங்கள் வாங்குவதிலும் மனதைத்திருப்பிவிடுகிறார்கள். ஜனங்களுக்கு பாங்குகளில் நம்பிக்கை வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் கவர்ன்மெண்டார் செய்யவேண்டும். நம் கைத்தொழிலாளிகளுக்கு நுட்ப புத்தியில்லையென்பது அயல்நாட்டாரின் கொள்கை. அது சரியல்ல. நமக்கு மேல்நாடுகளிலிருப்பது போல் அவ்வளவு உசித சமயம் வாய்ப்பதில்லை. தேவையான வசதிகொடுத்தால் நாம் அயல் நாட்டுத்தொழிலாளர்கள்போல் வேலை செய்யலாம். தற்காலத்தில் நம்மவர்கள் முன்பு ஐரோப்பியர்களுக்காகவே கொடுக்கப்பட்ட வேலைகளை ஸரிவரப் பார்த்து வருவதே அதற்கு அத்தாக்ஷியாகும்.

ஈசுவரனால் நமக்குப் பெரும் இயற்கை ஸம்பத்தை அளிக்கப்பெற்றிருக்கிறோம். நம் கைத்தொழிலாளிகள் வேறு என்னாட்டு கைத்தொழிலாளிகளுக்கும் கீழ்ப்பட்டவர்களல்லர். தொழில்கள் நடத்துவதற்குத் தேவையான தனம் சேகரிக்கவும் கூடும். இவ்வித சௌகரியங்களை யெல்லாம் ஒருங்கே சேர்த்து சரியான வழியில் திருப்பினால் நம் தேசத்தில் ஐசுவரியம் அதிகரித்து எல்லாரும் தனவான்களாவர்கள். இதுவரையில் நம் தேசத்தின் கைத்தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய இயற்கைப்பொருள்கள், கைதேர்ந்த தொழிலாளிகள், தனம், இவைகளைப்பற்றி யோஜித்தோம். இப்பொழுது செவ்வனே நடந்து வரும் சிற்சில கைத்தொழில்களைப்பற்றி யோஜிப்போம்.

(தொடரும்.)

# ஆரம்ப ஆசிரியர் பக்கம்

(திரு. S. ஜெகந்நாதன் அவர்கள்,
Teachers' College.)

அன்பார்ந்த சகோதரர்களே,

யான் தங்களைப்போல் ஒரு ஆரம்ப ஆசிரியன். உங்களைப் போல் இராப் பகலாய்க் குழந்தைகளின் நன்மையைக் குறித்தே ஊக்கத்துடன் உழைப்பவன். ஆயினும் இக் "கல்விக்கடல்" மூலமாக எனது சிற்சில அனுபவங்களையும், ஆரம்பப் படிப்பின் அபிவிர்த்திக்கு சிற்சில மார்க்கங்களையும் எடுத்துரைக்க முன்வந்தேன். நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவைகள்.

1. குழந்தைக் கல்வியும் குழந்தைப் பயிற்சியும்.

2. குழந்தைகளின் சங்கங்கள்.

3. தொழிலாளர் படிப்பு அபிவிர்த்தி.

4. வாசக புஸ்தகங்கள்.

5. கல்வி சம்பந்தமான உபகரணங்கள்.

6. ஒவ்வொரு பையனுக்கு பிரத்தியேகமான வேலை.

1. குழந்தைக் கல்வியும் குழந்தைப் பயிற்சியும் :—இதுவே ஆரம்பப் படிப்பிற்கு அஸ்திவாரக் கல்வியாகும். ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கே நாம் பாடு படுவோராகயிருந்தாலும் நாம் சொல்லிக் கொடுக்கும் விஷயங்கள் எல்லாம் நம்மிடம் வரும் குழந்தைகளின் மனோவளர்ச்சியையும், சொல்லிக் கொடுக்கும் விஷயங்களை கிரகிக்கும் சக்தியையும் பொறுத்து இருக்கிறது. நாம் நமது கிராமத்திலுள்ள குழந்தைகளுக்காகப் பாடுபடுவோமாயின் முக்கியமாக வீட்டிலுள்ள குழந்தைகளின் கல்வியையும் பயிற்சியையும் பற்றி ஆராய்ச்சி செய்து அம்முறைகளை எல்லோருக்கும் பிரசாரம் செய்து வர வேண்டும். இதுவும் நம்முடைய முக்கியதர்மம் ஆகும்.

2. குழந்தைகளின் சங்கங்கள்:—நாம் சொல்லிக் கொடுக்கவேண்டிய விஷயங்கள்பல; நாட்களோ சில. மேலும் நம்மிடத்தில் குழந்தைகள் வழங்கிவரும் நேரம் ஒருநாளைக்கு 5 மணி நேரம். அந்த ஐந்து மணி நேரத்திலும் நாம் ஒவ்வொருவரையும் கவனிப்பது வெகு குறைவாகவே இருக்கிறது. மேலும் நாம் சொல்லிக்கொடுக்க வேண்டிய பாடக் கிரமங்களும், விஷயங்களும் அபரிமிதமாக இருக்கின்றன. இதைத் தவிர கால அட்டவணையிலும் பாட அட்டவணையிலும் அடங்காத சில உத்கிருஷ்டமான விஷயங்கள் சிறு குழந்தைகளுக்கு ஏற்ற விஷயங்கள் ஒளிந்துகிடக்கின்றன. விடுமுறை நாட்கள் வந்து விட்டால் சொல்லிக் கொடுத்த படிப்பு மறந்து போக காலம் வந்துவிட்டாற்போல் இருக்கிறது. குழந்தைகளின் ஒழிவு நேரங்களில் அந்நேரத்தைச் சரியானவழியில் செலவழிக்க ஏற்ற உபாயங்களை நாம் யோஜித்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது அவசியமாகும். அதன் பொருட்டே கிராமங்கள் தோறும் குழந்தைகள் சங்கங்கள் ஸ்தாபித்து அந்த சங்கத்தின் மூலமாக கிராம விளையாட்டுகள், நூதன விளையாட்டுகள் விளையாடுதல், குழந்தைகளுக்கான புஸ்தகசாலையும், ஒரு சித்திரங்களடங்கிய வாரப் பத்திரிகைத் தயார்செய்தல், மாசமாச சபை கூட்டுதல், பாஷை கணக்கு சம்பந்தமான விடுகவிகள், வேடிக்கைக் கணக்குகள் இவைகளை புதுப்பித்தல், ஒழிவு நேரங்களில் தாங்களே செய்யக்கூடிய சில கைவேலைகளுக்குப் பழக்குதல் முதலிய கணக்கற்ற விஷயங்களை அனுஷ்டித்து குழந்தைகளின் வாழ்நாட்களை மேன்மை பெறச் செய்யலாம்.

3. தொழிளாளர் படிப்பு அபிவிர்த்தி :—கல்வியைப் பெற்ற நாம் குழந்தைகளுக்கு மாத்திரந்தானா கல்வியை ஊட்டப்பிறந்தோம்? பொதுவாக நாமே கல்விக்கடலின் ஓரத்திலேயே நீந்திக் கொண்டிருக்கிறோம். கல்விக் கடலைக் கரை கண்டவர் யார்? வெகு சிலரே. ஒவ்வொரு மனிதனும் தான் சம்பாதித்துக்

கொள்ளுவதோடு பிறருக்கும் கொடுக்கவும் பிறந்திருக்கிறன். ஏழைகளாகிய நாம் தனம் தானியம் முதலியவைகளால் தானம் செய்ய முடியாவிடினும் வித்தியா தானம் செய்யலாம். கிராமத்தில் படிப்புத் தெரியாத தொழிலாளர் எத்தனை பேர் இருக்கிறர்கள்? அரைப்படிப்பு கால்படிப்பு தெரிந்தவர்கள் எவ்வளவு பேர்? அவர்கள் என்ன தொழில் செய்கிறர்கள்? அவர்கள் தங்கள் தொழில் செய்து கொண்டே இன்னும் எவெற்றைக் கற்கஆவலாயிருக்கிறர்கள்? என்பன போன்ற விஷயத்தைக் கண்டறிந்து நாமும் அவர் பொருட்டுப் பாடுபடுவதும் நமது தர்மம் ஆகும். இது ஒருவராய் செய்ய இயலாது. இந்த விஷயத்தில் ஊக்கங் கொண்ட மற்றும் சிலரைச் சேர்த்துக்கொண்டு மேற்படி தொழிலாளர்க்கு ஒழிந்த நேரத்தில் பாஷை கணக்கு பாடங்கள் சொல்லிக் கொடுப்பதோடு, சுகாதாரம், குழந்தைகளின் படிப்பு, கூட்டுறவுச் சங்கம், கிராம புனருத்தாரணம், விவசாயம், பிரதம சிகிச்சை முதலிய முக்கிய விஷயங்களைப் பற்றியும் உபன்னியாசங்கள் செய்ய சில பெரியோரையும் அழைத்து வரலாம். இம்மாதிரி கிராமத்தில் ஒன்று ஸ்தாபித்து அதை "இராப்" பள்ளிக்கூடம் என்று விளையாட்டாகச் செய்யாமல் "இருக்கிற" பள்ளிக்கூடமாகவே செய்ய முயலவேண்டும்.

**4. வாசக புஸ்தகங்கள்:**—பிரதி வருஷமும் நாம் அனேக வாசக புஸ்தகங்களைப் பார்த்து வருகிறோம். போதித்தும் வருகிறோம். ஆனல் இவைகளைப்பற்றிச் சரியாய் ஆராய்ச்சி செய்யப்போதுமான அவகாசம் நமக்கு இல்லை. ஒவ்வொரு உபாத்தியாயரும் தனது பிள்ளைகளுக்குச் சரியான வாசக பாடங்களைத்தானே ஏன் ஏற்படுத்தக் கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது. உதாரணமாக பாலர் வகுப்பு புத்தகத்தைப் பற்றி எடுத்துக்கொள்ளுவோம். நாம் போதிக்க வேண்டிய வார்த்தைகள் குழந்தைகளுக்கு அர்த்தம் விளங்கக் கூடியதாக இருக்கவேண்டும் அவர்கள் வழக்கத்தில் வரக்கூடியதாக விருக்கவேண்டும். ஐந்து வயதுக் குழந்தைகளுக்கு சுமார் 500 வார்த்தைகள் பழக்கமுள்ளதாக யிருக்குமென்று தெரிகிறது. இந்த விஷயத்தைத் தீர்மானம் செய்தறிய உபாத்தியாயர்களும் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம்.

மேல் வகுப்புக் குழந்தைகள் கூட வாசக பாடங்கள் மூலமாகவே கற்க வேண்டிய எல்லா விஷயங்களையும் கற்றுக்கொள்ள முடியுமா? கணக்குப் புஸ்தகக்களில் அடங்கிய விஷயங்கள் கிராமப்பிள்ளைகளுக்கு ஏற்றனவாயிருக்கின்றனவா? சுருக்கமான முறைகளும் மனக்கணக்கு அப்பியாசங்களும், கிராம வழிகளையும் எடுத்துக்கொண்டிருக்கின்றனவா? இப் புஸ்தகங்களை ஒட்டிப் பாடம் நடத்தும்பொழுது நாமும் எப்படி பாடுபடவேண்டும் என்று யோஜிப்பது முக்கியம் ஆகும்.

**5. கல்வி சம்பந்தமான உபகரணங்கள்:**—இதுவரையிலும்குழந்தைகள்உபாத்தியாயரைக்கேட்டறிந்தும், புஸ்தகங்கள் படித்தறிந்தும் கல்வி பயின்று வந்தார்கள். தற்காலத்திலோ வென்றால் பிள்ளைகளே கண்ணல் பார்த்து, கையால் பழகி, பரீக்ஷை செய்து பார்த்து கல்வி பயிலும் நாளாகிறது. அதற்கேற்றபடி பாடங்களும் மாறிவருகின்றன. கை வேலை, இயற்கைப் பாடம் முதலியவைகள் குழந்தையின் படிப்பிற்கு அனுகுணமானவைகளே. அதுபோலவே எண் எழுத்துப் பாடங்கள் கற்பதிலும் பிரத்தியக்ஷரூபமாகப் பரிசீலனை செய்து பார்த்துக் கல்வி கற்பது அவசியம் ஆகும். பணம் கொடுத்து உபகரணங்களை ஏராளமாகச் சேகரம் செய்யாமுடிவினும் பிரயோஜன மில்லாதவைகளைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுவது மேலானது. ஏதாவது ஒன்றை நாம் அழகாகச் செய்துவிட்டால் அதுவே அழகு ஆகும். நெருப்புப் பெட்டிகள், ஸ்டாம்புகள், குச்சிகள், மணிகள், கொருக்கைத்தட்டை குச்சிகள், அட்டைத் துண்டுகள், பழைய படங்கள் இவைகளை சரியானபடி செய்து உபயோகிக்க நன்மை விளையும் என்பதில் ஐயமில்லை.

**ஒவ்வொரு பையனுக்கும் பிரத்தியேகமான வேலை:**—வகுப்பில் 30 குழந்தைகள் இருந்தால் நாம் ஒவ்வொரு பையனையும் கவனிக்கப் போதுமான அவகாசம் இல்லை. மேன்மேலும் ஒருவன் செய்கிற வேலையையோ கணக்கையோ மற்றவன் செய்யும் பொழுது ஒவ்வொருவனும் தானே செய்கிறுனு, மற்றவனுடைய உதவியை நாடுகிறனு, அல்லது உபாத்தியாயரைச் சந்தோஷப்படுத்தப் பிறர்

எழுதியதைப் பார்த்துத் தானும எழுதிவிடுகிறுன் என்று பார்த்து அறியத்தக்க சாதனங்கள் பள்ளிக்கூடத்தில் இருக்கவேண்டும். தற்சமயம் நமது நாட்டில் இவ்விஷயங்களைக் குறித்த உபகாரணங்கள் தயாராகவில்லை. நாமே அவைகளைத் தயார் செய்து வரவேண்டும்.

**முடிவுரை:**—இதுபோன்ற பற்பல விஷயங்களை நாம் யோஜித்து ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடைய நாம் பாடுபடவேண்டும். அப்படிச் செய்யின் நாடு தழைத்தோங்கும். நாமும் நமது கடமையைச் செய்தவர்கள் ஆவோம். பிற நாட்டாரும் நமது நாட்டிலுள்ள சில முன்னேற்றங்களைக் கண்டு மெச்சுவார்கள். ஆரம்பப் படிப்புக்கு அஸ்திவாரம் ஆகிய நாம் நூதன முறைகளைக் கொண்டு பிறருக்கும் அன்னிய நாட்டாருக்கும் நமது முறைகள் சிரேஷ்டமென்றும், நமது நாட்டுக் குழந்தைகளுக்கு அவை ஏற்றனவென்றும், நமது நாட்டிலுள்ள பழைய முறைகளிற் சிற்சில விஷயங்கள் குழந்தைகளின் கல்விக்குச் சரியானவை என்றும் காண்பித்தல் அவசியம் ஆகும். இங்கு சொல்லப்பட்ட விஷயங்கள் ஒவ்வொன்றும் ஒரு பெருத்த விஷயம் ஆகும். சமயம் நேர்ந்தபொழுது அவை ஒவ்வொன்றைப்பற்றியும் சற்றே விஸ்தாரமாக எழுதலாம் என்று நினைக்கிறேன். நமது உத்தமமான தொழிலில் நாம் ஊக்கம் காட்டுவதற்கு ஏற்ற மனேவலிமையும் தேக வலிமையும் நமக்குக் கடவுள் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கும்,

தங்களது நண்பன்,
**ஜெகன்னதன்.**

# சாரண இயக்கம்

வி௵ :—சாரணியத்தினால் பயன் யாது ?

விடை :—சாரணியத்தினால் சிறுவர்கள் தங்களுடைய நடத்தைகளைச் சீர்திருத்திக்கொள்ளுகிறார்கள்.

வி௵ :—எப்படிப்பட்ட குணத்தை அடைவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள் ?

விடை :—நற்குடிகளாவதற்கு.

வி௵ :—" நற்குடிகள் " என்றால் அதன் கருத்து என்ன ?

விடை :—(1) தன் கையே தனக்கு உதவியாயிருப்பதற்குப் பிரயத்தனப்படுதல்.

(2) அவசரத்தில் பதட்டமில்லா திருத்தல்.

(3) மற்றவர்களுக்கு உதவி செய்ய மலர்ந்த முகத்துடன் தயாராயிருத்தல்.

வி௵ :—ஆனால் பள்ளிக்கூடங்களில் இப்பேற்பட்ட சான்றுகளைப் போதிப்பதற்கு முயற்சிக்க வில்லையா ?

விடை :—பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் பாடங்கள் பெரும்பாலும் (உபயோகப்படக்கூடியவைகளாயிருந்தாலும்) மூளையைச் செலுத்திக் கற்கும் பாடங்களாகவே இருக்கின்றன. இவைகளைக் கற்கும் இளைஞர்கள் அனேகமாய்க் கட்டிடங்கட்குள்ளாகவே இருந்துகொண்டு கற்றுக் கொள்ளுகிறார்கள். இவைகள் சிறுவர்களுடைய தேக வளர்ச்சிக்குப் பாதகமாகும். மேலும், நீந்துவது, ஓடுவது, தடம் அறிதல், உண்டி சமைத்தல், கொடிகளின் மூலமாய்ச் செய்தி அனுப்புதல், உயரம், அகலம், இவைகளை மதிப்புப் போடுதல், ஊர்ப்படம் வரைதல், இன்னும் இவைபோன்ற மற்ற காரியங்களுக்கும், கூரிய பார்வையும், சூக்ஷ்ம புத்தியும், தேகக்கட்டும் வேண்டும். ஆனால் இவைகளைப் பள்ளி மாணவர்களுக்குப் போதிப்பதற்குப் பள்ளி நேரங்களில் அவகாசம் கிடைப்பது அரிதாகிறது. மேலும் இக்காரியங்களுக்குக் கருவிகளும், விசாலமான இடமும் தேவை. இவைகள் வெட்ட வெளிகளில் அப்பியாசிக்கக் கூடுமேயன்றி, பள்ளிக் கட்டிடத்துக்குள் முடியாது ஆகையால் இவைகளைப் பள்ளிக்கூடங்களில் போதிப்பது பெரும்பாலும் அசாத்தியமான காரியம்.

வி௵ :—எவ்விதங்களில் சாரணியமானது, பள்ளிக்கூடப் பாடத்திற்கு உவற்கையாயிருக்கிறது ?

விடை :—சாரண இயக்கத்தின் கொள்கைகளைப் பற்றி, தலைச்சாரணர் (Chief Scout) வெகு விரிவாகக் கூறியிருக்கிறார். அதன் சாராம்சம் பின்வருமாறு :—

"இளைஞர்களின் நடத்தையைச் சீர்திருத்துவதற்கும், இவர்கள், தங்களுடைய வாழ்நாளில் யோக்கியர்களாயிருப்பதற்கும், விரோதத்தையும் சுயநலத்தையும் விட்டுவிட்டு நல்லெண்ணத்தையும், பிறருக்கு உதவி புரிவதற்கு வழி காட்டுவதையும், எங்கெங்கெல்லாம், பள்ளிக் கூடங்களில் போதிப்பதற்கு விட்டுவிட்டார்களோ, அங்கெங்கெல்லாம், இவைகளைப் போதிப்பதே சாரணியத்தின் முக்கிய கொள்கை."

இப்படிப்பட்டவைகளை விளையாட்டின் மூலமாய்த் தனக்குத் தானே போதித்துக் கொள்வதே, சாரணீயம் (Scouting) என்பதின் பொருள்.

"பிறர் நலம் முந்தியது, சுயநலம் பிந்தியது" என்ற கருத்தை நன்றாக ஆலோசித்த செய்கைகளினால் போதிப்பது சாரண இயக்கமே. அடிக்கடி செய்யும் இப்பேற்பட்ட நற்செய்கைகளினால், சுயநலம் கருதாது பிறருக்கு உதவி செய்யும் அவாவானது அதிகப்படுகின்றது.

மேலும், பள்ளிக் கட்டிடங்களுக்குள் அடைபட்டுக்கிடக்கும் மாணவர்கள் அதற்கு மாறாக சுயேச்சையோடு நல்ல காற்றுள்ள இடத்தில் சிறிது நேரமாவது இருக்கவேண்டியது அத்தியாவசியம். அவர்கள் அவ்வாறு இருப்பதற்கு நாம் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமல்லவா, அந்த முறையே சாரண இயக்கம்.

மற்றும், ஒருவன் அவனுடைய இளவயதில் அடையும் போதனையே அவனுடைய வாழ்நாளுக்கு ஊன்றுகோலாகும். கலாசாலைப் படிப்பினால் ஒருவன் பெரிய வித்துவானாகிவிடலாம். ஆனால் அவனுக்குப் பிற்காலத்தில் உதவியாயிருப்பது, நல்லகுணமே. படிப்பு இதற்குப் பின்னாகவே இருக்கின்றது. மேலும் எல்லோருக்கும் தலைவனாகுவதற்கும், அவசரசமயங்களில் பிறருக்கு உதவி புரிவதற்கும் உதவாது. தலைமை வகிக்கும் தன்மையும், பொறுப்புள்ள உணர்ச்சியும் அடைவதற்கு, மற்ற துறைகளில் நாம் பாண்டித்யம் அடைவதற்கு எவ்வளவு பாடுபடுகின்றோமோ அவ்வளவு பாடுபடவேண்டும். இதைத் தலைச் சாரணர் பின்வருமாறு கூறுவதிலிருந்து ஒருவாறு உணரலாம்.

"கல்வியின் நோக்கம் நடத்தையைச் சீர் திருத்தம் செய்வதே."

"நன்னடத்தை என்ற அங்கூரம் இல்லாத கல்வியானது, கெடுதலாகவே முடியும்."

"நல்ல நடத்தையானது ஒரு ஏழைப்பையனும் முன்னேற்றம் அடைவதற்கு வழியைக் காண்பிக்கிறது."

மேலும், இவ்வியக்கத்தினால் இளைஞர்கள் அடையும் நன்மைகள் பின்வருமாறு:—

(*a*) **நல்ல நடத்தை.**—இதை ஊழியத்தினால் அன்பைப் பெருக்குகின்ற சாரணச் சட்டத்தைப் பின்பற்றி ஒழுகுவதினால் அடைகின்றான். இந்தச் சட்டம், (1) உண்மை, (2) பக்தி, (3) பிறருக்கு உதவிபுரிதல், (4) சகோதர வாஞ்சை, (5) மரியாதை, (6) உயிர் விலங்குகளிடத்தில் அன்பு, (7) பணிவு, (8) முகமலர்ச்சி, (9) சிக்கனம், (10) மனம் வாக்கு காரியத்தில் பரிசுத்தமாயிருத்தல்—ஆகிய இப்பத்துக் கொள்கைகளையும் உடைத்தாயிருப்பது.

(*b*) **தேர்ச்சி.**—மேலும், ஒரு இளைஞன், கலைப் பதக்கங்களும், தேர்ச்சிச் சின்னங்களும் அடிக்கடி அடையவேண்டுமென்ற எண்ணத்தினாலும், அடிக்கடி ஏற்படுத்தும் சோதனைகளினாலும் தேர்ச்சி அடைகிறான்.

(*c*) **கலைப் பதக்கங்களும் தேர்ச்சிச் சின்னங்களும்.**:—இவை சோதனைக்கு பிறகு வெகுமதியாகக் கொடுக்கப்படுவதினால் அவைகளையடைய வேண்டுமென்ற எண்ணத்தினால் தனக்குத் தானே கற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்துத் தானே எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முயலுகிறான்.

இங்கு ஏற்படுத்தும் பரீக்ஷை கலாசாலைகளில் ஏற்படுத்தும் பரீக்ஷைக்கு நேர் மாறானது. கலாசாலைப் பரீக்ஷைகளில் ஒருவன் எவ்வளவு மார்க்கு வாங்குகிறானோ அதற்குத் தகுந்தபடி வெகுமதி கிடைக்கின்றது. ஆனால் சாரணப் பரீக்ஷையில் ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு முயர்ச்சி எடுக்கிறானோ அதற்குத் தகுந்தபடி வெகுமதி கிடைக்கின்றது. ஆதலால் சாரணப் பரீக்ஷைகளில் சாதாரணப் பையனுக்கும் கெட்டிக்காரப் பையனுக்கும் வித்தியாசமில்லாமல் ஒரேவித சாதகம்தான் கிடைக்கின்றது.

(*d*) **புத்திசாலித் தன்மை.**—தடம் அறிதலால், உற்றுநோக்கும் தன்மையும், சிறிய விஷயத்தையும் மனதில் பதிந்து வைத்துக் கொள்ளும் தன்மையும் போதிக்கப் படுவதோடல்லாமல் அவை இயற்கைக் குணமாகவே மாறிவிடுகின்றன. தடங்களையும் குறிகளையும் நுட்பமாய் ஆராய்வதால் பகுத்தறிவும், ஆலோசனையும் அதிகமாகிறது.

(*e*) **சந்தோஷம்.**—பிறருக்கு உதவி புரிவதினாலும், இளைஞர்கள் எல்லோரும் ஒழுங்காக ஒன்றுகூடி வேலை செய்வதினாலும், மற்ற தேசங்களிலுள்ள இளைஞர்களோடு கடிதப் போக்கு வைத்துக்கொண்டு அதனால் அவர்களுடைய தேசத்துப் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதினாலும், "போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து" என்னும் பெரியோரின் வாக்கியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதினாலும், நல்லெண்ணத்தையும், அன்பையும் வளர்ச்சிசெய்வதினாலும், ஒருவன் சந்தோஷமடைகிறான்.

ஆனால் இவைகளை எல்லாம் பள்ளிக்கூடத் திட்டங்களில் சேர்க்க முடியாது.

மேலும், எல்லோரும் ஒன்றுகூடிச் செய்யக் கூடிய காரியத்திலோ அல்லது விளையாட்டிலோ ஒவ்வொருவனும் தனக்குரிய பாகத்தைச் செய்து முடித்து அதனால் அக்காரியமோ அல்லது விளையாட்டோ வெற்றி பெறுவதினாலும் சந்தோஷம் அடைகிறான்.

ஒவ்வொரு இளைஞனும், இயற்கைப் பொருள்களை ஆராய்ந்து அறிந்து கொள்வதினால் எல்லாம் வல்ல இறைவனுடைய தன்மையை அறிந்து கொள்வதுமல்லாமல், இயற்கையினுடைய அதிசயத்தையும், அழகையும் கண்ணுற்றுச் சந்தோஷப்படுகிறான். இத்துடன் இந்தப் பிரமாண்டமான பூகோளத்தில் தான் ஒரு மிகவும் சிறிய பாகத்தையுடையவன் என்பதை அறிந்துகொண்டு அதனால் தன்னுடைய வாழ்நாளில் சந்துஷ்டி அடையவேண்டுமென்று அசங்கியத்தை விட்டுவிட்டு, நல்லெண்ணத்தையும், அன்பையும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்தை அடைகிறான்.

இதற்கெல்லாம் இடந்தருவது சாரண இயக்கமே.

(தொடரும்.)

(South Indian Boys' Scout.)

---

# சிறுவர்க்கான பக்கங்கள்

(திரு. V. S. நடராஜன், L.M.P.)

## சந்திரனின் சாட்சியம்

திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரபரணிக் கரையில் உள்ள ஒரு கிராமத்தில் நல்லு, மாடன் என்று இரு குடியானவர் இருந்தனர். இவர்கள் இருவருக்கும் அக்கிராமத்தில் நன்செய் நிலங்கள் இருந்தன. இருவருடைய நிலங்களும் அடுத்தடுத்து இருந்ததால் அவர்களுக்கடிக்கடி சிறு சண்டைகள் விளைந்தன.

ஒரு இரவு பூர்ணசந்திரனது குளிர்ந்த நிலவு வீசிக்கொண்டிருந்தது. ஆற்றில் ஜலம் நிறையச் சென்றது. நல்லு தன் நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக, மண்வெட்டியைத் தோளில் மாட்டிக்கொண்டு சென்றான். சிறிது நேரத்துக்குப்பின் மாடனும் தன் நிலத்துக்குச் சென்றான். நல்லுவின் நிலம் ஆற்றுக்கு அடுத்தாற்போல் இருந்தது. அதற்கு அடுத்து மாடனின் நிலம். ஆகையால் ஆற்றுத் தண்ணீர் நல்லுவின் நிலத்தின் வழியாய்த்தான் மாடனது நிலத்துக்குப் பாய வேண்டும். நல்லு தன் நிலத்தின் வழியாய் மாடனுடைய நிலத்துக்குத் தண்ணீர் விடுவதில்லை. இதனால்தான் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை உண்டாயிற்று.

நல்லு தன் நிலத்திற்கு நிறையத் தண்ணீர் பாய்ச்சினான். பிறகு வழக்கம்போல், மாடனது நிலத்துக்குத் தண்ணீர் விடவில்லை. ஆனால் மாடனுடைய நிலத்துக்குத் தண்ணீர் செல்லும் மடையை அடைத்துவிட்டான். பிறகு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தான். பின்னால் சென்ற மாடனோ, நல்லுவின் நிலத்தில் தண்ணீர் நிரம்பி யிருப்பதையும், தன் நிலத்துக்குத் தண்ணீர் வராமல் அடைக்கப்பட்டிருப்பதையும், நல்லு பாடிக்கொண்டிருப்பதையும் கண்டான். ஓசைப்படாமல் மடையைத் திறந்துவிட்டான். சிறிது நேரத்தில் அவன் நிலத்தில் தண்ணீர் நிரம்பியது. பிறகு மடையை அடைத்தான். நல்லுவின் நிலத்தில் மறுபடியும் தண்ணீர் நிரம்பியது.

பாடிக்கொண்டிருந்த நல்லு திரும்பிப் பார்த்தான். மாடனின் நிலத்திலும் தண்ணீர் நிரம்பி யிருப்பதையும், மண்வெட்டியும் கையுமாய் மாடன் நிற்பதையும் கண்டான். கடுங் கோபம் கொண்டான். உடனே மாடனை நோக்கி,

"அடே! போக்கிரிப்பயலே! உனக்கு எவ்வளவு கொழுப்பு? என் நிலத்திலிருந்த நீரை யெல்லாம், என் உத்தரவில்லாமல், உன் நிலத்துக்கு ஏண்டா பாய்ச்சிக் கொண்டாய்?

உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று கூறிக்கொண்டே, மாடனை நோக்கி ஓடினான்.

இதுகேட்ட மாடன், "அண்ணே! ஏன் கோபிக்கிறாய்? உன் நிலத்திலிருந்த ஜலத்தை என் நிலத்துக்குப் பாய்ச்சிவிட்டு, உன் நிலத்திலும் தண்ணீர் நிரப்பி விட்டேனே" என்று மிகவும் பணிவுடன் கூறினான். நல்லுவுக்கோ கோபம் பொங்கியது. தலைகால் தெரியவில்லை. மாடனைக் கண்டபடி வைதான். மாடனும் பணிவோடு பதில் கூறினான். கடைசியில் நல்லு, கையிலிருந்த மண்வெட்டியால் மாடனுடைய கழுத்தில் ஓங்கி வெட்டினான். அந்த வெட்டால் மாடனும் கீழே விழுந்து, "ஐயோ! இந்த இரவில் என்னை இவன் கொன்றுவிட்டானே. ஏ! சந்திரா! நீயே சாட்சி!" என்று கதறினான். உடனே நல்லு "ஆமாண்டா! சந்திரன் கோர்ட்டில் வந்து சாட்சி சொல்லி, என்னைத் தூக்குப் போடப் போகிறான். நீ மேலுலகத்தில் இருந்து கொண்டு பார்" என்று கூறி மண் வெட்டியால் இன்னொரு போடு போட்டான். மாடனும் இறந்தான். மாடனது தேகத்தை ஆற்று வெள்ளத்தில் எறிந்துவிட்டு, நல்லு வீடு போய்ச் சேர்ந்தான். அதன் பின் பெரிய மழை பெய்தது.

மறுநாள் மாடனது வீட்டார், அவனைக் காணவில்லையென்று பல இடங்களிலும் தேடினார்கள். போலீஸிலும் எழுதி வைத்தார்கள். மாடனைப்பற்றி ஒரு சங்கதியும் ஒருவருக்கும் தெரியவில்லை. இரவு வீட்டுக்குச்சென்று படுத்த நல்லு, ஒரு மாதம் வரை ஜுரத்தினால் படுத்த படுக்கையாய்க் கிடந்தான். பிறகு மெதுவாகத் தேறி எழுந்தான்.

இரண்டு மாதத்துக்குப்பின் மறுபடியும் பௌர்ணிமை வந்தது. நல்லுவின் குடிசையின் கூரையிலுள்ள சிறு துவாரமொன்றின் வழியாய்ச் சந்திரன் ஒளி நுழைந்தது. அவ்வொளி தரையில் விழுந்து, ஒரு வெள்ளிநாணயத்தைப் போல் மின்னியது. குடிசையில் படுத்திருந்த நல்லு, அதை எடுக்க முயன்று ஏமாந்தான். தன்னை ஏமாற்றியது யாதென அறிய எண்ணி, அண்ணாந்து நோக்கினான். பூர்ண சந்திரனைக் கண்டான். கண்டதும் அவன் மூளையில் பழைய நினைவுகள் வந்து தோன்றின. "ஆகா! அந்தப் பயல் மாடன், சந்திரனையல்லவா சாட்சி கோறினான்? சந்திரனாவது, சாட்சி சொல்லவாவது? என்ன அவனுடைய மூடத்தனம்?" என்று தன்னுள் எண்ணி, உரத்துச் சிரித்தான்.

நல்லு ஏமாந்ததையும், சிரித்ததையும், முதலிலிருந்து கவனித்து வந்த அவனுடைய மனைவி, "எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள். அதற்கு அவன் "அது ரகசியம். உன்னிடம் சொல்லக் கூடாது" என்றான். அது கேட்ட அவன் மனைவி, "என்னிடமும் சொல்லக் கூடாத ரகசியம் இருக்கிறதா? என்னிடம் மீட்டும் எப்படியாவது சொல்லியே தீரவேண்டும்" என்றாள். நல்லு எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தான். ஒன்றும் பயனில்லை. கடைசியாக அவள், "என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால், நான் உடனே பிறந்த வீட்டுக்குச் சென்று விடுகிறேன். இங்கு இருந்து என்ன பிரயோஜனம்" என்று கோபித்தாள். இதைக் கண்ட நல்லு பயந்து, தான் மாடனைக் கொலை செய்ததையும், அப்போது அவன் சந்திரனைச் சாட்சி கோறியதையும் விவரமாகக் கூறி, "அந்தப் பயல் மூடத்தனமாய்ச் சந்திரனைச் சாட்சி கோறினானே, என்று நினைத்துச் சிரித்தேன். வேறொன்றுமில்லை" என்றான். இதைக் கேட்ட அவன் மனைவியும் கோபம் தணிந்தாள்.

நான்கு மாதங்கள் விரைந்து கழிந்தன. இதன் நடுவில் வியாதியால் பலஹீனமடைந்த நல்லு, கள் குடிக்க ஆரம்பித்து, பெருங் குடியனாய் விட்டான். நிலத்தில் வரும் நெல்லை விற்று, வெறிக்கக் குடித்து, நேரஞ் சென்று வீட்டுக்குத் திரும்புவான். வீட்டில் மனைவியைக் கண்டபடி வைவான். துடைப்பத்தாலும் கழியாலும் அடிப்பான். தினந்தோறும் இப்படியே நடந்து வந்தது. அவன் குடிப்பது அதிகமாயிற்றே ஒழியக் குறைந்தபாடில்லை. இவன் செய்யும் அக்கிரமங்களை அவள் பொறுத்துக் கொண்டே வந்தாள்.

ஒரு தினம் இரவு, சில விருந்தினர் வந்து, அவன் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார்கள். அன்று நல்லு மிகவும் மிதமிஞ்சிக் குடித்துவிட்டு, வீட்டுக்கு வந்தான். அவன் மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் அவனுக்குக் கோபம் உண்டாயிற்று. குடி வெறியும் சேர்ந்தது. அவளைக்

காலால் உதைத்தான். அவள் முணுமுணுத்துக் கொண்டே எழுந்திருந்தாள். "அடி நாயே! நான் வரும் வரை காத்திருந்து சோறு போடாமல் தூங்கினதுமல்லாமல், முணுமுணுக்கிறாயா?" என்று கூறி, துடப்பத்தால் அடித்தான். அவள் அதற்கும் பொறுத்துக் கொண்டிருந்தாள். பின்னும் நல்லு அவளைத் தடியால் நையப் புடைத்தான். அவளால் பொறுக்க முடியவில்லை. ஓவெனக் கதறினாள். திண்ணையிலிருந்த விருந்தினர் எழுந்து இதைக் கவனித்தனர்.

நல்லுவோ விட்ட பாடில்லை. மேலும் மேலும் அடித்துக் கொண்டேயிருந்தான். கடைசியில் அவன் மனைவி, ஒரு மண் வெட்டியை எடுத்து அவன் முன் போட்டு, "அடே! கொலைகாரப் பாவி! ஏன் என்னைச் சித்திர வதை செய்கிறாய்? இந்தா! மாடனைக் கொன்ற இந்த மண் வெட்டியால் என்னையும் கொன்றுவிடு. என் துன்பமெல்லாம் தீரட்டும்" என்று கதறினாள்.

நடந்த சங்கதிகளை ஒன்று விடாமல் கவனித்திருந்த விருந்தாளிகளுள் ஒருவன், உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, எல்லாவற்றையும் கூறிவிட்டான். உடனே போலீஸார் நல்லுவைக் கைது செய்து, ஜெயிலில் அடைத்து விட்டார்கள். சந்திரன் நேரில் வந்து சாட்சி கூறாவிட்டாலும், சந்திரனாலேயே நல்லு மாடனைக் கொன்ற சங்கதி வெளிப்பட்டது. நாளடைவில் நல்லுவும் கொலைக் குற்றத்துக்காகத் தூக்கிலிடப்பட்டு இறந்தான்.

ஆகையால், இச்சிறு கதையினால் நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் :—

1. உண்மை என்றும் வெளிப்பட்டுவிடும்.
2. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.
3. கோபத்தால் கொலையும் ஏற்படும்.
4. குடியைக் கெடுக்கும் குடி.
5. அரசன் அன்று கொல்வான்
   தெய்வம் நின்று கொல்லும்.

# இந்திய வர்த்தமானம்

**லண்டன் சர்வகக்ஷி மஹாநாடு :**—நம்தேசத்திலிருந்து சென்ற வருஷம் நடந்த சர்வகக்ஷி மஹாநாட்டிற்கு 89 பேர்போயிருந்தார்கள். இப்போது 108 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிதாக 19 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 16 பேர் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள். மூவர் ஸமஸ்தானப் பிரதிநிதிகள். இவர்களில் ஸர். பி. கின்வாலாவும், தொழிலாளர் தலைவர் திரு வி. வி. கிரியும், ராஜாங்க சபை அங்கத்தினரான சையத் முகம்மது மெஹர்ஷவும், சையத் முகம்மது பாட்சாவும் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

மைனாரிட்டி கமிட்டியில் முன்னம் 37 பேர் இருந்தார்கள். இப்போது இக்கமிட்டிக்கு 44 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிதாகச் சேர்க்கப்பட்ட ஏழு அங்கத்தினர்களின் பெயர் வருமாறு:—ஸர். அலி இமாம், மஹாத்மா காந்தி, ஸர். முகம்மது இக்பல், பண்டித மதன மோஹன மாளவியா, ஸ்ரீமதி ஸரோஜனி தேவி, மௌல்வி ஷாபி தௌதி, இ. ஸி. பெந்தால்.

மஹாத்மா காந்தி "இரஜபுதானா" கப்பலில் ஆகஸ்டு 29-ந்தேதி லண்டனுக்குச் சென்றுவிட்டார். அவருடன் அவர் குமாரர் தேவதாஸ் காந்தி, மகாதேவ தேசாய், மீராபென், பண்டித மாளவியா, ஸரோஜனி தேவியார் சென்றனர். சம உரிமை சர்வகக்ஷி மகாநாட்டில் பூர்ண வெற்றி கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

*　　*　　*　　*

**பர்மா.**—பர்மா கலவரத்தில் சம்பந்தப்பட்ட பல கலகக்காரர்கள் பணிந்து விட்டனர். கலகத் தலைவரும் பிடிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அவசரச் சட்டத்தினால் அதிகாரிகளுக்கு விசேஷ அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

*　　*　　*　　*

சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தமிழ் மாகாண காங்கிரஸ் கட்டிடத்தை தேசபக்தரும், மாஜி காங்ரஸ் அக்கிராசனரும், சமீபத்தில் அகோலாவில் கூடிய ஹிந்து மஹா சபையின் தலைவராயிருந்தவருமான சேலம் ஸி. விஜயராகவசாரியாரால் திறந்து வைக்கப்பட்டது.

*　　*　　*　　*

**சென்னை சட்ட சபை :**—சென்னை சட்ட சபை சென்ற மாதம் சென்னையில்கூடி மூன்று தினங்கள்போல நடைபெற்றது. உத்தியோக அலுவல்களும் உத்தியோகப்பற்றற்ற அலுவல்களும் கவனிக்கப்பட்டன. கோதாவரி, கிருஷ்ணா மறு பைசல் திட்டப்படி வரி உயர்த்தப்படுவதைக் கண்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அவசரத் தீர்மானம் நிறைவேறிற்று. பர்மா இந்தியர் கஷ்டத்தில் சர்க்கார் கவனஞ் செலுத்தி, அங்குள்ள இந்திய விவசாயிகள், செட்டிமார்கள் முதலியோருக்குப் பாதுகாப்பளித்து சகல உதவி அளிக்கவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*　　*　　*　　*

**கிராம புனருத்தாரண மகாநாடு :**—விழுப்புரம் தாலுகா சொர்ணாவூரில் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி அவர்கள் தலைமையில் மகாநாடு கூடினது. பல பெரியோர்களால் அரிய சொற்பொழிவுகள் செய்யப்பட்டு, பல தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டாருக்கு அனுப்ப முடிவு செய்தனர்.

ஆந்திர தேச ஸ்தல ஸ்தாபன மஹாநாடு திருவாளர் C. V. S. நரசிம்மராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மதராஸ் கவர்ன்மெண்டு ஸ்தல ஸ்தாபன நிர்வாக உத்தியோகஸ்தர் திருவாளர் N. கோபாலஸ்வாமி அய்யங்கார் மஹாநாட்டைத் திறந்து வைத்தார்.

*　　*　　*　　*

**புதிய தேசிய கொடி :**—"தேசிய கொடி விஷயமாகக் அடியிற் கண்ட மாறுதலை அகில இந்தியா காங்கிரஸ் சபை ஒப்புக்கொண்டிருக்கிறது. முன்போலவே கொடியில் மூன்று

வர்ணங்களிருக்கவேண்டும். அவை ஒன்றின் கீழொன்றாக இருக்கவேண்டும். முதலில் குங்கும வர்ணமும், அதற்கடுத்து வெள்ளை வர்ணமும் அதன்கீழ் பச்சை வர்ணமும் இருக்க வேண்டும். நடுவில் இருக்கும் வெள்ளை வர்ணத்தில் நல்ல நீல நிறத்தில் கைராட்டின் உருவமிருக்கவேண்டும். இவ் வர்ணங்கள் எந்தவிதத்திலும் ஜாதிகளைக் குறிக்கா. குங்கும வர்ணம் தைரியத்தையும் தியாகத்தையும், வெள்ளைநிறம் சமாதானத் தையும் உண்மையையும், பச்சைவர்ணம் நம்பிக்கையையும் ஆண்மையையும் காட்டும். கைராட்டினம் பாமர ஜனங்களின் நம்பிக் கையை உணர்த்தும்.''

* * * *

**கும்பகோணம் கல்லூரி** :—சென்னைக் கல்வி இலாகா அதிகாரி சிக்கனக் கமிட்டிக்கு கல்வி விஷயத்தில் செலவழிக்கப்படும் தொகையைக் குறைக்க சிலயோசனை அனுப்பி யிருக்கிறார். அதில் முக்கியமாக கும்ப கோணம், இராஜமஹேந்திரபுரம், தலைச்சேரி இராஜாங்கக் கல்லூரிகளை எடுத்துவிடும்படி யோசனை கூறி இருக்கிறார். இதில் கும்ப கோணம் கல்லூரி மிகவும் பிரசித்திபெற்ற கல்லூரியாகும். தென்னிந்தியாவின் கேம் பிரிட்ஜ் என்று கூறுவார்கள். இதில் படித் தவர்களில் பலர் இந்தியாவிலேயே கௌ ரவமான பதவிகளை வகித்து வருகிறார்கள். மேலும் தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளில் பழைமையான கல்லூரியாகும். அண்ணமலை சர்வகலாசாலை பக்கத்தில் இருப்பதால் இந்தக் கல்லூரி இருப்பது அவ்வளவு அவசியமில்லை என்று சொல்லக்கூடும். ஆனால் அது சரியல்ல. ஆதலால் சிக்கனக் கமிட்டியார் தீர யோஜித்து முடிவு செய்வார்கள் என்று நம்புகிறோம். அப் படியே சிக்கனக் கமிட்டியார் எடுத்துவிடத் தீர்மானித்தால், தஞ்சாவூர் ஜில்லா மிராசு தார்கள் அதிலும் கும்பகோணத்திலுள்ளவர் கள், தஞ்சை ஜில்லா ஸ்தல ஸ்தாபன சபை, ஸ்தல சத்திரம் நிதி, ரயில்வே செஸ் நிதியைக் கொண்டு கல்லூரியை நடத்த முன்வருவார்க ளென்று நம்புகிறோம்.

* * * *

**பூரி காங்கிரஸ்** :—இனி நடக்கும் பூரி (ஜகந் நாதம்—ஒரிஸ்ஸா) காங்கிரஸுக்கு வரவேற்புக் கமிட்டித்தலைவராக திரு. நீலகண்டதாஸும், காரியதரிசியாக திரு. கோபால பந்து சௌத்ரீ யும், பொக்கிரஷதாராக திரு. ஜெகந்நாத மிஸ்ராவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்

* * * *

**இங்கிலாந்தில் புதிய மந்திரி சபை** :—சிக்கன விஷயமாக பழைய தொழிற்கட்சி மந்திரிசபை யில் அபிப்பிராய பேத மேற்பட்டு மந்திரிசபை கலைந்து விட்டது. இப்போது மூன்று கக்ஷி யும் கூடிய தேசிய மந்திரி சபை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதிலும் திரு. மாக்டனால்டு பிரதம மந்திரி. இந்திய காரியதரிசி ஸர் ஸாமியல் ஹோர்.

* * * *

தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்றதும் தசாவதாரம், ஆண்டாள் கல்யாணம், பகவத் கீதை முதலிய நாடகங்களை நடித்துவரும் கன்னையா கம்பெனியின் ஸ்தாபகன் விண்ணு லகம் அடைந்தனர். இவர் பல தர்மங்களைச் செய்திருக்கிறார்.

* * * *

மைசூர் சர்வகலாசாலை ஐக்கியச் சங்கத்தில் பண்டிட் மோதிலால் நேருவின் படத்தை திரு. ஜெ. எம். குமரப்பா திறந்துவைத்தார்.

THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.